தேவர்களும்—நிடதங்காக்கும்-நிடததேயத்தைஆளுகின்ற —ஒரு கொழுவனையதோளான்-உயர்ந்தஎழுத்தணையாத்த தோளையுடைய நளமகாராஜனது—உருவுகொண்டி-வடிவைக்கொண்டு — அடைந்தாரொன்னில்-வந்தாரோயாஎன் —ஆங்கவன்-அவ்வாசனுடைய —வனப்பு-அழகு—நம்மால்-நம்மால்—அறையலாம்- சொல்லலாம்—தகைமைத்தின்று-தன்மைபுடையதன்று—(எ-று) எ-அசை (கருத்து) தேவர்கள்நளனழகைக் கொண்டமையால் நளனழகைச்சொல்லஎம்மாலாகுமோவென்றார் புராணிகர் (எ-ம்). (கூச)

வரிநெடுங்கண்ணிகொம்மைவருமுலைதிரோப்பவேண்டித்...*
தொடிசுழலரசர்வெள்ளந்தொக்கொருங்கிருந்ததோற்ற ...*
மூடல்சினத்திகிரிமாயனுந்தியங்*கமலம்பூத்த..... ... .. *
கடவுடன்படைப்பின்விக்கங்காட்டுதல்போன்றதன்றே ...*

(இ-ள்) வரி-மாவடிவையொத்த—நெடுங்கண்ணி - நெடியகண்ணையுடையதமயந்தியினது—கொம்மை-இளமையுடைய — வருவளரப்பெற்ற—முலை-ஸ்தனங்களில்--திரோப்ப-மூட --வேண்டி-விரும்பி---தொடி-கட்டப்பட்ட---கழல்- வீரக்கழலையுடைய--அரசர்வெள்ளம்-அரசர்கூட்டங்கள்--தொக்கு - கூடி--ஒருங்கிருந்ததோற்றம்-ஒருசேரவிருந்ததோற்றமானது— உடல்-பொருகின்ற--கினம்-கோபத்தையுடைய---திகிரி - சக்கிரப்படையையேந்திய—மாயன்-நாராணனுடைய---உந்தியங்கமலம்பூத்த- நாபிக்கமலமானதுதத்த--கடவுள் பிரமதேவன்--தன்படைப்பின்விக்கம் -தலையுருட்டியினுடையவிரிலை---காட்டுதல் - காண்பித்தால் (அலது)---போன்றது-ஒத்திருந்தது--(எ-று) * சொல்லாற்றெரிவினைபொருளாற்றெரிவினை,என்றிருதிறனேதன்பிறபொதுவினை,இவ்விதியால்கமலம்பூத்தகடவுள் பொருளாற்றெரிவினை.] (கருத்து) திரிலோகத்திலுமுள்ள பிரமசிருட்டியிலடங்கிய அனைவரும் வந்திருந்தார்கள் அதனால் பிரமசிருட்டிபோலிருந்தது என்பதாம். (கூசி)

தனியுருத்தாங்கியீசன்றழல்விழிப்பட்டோமென்று... ..*
பனிமலர்ப்பகழிமாரன்பலவுருவெடுத்தல்போலக்... .....*
கனிபடுகிளவியாடன்கதிர்ளமூலையிற்றோய்வான்... ... ...*
குனிசிலைத்தடக்கைவேந்தகொருவழிக்குழுமினாரே.....*

(இ-ள்) பனி-குளிர்ச்சிபொருந்திய--மலர்ப்பகழி-பூக்களாலேயுடைய--மாரன்-மன்மதனானவன்-- தனியுருத்தாங்கி -ஒருவடிவங்கொண்டு--ஈசன்-பரமசிவனுடைய -- தழல்விழி-தெருப்புக்கண்ணினால்--பட்டோமென்று-இறந்தோமென்று -- பலவுருவெடுத்தல்போல-பலவடிவங்கொண்டதுபோல--கனிபடுகிளவியாடன் - தி

மயந்தியினது--கதிர் - காந்தியுடைய-இளமுலையில் - இளைய பொருந்தியஸ்தனத்தில்--தோய்வான்-கலக்கும்பொருட்டு --- குளிகில-வளர்ந்தவில்லையேந்திய--தடக்கை- விசாலம்பொருந்திய கையையுடைய--வேந்தர்- அரசரானவர்கள்—ஒருவழி - ஓரிடத்தில்---குழுமினர்-கூடினர்கள்---(எ-று) ஏகாரம் ஈற்றசைக்கண் வந்தது (கருத்து) அரசர்கள் மண்டபமனே நிகர்த்திருந்தார்கள் என்பதாம்.

வேனிலானுபர்த்தவெற்றிக்கயலியும்வெருட்டிநீண்ட..... *
மானினமருளுநோக்கின்மடவரல்வதுவைகாண்பான்..... *
பானிறவன்னமூர்ந்தபழமறைக்கிழவனேமி ..... *
நீனிறச்செங்கண்மாயனெடுவிசும்படைந்தான்மன்னோ... *

(இ-ள்) வேனிலான்-மன்மதனனவன்---உயர்த்த - பிடித்த---வெற்றி - வெற்றிபொருந்திய—கயலியும்-கொடியாகியமீனையும்--வெருட்டி-அச்சமுறுத்தி---நீண்ட-நீண்ட---மானினம் - மான்கூட்டங்கள்---மருளும்-மயங்குகின்ற---நோக்கின்-பார்வையையுடைய---மடவரல்-தமயந்தியினது---வதுவை - விவாகத்தை---காண்பான்-காணும்பொருட்டு--பால்-வெள்ளிய---நிறம்- வண்ணத்தையுடைய---அன்னமூர்ந்த-அன்னப்பறவையைச்செலுத்திய-- பழமறைக்கிழவனேமிப்-பிரமதேவனேமியும்---நீனிற - கரியவண்ணத்தையும்---செங்கண்-செய்யகண்ணையுமுடைய---மாயன்-நாரணனனவன்---நெடுவிசும்பு-நெடியஆகாயத்தின்கண்---அடைந்தான்- வந்தான்--(எ-று)(கருத்து) பிரமனும் விஷ்ணுவுந் தமயந்தி கலியாணத்திற் குவந்தார்கள் என்பதாம். (கூஎ)

அவ்வழிநிணம்வாய்ப்பில்கியழலுமிழ்ந்தரத்தந்தோயு..... *
நெய்வழிபரிதிவைவேல்விசர்ப்பர்கோனீலவண்ணக்.....* *
செவ்வழியனையதீஞ்சொற்றெரிவையர்தம்மைநோக்கி.....* *
மைவழிகரியகூந்தன்மங்கையைக்கொணர்மினென்றான்...*

(இ-ள்) அவ்வழி-அப்பொழுது---நிணம்-நிணத்தை---வாய்ப்பில்-வாயாற்கொப்புளித்து---அழலுமிழ்ந்து-நெருப்பைக்கக்கி---அரத்தந்தோயும்-உதிரம்படிகின்ற--நெய்வழி-நெய்யொழுகுகின்ற---பரிதி-சூரியனையொத்த---வைவேல்- கூரியவேலையுடைய--விதர்ப்பர்கோன்-விதராஜனனவன்--நீலம் - கருங்குவளைமலர்போன்ற-- உண்கண்-மையுண்டகண்களையுடைய---செவ்வழியனைய-செவ்வழிப்பண்ணையொத்த--தீஞ்சொல் - மதுரம்பொருந்திய சொல்லையுடைய---தெரிவையர்தம்மைநோக்கி-மாதரைப்பார்த்து --- மைவழி-மையிச்சாந்தொழுகிய--கரியகூந்தல்-கரியகுழலையுடைய -- மங்கையை-தமயந்தியை--கொணர்மினென்றான் அழைத்துக்கொண

டுவாருங்களென்றான்---(எ-று) நிணம்-கொழுப்பு-நெய்- எண்ணெய்-(கருத்து) வீரராஜன்தமதுநிலையைக்கொண்டிவரும்படிப் பெண்களுக்குக் கட்டளை பிட்டான் என்பதாம். (கூஅ)

உரையுணர்கேட்டலோடுமோரிடத்தடங்கணல்லா ..... *
சொரிபரந்திமைக்கும்பைம்பூணின்னரிச்சிலம்பொடேங்கப் *
புரிகுழன்மாலைசோரப்பூசல்வண்டார்த்துப்பொங்க..... *
விரைவினோடிப்பைம்பொன்விளங்கிழைகோயில்புக்கார் *

(இ-ள்) உரையுணர்-அச்சொல்லை—கேட்டலோடும்-கேட்டவளவில்—ஓடரி-செவ்வரிபரந்த—தடங்கணல்லார்- விசாலம்பொருந்திய கண்ணையுடையமாதர்கள்—சொரிபரந்து - ஒளிபரவி—இமைக்கும்-விளங்குகின்ற—பைம்பூண் - பசிய ஆபரணங்கள்—இன்னரிச்சிலம்பொடு - இனியகிண்கிணியையுடையபாதரத்தோடு—ஏங்க-ஒலிக்க—புரி-கட்டிப்பட்ட—குழல்- கூந்தலிலிருக்கின்ற—மாலைசோர-மலர்மாலைசோர்வையடைய—பூசல்- மிகுந்தஒலியையுடைய—வண்டு - வண்டுகள்—ஆர்த்து - ஒலித்து—பொங்க-எழும்ப—விரைவினர்-விரைவுகொண்டவராகி—ஏகி-போய்—பைம்பொன்- பசியபொன்னாற்செய்த—விளங்கிழை - ஒளிசெய்கின்றஆபரணத்தையுடையகமயந்தியின்னது—கோயில்-கனமாடத்தில்—புக்கார்-புகுந்தார்கள்—(எ-று) கருத்து) மாதர்கள் தமயந்திமாளிகையிற்சென்றார்கள் என்பதாம். (கூக)

வங்குவிற்றடக்கைவேந்தன்வதுவைமண்டபத்தின்வல்லே *
கோங்கிளமுலையிஞ்ஞேக்கொணர்கவென்றுரைத்தானென்னத் *
தீங்கதிர்க்குழவித்திங்கள்சிறைகிடந்தனையநெற்றிப்..... *
பூங்கொடிதன்னையீன்றபொற்றொடிக்குரைத்தாரன்றே... *

(இ-ள்) வாங்கு-வளைக்கப்பெற்ற—வில்- வில்லையுடைய—தடங்கை-விசாலம்பொருந்தியகையையுடைய—வேந்தன்-பீமராஜனவன்---வதுவைமண்டபத்தின்-விவாகமண்டபத்தில்--வல்லே விரைவிலே--கோங்கிளமுலையிஞ்ஞே- தமயந்தியை—கொணர்கவென்று-அழைத்துக்கொண்டுவாருங்களென்று--உரைத்தானென்ன-சொன்னானென்று—தீங்கதிர்-மதுரம்பொருந்தியகிரணங்களையுடைய—குழவித்திங்கள்-இளமபிறையானது--சிறைகிடந்தனைய - சிறையிருந்தாலையொத்த—நெற்றி - நெற்றியையுடைய—பூங்கொடிதன்னையீன்ற-தமயந்திபெற்ற--பொற்றொடிக்கு- நற்குயாகிய சாருகாசினியென்னுங்காஞ்சனமாலைக்கு—உரைத்தார்-சொல்லினார்—(எ-று) கருத்து) மாதர்கள் வீமன்மனைவியாகிய சாருகாசினியிடத்து வீமன்சொன்னதைச்சொன்னார்கள் என்பதாம். ☞ சாருகாசினி காஞ்சனமாலை இவ்விருபெயரும் வீமன்மனைவிக்குண்டு. (ஈ)

(சக)

களிமகிழ்வெய்தியாங்கட்கவுத்துவண்டிமிரும்பைத்தார்த் *
தளிமதுக்கோதைதன்னைத்துவரிஞும்விரையிலுறு..... *
மொளிமணிகழீஇயதொப்பவுப்பொடிந்நிமிர்ந்துபொங்குத்
தெளிதினைசுருட்டுங்கைத்தீம்புனலாட்டினரே..... *

(இ-ள்) களிமகிழ்வெய்தி-மிகுந்தமகிழ்ச்சியையடைந்து—ஆங்கண்-அவ்விடத்தில்--கவுத்து-ஆரவாரித்து---வண்டிமிரும்-வண்டுகளொலிக்கின்ற--பைத்தார்-பசியமலர்மாலையையணிந்த--தளிமது-தேன்றுளிக்கின்ற---கோதைதன்னை-கூந்தலையுடைய மையத்தினை--துவரிஞும்-பத்துத்துவராலும்-- விரையிலுறும்-இருவகை வாசனைத்திரவியத்தாலும்--- ஒளி-ஒளியையுடைய---மணிகழீஇய தொப்ப-மணியையொப்பமிட்டதையொப்ப--உவப்பொடும்-மகிழ்ச்சியுடன்---நிமிர்ந்து-பூரி---பொங்கும்-பொங்குகின்ற---தெளிதினை-தெளிந்த அலகினை---சுருட்டும்-மடக்குகின்ற---கங்கை-கங்காநதியிலிருந்துகொண்டுவந்த---தீம்புனல்-இனியநீரைக்கொண்டு—(மாதர்கள்)ஆட்டினர்-மூழுகப்பண்ணினர்கள்—(எ-று)எ-அசை (கருத்து) சுயம்வரத்திற்கு நீராட்டினர்கள் என்பதாம். (நக)

புரிகுழல்புல*வாசப்பூம்புகையூட்டிவிண்டு.....*
மூருகுயிர்த்தினவண்டார்க்குமுல்லையஞ்சூட்டுவேய்ந்து... *
வருமுலைமுகட்டிற்றெய்வமலையச்செஞ்சாந்துபூசி..... *
யெரிமணிக்கலாபம்விகசியிழைபலதிருத்தினரே..... *

(இ-ள்) புரி-கட்டப்பட்ட--குழல்-கூந்தலானது---பல-ரம்-வாட--வாசப்பூம்புகை-வாசப்புகையை--ஊட்டி-ஊட்டுவித்து---விண்டு-விரிந்து---முருகுயிர்த்து-தேனைத்தந்து--இனவண்டு-வண்டுக்கூட்டங்கள்---ஆர்க்கும்-ஒலிக்கப்பெற்ற---முல்லையஞ்சூட்டு-முல்லைமாலையை--வேய்ந்து-சூடி---வருமுலைமுகட்டில்-வளர்கின்ற ஸ்தனங்களினுச்சியில்—தெய்வ-தெய்வத்தன்மையுள்ள— மலையம்-பொதியமலையிற்றோன்றிய---செஞ்சாந்து-செந்நிறமுள்ள சந்தனக்குழம்பை--பூசி-தடவி---எரிமணி-ஒளியையுடைய மணிகளணிந்த--கலாபம்-கலாபத்தை---வீக்கி-தரித்து---இழைபல-இன்னும்அனேகஆபரணங்களை--திருத்தினர்-அணிந்தார்கள்—(எ-று) ஏகாரம்-ஈற்றசை,*தருக்கசங்கிரகம்,ஐடு-சூ, நாற்றங்கவர்வதுநரசிறனினது-மூக்கெனப்பெயரியத்தனபொறியென்ப-இவ்விதியால் வாசநாசிவிடயம்.(கருத்து) சுயம்வரத்தி கூந்தலுக்கு அகிற்புகைஊட்டி மாலையூட்டி கொங்கைகளிற் சந்தனம்பூசி மேகலாபரணங்கட்டிப் பலவாபரணங்களைத்தரித்தார்கள் என்பதாம். (நஉ)

வேற்றருக்கொண்டுமாதின்விளங்குவாள்முகத்திற்சேர்த்த *
கூற்றினைத்தடங்கணெல்லைவஞ்சனங்குலவத்தீட்டிக்..... *
கீற்றிளத்திங்களன்றுகிளரொளிதுதலேயென்று.....* *
தோற்றவர்போலச்செய்யதிலகமுமெழுதினரே..... *

(இ-ள்) வேற்றருக்கொண்டு-வேற்றுவடிவங்கொண்டு—மாதின்-தமயந்தியினது—விளங்கு-பிரகாசிக்கின்ற—வாள்- ஒருபொருத்திய-முகத்திற்சேர்த்த-முகத்திலடைத்த--கூற்றினை - யமனை தடங்கணென்ன-விசாலம்பொருந்திய கண்களென்று—அஞ்சனம்- மையை—குலவத்தீட்டி-விளங்கவெழுதி—கீற்று-கிற்றுஇய-- இளந்திங்களன்று-இளம்பிறையன்று—கிளரொளி-பிரகாசிக்கின்ற ஒளியையுடைய—நுதலேயென்று-நெற்றியேயென்று—தோற்றவர்போல-தெளிவிப்பாளைப்போல—செய்ய-சிவந்த—திலகமும் - திலகப்பொட்டும்—எழுதினர்-எழுதினார்கள்—(எ-று) எ-முன்னைய நுதற்றம்-பின்னைய நுற்றலை.(கருத்து) தமயந்திகண்ணிற்குமையும்நெற்றிக்குத்திலகமும்இட்டார்கள் என்பதாம். (கூஉ)

வணங்கிடையிறுவதோராவனமுலைகவர்ந்துகொண்ட, சுணங்
கணியாகமுற்றுஞ்சுந்தரச்சுண்ணமாட்டிக், கணங்குழைமுக
த்துச்செவ்வாய்க்கன்னன்மென்றனையதீஞ்சொ, * லணங்கி
னுக்கணிசெய்வார்போலணியினுக்கழகுசெய்தார்..... *

(இ-ள்) வணங்கு-வளைந்த—இடை- இடையான தை—இறுவது-ஒடிவதை—ஓரா-எண்ணாது—வனமுலை-அழகியமுலைகளானவை--கவர்ந்துகொண்ட-கிரிந்துகொண்ட—சுணங்கு - தேமலையுடைய--அணி-அழகிய—ஆகமுற்றும் - மார்புமுழுவதும்—சுந்தரச்சுண்ணமாட்டி- அழகியபொற்றூளைத்தூவி—கணங்குழைமுகத்து-கூட்டமாகிய மணிகள்பதித்த குழையையணிந்த முகத்தையும்—செவ்வாய்-செவ்வாயையும்--கன்னன்மென்றனைய-கரும்பைமென்றலையொத்த—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுமுடைய—அணங்கினுக்கு- தமயந்திக்கு — அணிசெய்வார்போல்-அழகுசெய்பவர்போல்—அணியினுக்கு- ஆபரணங்களுக்கு—அழகுசெய்தார்-அழகைச்செய்தார்கள்---(எ-று) குவலயாதந்தம்- உறுப்பியல்-அருந்திறலணிதல்வாகனமாட்டகணவன்றோற்றந்தந்தைதாய்க்கினோ,செல்வமெனுமிவ்வுபெண்பாற்கோட்பொருள்- இவ்விதியால் அழகுசெய்தல் பெண்பாற்கோட்பொருள். (கருத்து) தமயந்தி அவயவங்களுக்குஆபரணமணிந்தார்கள், அணியாவிடினும் அவளியற்கையழகேபோதுமென்க. (கூஅ)

அணிநீர்வளக்கமேந்திலையவிரதறிமுத்தந்.....*
துயல்வருமுலையினூர்ந்தெலகுலத்தெய்வம்போற்றி.....*

முயல்றுமுழுவெண்டிங்கண்முகத்துவெண்முத்தமூரன்.... *
மயிலியற்றிருவுலாவலஞ்செய்துகாப்புமிட்டார்..... *

(இ-ள்) அயினிநீர்விளக்கம்-ஆலாத்தியை—ஏந்தி-எதிரேயேற்றி—ஐயலி-ஆலநீழா—சிறறி-வீசி—முத்தந்துயல்வரும்-முத்துவட மசைகின்ற—மூலையினுர்-ஸ்தானங்களையுடையமாதர்கள்—தம்-தம்முடைய—கொல்குலத்தெய்வம்போற்றி தென்றுதொட்டுவணங்குகின்றவெய்வுத்தலைத்துதித்து—முயல்றல்-முயற்கறைநீங்கிய—முழுவெண்டிங்கள்-வெள்ளியபூரணசந்திரனையொத்த—முகத்து-முகத்திடத்தில்—வெண்முத்தமூரல்-வெள்ளியமுத்தையொத்தபற்களையும்—மயிலியல்-மயில்போன்ற சாயலையுமுடைய—திருவலூர்-தமயந்தியை--வலஞ்செய்து-வலமாகச்சுற்றி--காப்புமிட்டார் திருநோன்புசரித்தார்கள்—(எ-று) (கருத்து) மாதர்கள் தமயந்திக்கு ஆலஞ்சுற்றித்திருநோற்றுக்காப்பணித்தார்கள் என்பதாம். (நாடு)

பந்தொடுகழங்கும்பொன்னம்பாவையுங்கிளியும்டழுஞ்...*
சிந்துரத்திலகநெற்றித்தெரிவையருடன்கொண்டேக..... *
விந்திரகுமரனல்லனெழின்மணியகலப்பூட்டக ..... *
கொற்றவிழலங்கன்மாலைகொண்டனர்மருங்குசெல்ல..... *

(இ-ள்) பந்தொடு-பந்தையும்—கழங்கும்- அம்மனையையும்—பொன்னம்பாவையும்-சொர்னபதுமைகளையும்--கிளியும்- கிளிப்பிள்ளைகளையும்--யாழும்-யாழையும்- சிந்துரத்திலகநெற்றி- சிந்துரப்பொட்டணிந்த நெற்றியையுடைய---தெரிவையர்-மங்கையர்கள்—உடன்கொண்டேக-உடன்கொண்டுசெல்ல-- இந்திரகுமரனன்னன்-நளமகாராஜனுடைய--எழில்-அழகிய, மணி இரத்நாபரணம் பூண்ட--அகலம் மார்பினிடத்தில்--பூட்ட - தரிக்க---கொற்றவிழ்-கொத்துவிரிகின்ற--அலங்கன்மாலை-மலர்மாலையை--கொண்டனர்-(ஏற்றிக்) கொண்டவர்கள்--மருங்குசெல்ல- அருகேவர (எ-று) ஒடு-எண்ணெஞ்சு. (கருத்து) பெண்கள்பந்தும் அம்மனையும் பொற்பாவைகளையும் கிளிகளையும்வீணைகளையும்மலர்மாலைகளையும்கொண்டு பக்கலில்வர,எ-ம். (இ) இதுமுதல்நான்குபாடலுங்குளகம். (நாசு)

விரியிருள்சீக்குங்கற்றைவெண்ணிறக்கவரிவீச..... *
வெரிமணியடப்பைதாங்கியின்னகைமகளிர்போக..... *
வரிசிலைதூணியொள்வாள்கேடகம்வளைக்கைப்பற்றிப்.....*
புரிநரம்பிரக்குநீங்சொற்பொன்னனூர்முன்னரேக..... *

(இ-ள்) விரியிருள் - விரிந்தவிருளை—சீக்கும்-ஓட்டுகின்ற—கற்றை-மயிர்த்தொகுதியாகிய—வெண்ணிறக்கவரி-வெண்ணிறத்தையுடையசாமரைகளை,—வீச- (மாதர்களிருபாலும், வீசிவர—வரி-ஓ

வீசிடுகின்ற—மணி - மணிகள்பதித்த—அடப்பைதாங்கி- அடப்பையைச்சுமந்து—இன்னகை- இனியநகையையுடைய—மகளிர்-மாதர்கள், போத-செல்லுவரிசில-நெடியவில்லியும்—தூணி - அம்புக்கூட்டையும்—ஒள்வாள்- ஒளியையுடையவாளையும்—கேடகம்-கேடகத்தையும்—வலைக்கை-வலையலியணிந்தகையில்—பற்றி-எடுத்துக்கொண்டு—புரிநரம்பு-(யாழிற்கட்டிய) நரம்புகள்—இரங்கு-வருந்தும்படியாகிய—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுடைய--பொன்னனார்- மங்கைமார்கள்—முன்னரோக - முன்னேசெல்ல—(எ-று)

(கருத்து) சிலபெண்கள்சாமரைவீசவும்,சிலபெண்கள்அடைப்பம்பையேந்திவரவும்,வில்லியும்அம்புக்கூட்டையும் கேடகத்தையுமகையிற்றாங்கிச் சிலபெண்கள்முன்செல்லவும்,ஏ-ம். (ஈஎ)

தொல்குலமரபிற்றோன்றிச்சூழ்புலநெறியிற்காதித்துக்..... *
கல்வியின்முறைகைபோயவிருத்தர்கஞ்சுகத்தின்மெய்யர்...*
வில்லுமிழ்மணியிற்செய்தவேத்திரக்கரத்தர்சென்றிர்..... *
நில்லுமினில்லினென்னுநீக்கினர்தொடர்ந்துசெல்ல . ... *

(இ-ள்) தொல்குலமரபிற்றோன்றி- தொன்றுதொட்டுவருகின்றநல்லமரபிற்பிறந்து—சூழ்புலம்-ஒன்றைப்பற்றுகின்றபுலனைந்தையும்—நெறிபிற்காத்து புறம்போகவொட்டாமலடக்கி—கல்வியின்முறை கலவியின்வழியில்—கைபோய- வல்லவராகிய—விருத்தர்-விருத்தரும்—கஞ்சுகத்தின்மெய்யர்-கவசம்பூண்டதேகத்தையுடையவரும்— வில்லுமிழ்-ஒளியைக்கொப்புளிக்கின்ற—மணிபிற்செய்த-மணியினாற்செய்த—வேத்திரக்கரத்தர்- பிரம்பைக்கையிலுடையவரும்—(ஆகியசேவகர்கள்)வேந்தீர்-அரசர்களே—நில்லுமினில்லினென்னு நில்லுங்கள் நிலுங்களென்று—நீக்கினர்- அவரைவிலக்கினராகி—தொடர்ந்துசெல்ல - தொடர்ந்துடன்செல்ல—(எ-று.)

(கருத்து)கல்வியில்வல்ல நற்குலவிருத்தசேவகர்கள் அரசர்களே நில்லுங்களென்று பிரம்பால்விலக்கி உடன்செல்லவும்,ஏ-ம். (ஈஅ)

பாயிருண்மேயும்பைம்பொன்னிலத்திடைப் பராரைச்சாத்தித்தேம்பையின் மெழுகிநுண்டூசுடைத்துமேற்றேங்கொள்வாசித், தாய்மலரனிச்சப்பேதுபரப்பியவணிகொள்வீதி, வேயுறழ்தடிகயதோளி * மெல்லடிபெயர்த்திட்டாளே.....*

(இ-ள்) பாயிருள்-பரவியவிருளை—மேயும்-மேய்கின்ற—பைம்பொன்னிலத்திடை-பசியபொன்போன்றபூமியிலே—பராரை-பரியஅடியையுடைய—சாத்தம்- சந்தனமரத்திற்கொண்டகட்டையாற்சேர்த்த—தேம்பையின்-குழம்பினால்—மெழுகி- மெழுகி—நுண்டூசு-மெல்லியவஸ்திரத்தை—உடைத்து-பரப்பி—மேல்-மேலே--தே

ங்கொள்-தேனைக்கொண்ட—வாசத்து-வாசனையோடுகூடிய — ஆ
ய்-ஆய்ந்தெடுக்கப்பட்ட—மலர்-விரிந்த —அணிச்சப்போது-அணி
ச்சமலரை—பரப்பிய-பரப்பியிருக்கின்ற—அணிகொள்- அழகை
க்கொண்ட—வீதி-வீதியிலே— வேயுறழ்-மூங்கிலையொத்த—பசிய
தோளி-பசியதோள்களையுடைய தமயந்தியானவள் — மெல்லடி-
மெல்லியபாதத்தை—பெயர்த்திட்டாள் - தூக்கிவைத்துநடந்தாள்
—(எ-று) எ-ற்றனைக்கண்வந்தது.) [* இலக்கணக்கொத்து.இ
துவிதியை தமயந்தியெனப்படாதிலபேர், இவ்விதியால் தோளிமெல்
லடியெனப்பெயரடுக்கியும் விளையடுக்கியும் வருதல்வரம் பில்லை.]
(கருத்து) சந்தனத்தால்மெழுகி மெல்லியமலர்விரித்தமலர்பரப்பி
யவீதியில்தமயந்திநடந்தாள் என்பதாம். (ரசு)

கலத்தொடுபழகுஞ்செம்பொற்கதிர்முலைக்களிதல்யாணை ...*
யுலப்பருமதத்தகாணினுயிர்குடித்தன்றிநில்லா..... ...*
நிலத்தலைகாக்கும்வேந்திர்நீங்குகநீங்குகென்னு..... ... ..*
வலத்தகமூட்டுஞ்செம்பொனடிச்சிலம்பரற்றச்சென்றாள் *

(இ-ள்) கலத்தொடு-ஆபரணத்தோடு—பழகும்-பழகுகின்ற—
செம்பொன்-செம்பொற்பிரகாசம்பொருந்திய—கதிர்-கிரணமி
ருந்த—முலை-ஸ்தனங்களாகிய—களி-களிப்பையுடைய—நல்யாணை
நல்லயானைகளானவை -உலப்பரும்-கெடுதற்கரிய--மதத்த-மதத்
தையுடையன—காணில்-நாம்மைக்கண்டால் — உயிர்குடித்தன்றி-
உயிரைக்குடித்தாலல்லாமல்—நில்லா-நிற்றலிலப்பெறமாட்டா, ஆ
தலால்)-நிலத்தலை-பூமியினிடத்தை—காக்கும்-புரக்கின்ற— வேந்தி
ர்-அரசர்கள் —நீங்குக நீங்குகென்னு-நீங்கக்கடவீர் நீங்கக்க வீ
ன்று—அலத்தகமூட்டும்-செம்பஞ்சுக்குழம்பூட்டிய— செம்பொ
ன்-சிவந்தபொன்னுறச்செய்த—அடி - பாதத்திலிருக்கின்ற—சில
பு-சிலம்புகள்—அரற்ற-சத்திக்க—சென்றாள்- போனாள் —(எ-று)
(கருத்து) தமயந்திமுலைகளாகியயானைகள்கண்டால் அரசர்களே
நுங்களைக்கொல்லும் நீங்கிப்போங்களென்று சொல்லுவது போலச்
சிலம்புசத்திக்கச்சென்றாள் என்பதாம். (ரய)

வரிவளைக்குலமும்வள்வார்மங்கலமுரசுங்கன்னற், பொருசிலை
மதனன்வின்னுண்புடைப்பொடும்பொங்கியார்ப்ப, விரிதிரை
ப்பரவையீன்றவிளங்கிழையனையதங்கை, திருமணியிழைக்கு
ஞ்செம்பொன்மண்டபஞ்சென்றுசேர்ந்தாள்.....*

(இ-ள்) வரி- இரேகைகளையுடைய—வளைக்குலமும்-சங்குக்கூட்
டமும்—வள்வார்-இறுக்கியவாரையுடைய—மங்கலமுரசம்- விவாக
பேரிகையும்—கன்னற்பொருசிலை- பொருகின்றகரும்பம்வில்லைத்

திய—மதனன்-மன்மதனுடைய—வின்னுண்புடைப்பொறிம்-வில் வினதுநாணத்தொனியோடும்—பொங்கி-மிகுந்து--ஆர்ப்ப-சத்திக்க--விரி-விரிந்த--திரை-அலைகளையுடைய--பரவையின்ற-பாற்கடல் பெற்ற--வீளக்கிழையனைய-திருமாலையொத்த--நங்கை -தமயந்தி திருமணி-உயர்ந்தஇரத்நங்கள்பதித்து--இமைக்கும்-பிரகாசிக்கின்ற--செம்பொன்மண்டபம்-சிவந்தபொன்னுற்செய்தமண்பத்தில் சென்று-போய்--சேர்ந்தான்-சேர்ந்தனள்—(எ-று) [கருத்து] தமயந்தி சயம்வரமண்டபத்திற்சென்றாள் என்பதாம். (நாகூ)

இழைசுடரொளிர்த்தலானுமிருவிசும்புறையும்வானோர் . ...*
பொழிமலர்மிடைதலானும்பூசல்வண்டிவர்தலானு .. ..*
மூழைபொருதடங்கட்பேதையருவினைதெரியக்காணூர் . . *
விழைவொடுநோக்கும்வேந்தர்விழிநெருக்குற்றமாதோ ...*

(இ-ள்) இழை-ஆபரணங்கள்—சுடர்-ஒளியை—எறித்தலானும்-வீசுதலானும்—இருவிசும்பு-பெரியசுவர்க்கத்தில்--உறையும் -வசிக்கப்பெற்ற—வானோர்-தேவர்கள்--பொழி-பொழிகின்ற—மலர்-பூக்கள்—மிடைதலானும்-நெருங்குதலானும்—பூசல்-பூசலையுடைய—வண்டி-வண்டுகள்—இவர்தலானும்-மொய்ப்பதனாலும் —உழை பொரு-மானையொத்த—தடங்கட்பேதை - விசாலம்பொருந்திய கண்களையுடைய தமயந்தியினது—உருவினை-வடிவை —தெரியக்காணூர்-தெரியும்படிப்பாராதாகிய—விழைவொடு-விருப்பொடு--நோக்கும்-பார்க்கின்ற—வேந்தர்-அரசருடைய— விழி-விழிகளானவை—நெருக்குற்ற-நெருக்கமடைந்தன—(எ-று) (கருத்து) ஆபரணங்களொளிகளாலும்மலர்களாலும் வண்டுகளாலும் தமயந்தி வடிவைக்காணுதவர்களாய் அரசர்கள் கண்கள்நெருக்குற்றன என்பதாம். (நாகூ)

அறற்கருங்கூந்தற்பேதையணிகளிற்கரியசோதி.....*
பெறற்கருந்மணியிற்றோற்றமெறிதிரைக்கடலின்மொய்த்த,
விறற்கதிர்வடிவேல்வேந்தர்விழைவொடுநோக்குங்கண்கள் *
பறிப்பரியனவாய்மெய்யிற்பதித்தனபோலுமாதோ.. ...*

(இ-ள்) அறல்-கருமணலையொத்த—கருங்கூந்தல் - கரியகுழலையுடைய---பேதை-தமயந்தியினது--அணிகளில் - ஆபரணங்களுக்குள்ளே---கரியசோதி-நீலவொளியை---எறிக்கும் - வீசுகின்ற--நன்மணியின்றோற்றம்-நல்லநீலரத்நத்தின்காட்சியானவை----எறிதிரை-அலையெறிகின்ற---கடலின்-கடல்போல்---மொய்த்த- நெருங்கப்பெற்ற---விறல்-பெருமைபொருந்திய--கதிர் -கிரணங்களையுடைய--வடிவேல்-வடித்தவேலையுடைய--வேந்தர்-அரசர்கள் -- விழை

வொடு-விருப்பத்தோடு--நோக்கும்-பார்க்கும்--கண்கள்-கண்களா
ன ஈ ய—பறிப்பரியனவாய்-வாங்குதற்கரியவாகி--மெய்யில்- தேக
த்தில்,—பரந்தனபோலும்-அழுந்தினபோலுமிருந்தன— எ-று)
மாது-ஒ- அசைகள்(கருத்து) தமயந்தியனிந்தநீல அரசனங்களின்
காட்சிகளானவை அரசர்கள்கண்களேப்பே லுமிருந்தனஎன்-ம்.ாயிரு

வஞ்சமொன்றின்றி வேறலரிதென்னவுரைநாட்டி..... *
விஞ்சையின்புணர்ப்பாற்கூற்றைவிளங்கிழையடமாக்கி... *
யெஞ்சலிலுலகமன்னர்யாரையுமொருங்குகொலவான் ... *
செஞ்சுடர்வயவாள்வேந்தன்றீவினைபிழைத்தசென்பார் ... *

(இ-ள்) வஞ்சமொன்றின்றி - வஞ்சனேயொன்றில்லாமல்— வேற
லரிதென-நம்மால்வெல்லப்படலரிதென்றெண்ணி—வவுவைநாட்
டி-சுயம்வரமென்றுநாட்டி—விஞ்சையின்புணர்ப்பால் - மந்திரவி
த்தைபினுடையசம்பந்தத்தால்—கூற்றை- யமனை—விளங்கிழைவ
டிவமாக்கி-தமயந்தியினுருவமாகச்செய்து—எஞ்சலில்-குறைவில்
லாத—உலகமன்னர்யாரையும்-திரிலோகத்திலுமுள்ள அரசரனை
யாயும்—ஒருங்குகொல்வான் - ஒருசேரக்கொல்லும்படி—செஞ்சு
டர்-செய்யகிரணத்தையுடைய—வயவாள்-வெற்றிபொருந்தியவ ட்
பாடையையுடைய —வேந்தன்-வீமனானவன்—இழைத்தது-செய்தி
னது—தீவினையென்பார் தீவினையாகுமென்பார்கள்—(எ-று) (கரு
த்து வீமன்இயமனேப்பெண்ணுக்கிஅரசர்களேக்கொல்லநினைத்தது
தீவினையென்பார்கள்,எ-ம். (ாயிசை)

தொண்டைவாய்முத்தமூரற்றுடியிடையறன்மென்கூந்த *
லொண்டொடிவனப்புவாய்ந்தவுருவுதங்கண்களாரக்... .... *
கண்டுழிவிபத்துதெஞ்சங்களிப்புறவொற்றர்கூறப்..... .. *
பண்டிநாங்கேட்டவாற்றிற்பதின்மடங்காயிற்றென்பார் .. *

(இ-ள்) தொண்டைவாய்-கொவ்வைக்கனிபோன்றவாயையும்—
முத்தமூரல்-முத்தைபொத்தபல்லையும்—துடிபிடை- உடுக்கையை
யொத்தஇடையையும்—அறன்மென்கூந்தல்- கருமணலையொத்த
மெல்லியகூந்தலையுமுடைய—ஒண்டொடி- தமயந்தியினது—வன
ப்புவாய்ந்த-அழகுபொருந்திய—உருவு-வடிவை—நம்-நம்முடை
ய—கண்களார-கண்கள்திருத்திபற —கண்டுழி - கண்டவிடத்தில்
—விபத்து-அதிசயித்தது—நெஞ்சம்-மனமானது—களிப்புற-களி
ப்பையடைய —ஒற்றர்கூற-ஒற்றர்சொல்ல—பண்டி - முன்னே—
நாம்-நாம் —கேட்டவாற்றில்-கேட்டவகையில் -பதின்மடங்கு பத்
துமடங்கு —ஆயிற்றென்பார்-மேலாயினதென்பார்கள்.—(எ-று)

வியந்து பரிண்மடங்காயிற்றென்பாரென்க. (கருத்து) அரசர்கள் தமயந்தியழகைவியந்தார்கள் என்பதாம். (நாயஇ)

வள்ளுறைகழித்தவொள்வாண்மாறிலைவீக்கினையுண்க.....*
ணள்ளிக்கொண்டியினாயின்னே * யருந்திடா தொழிபினன்
றேறு, தெள்ளமிர்தனையதீஞ்சொற்சேயிழையுத்தரீகத்..... *
வள்ளுறைகொடியகூற்றமுயிர்குடித்திடியதென்பார்.....*

(இ-ள்) வள்-கூர்மைபொருந்திய—உறைகழித்த- உறைபினின் றுநீக்கிய—ஒள்வாள் - ஒளிபொருந்தியவாளை—மாறிலைக்கினைய- மாறிலைத்தால்(அழகையொத்த)---உண்கண்-மையுண்டகண்களானை ய—உயினை-ஆவியை—அள்ளிக்கொண்டு- கையிலள்ளிக்கொண் டு---இன்னே-இப்பொழுதே—அருந்திடாது-உண்ணாமல்—ஒழிபி னன்றேறு-நீங்கினனன்றே--கெள்ளமிர்தனைய-கெளிவுபொருந்திய அமிர்தத்தையொத்த—தீஞ்சொல்-மதுரம்பொருந்தியசொல்லை யுடைய—சேயிழை-தமயந்தியினை—உத்தரீகத்துள்ளுறை - (உமநீ போர்வைக்குள்ளேயிருக்கும்--கொடியகூற்றம்- மூலகளாகியகொ டியகூற்றம்—உயிர்-ஆவியை—குடித்திடியதென்பார்-பருகுவதென் பார்கள்--(எ-று) * இலக்கணக்கொத்து வினாயிபல்-ய ரூ-மறை மூவகையாய்வழங் குவர்புலவர் இவ்விரியால் அருந்திடா தினன்றது னிரர்மறைவினையெச்சம்.(கருத்து) அரசர்கள் தமயந்திமூலகளாகி ய கூற்றம் உயிரைக்கொல்லுமென்பார்கள்,எ-ம். (நாயகூ)

மூருந்துறழினியமூரன்முகிழ்முலைப்பசியவேய்த்தோட்... *
கருந்தடங்கண்ணிசெவ்வாய்க்கமழ்நிலாயமிழ்தமாந்த.... *
வருந்தவம்புரிந்தோர்மண்ணிலரசரோவமரரோபோ.....*
தெரிந்நிலமென்னமாழ்கித்தருமரலெய்நிற்பார்..... *

(இ-ள்) மூருந்து-மயிலிறகினடியை—உறழ்- ஒத்த—இனிய-இ னிமையையுடைய—மூரல்-பற்களையும்—முகிழ் - அரும்பையொ த்த—முலை-ஸ்தனங்களையும்—பசியவேய்-பசியமூங்கிலையொத்த, தோள்-தோள்களையும்—கருந்தடங்கண்ணி- கரியபெரியகண்களை யுமுடைய தமயந்தியினை—செவ்வாய் சிவந்தவாயாகிய—கமழ்- வாசிகின்ற—நிலா-பாற்கடலிற்றோன்றிய—அமிழ்தம்- அமிர்தத் தை—மாந்த-புசிப்பதற்கு--அருந்தவம்புரிந்தோர்-அரியதவத்தி ற் செய்தவர்—மண்ணில்-பூமியிலிருக்கின்ற—அரசரோ- அரசருக் குளொருவரோ—அமரரோபோ- தேவர்களுளொருவரோ—தெரிந் நிலமென்ன-யாம் அறிந்நிலமென்று—மாழ்கி-மயங்கி—தெருமர லெய்நி-சுழற்சியடைந்து—நிற்பார்- நிற்பார்கள்--(எ-று)(கருத்து)

தமயந்தியை அறுபவிக்கத்தவஞ்செய்தவர்கள் தேவர்களோ அரசர்களோ என்பார்கள் என்பதாம். (ரயஎ)

அளியதிறடிகளேலவனிச்சமேலொதுங்கச்செய்த .....*
விளைமதத்துளிகருந்தண்டார்வேந்தனெகொடியனென்பார்
வளர்முலைப்பாரங்கண்டும்வண்டிமிர்தெரியல்சூட்டித்..... *
தளரிடைக்கிடக்கண்செய்ததாயரோகொடியரென்பார்.....*

(இ-ள்) அளிய-அளிதலையுடையவாகிய—நிறடிகள்-சிறுபபாதங்கள்—நோவ-நோவையடைய---அனிச்சமேல்-அனிச்சமலரின்மேல்—ஒதுங்கச்செய்த-நடக்கச்செய்த—விளை- விளைகின்ற—மதத்துளிக்கும்-தேன் துளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—தார்-மாலையையுடைய—வேந்தனை-வீரராஜனை--கொடியனென்பார்-கொடியவனென்பார்கள்—வளர்-வளரப்பெற்ற—முலை - ஸ்தனங்களினுடைய—பாரங்கண்டும்-சுமையையக்கண்டும்—வண்டு - வண்டுகள்—இமிர்-ஒலிக்கப்பெற்ற—தெரியல்சூட்டி-மாலையைச்சூட்டி--தளர்-தளரப்பெற்ற—இடைக்கு- மருங்குலுக்கு—இடுக்கண்செய்-வருத்தத்தைச்செய்த—தாயரோ-தாய்மார்களை—கொடியரென்பார்-கொடியரென்பார்கள்—(எ-று) (கருத்து) தமயந்தியை நடக்கச்செய்தவீடனைகொடியனென்பார்கள்-முலைப்பாரத்தின்மேல் மாலைசூட்டிய தாய்மார்களை கொடியரென்பார்கள் என்பதாம்.

எழுறுமன்னர்யாருமினையனகூறப்பைம்பொன்..... *
வாமமேகலைகளார்ப்பமணிச்சிலம்பொலிப்பச்செய்ய.....*
காமர்வாண்முகையசெவ்விக்காந்தளஞ்செங்கைகூப்பித்... *
தாமவேற்றடங்கணல்லாடாளதையதொழுதுநின்றாள்...*

(இ-ள்) எழுறும்-இன்பமடைகின்ற—மன்னர்யாரும் - அரசரனைவரும்— இனைய-இப்படிப்பட்டவர்தன்மைகளை —கூற- சொல்ல—தமபொன்-பசியபொன்னுற்செய்த—வாமம்-அழகுபொருந்திய—மேகலைகள்-மேகலாபரணங்கள்—ஆர்ப்ப-சத்திக்க---மணி-நவமணிகளிழைக்கப்பெற்ற—சிலம்பு-பாதசாலங்கள்--ஒலிப்ப-ஒலிக்க—செய்ய-சிவந்த—காமர்-அழகுபொருந்திய,வாள்-ஒளியையுடைய—முகைய-அரும்பையுடையனவாகிய—செவ்வி - செவ்வியையுடைய—காந்தளஞ்செங்கைகூப்பி - காந்தண்மலரையொத்த சிவந்தகைகளைச்சுருவித்து —தாமம்-வெற்றிமாலையைத்தரித்த--வேல்-வேலையொத்த—நடங்கண்- விசாலம்பொருந்தியகண்களையுடைய—நல்லாள்-தமயந்தியானவள்—தாதையை - தந்தையை—தொழுதுநின்றாள்-வணக்கஞ்செய்துநின்றாள்—(எ-று) (கருத்து) தமயந்தி தன்பிதாவாகிய வீமனைவணங்கிநின்றாள் என்பதாம்.(ரயஅ)

சேவடிதொழுதுநின்றதெரிவையையமகிழ்ந்துநோக்கி.....*
மூவுலகாளும்வேந்தரொருவழித்திரண்டுமொய்த்தார்..... *
பாவநோயெனையெண்ணியினையொன்றுரைப்பாரொன்னப் *
பூவையேபோன்மேனியானேநினைந்தனன்புலவுவேலான்..... *

(இ-ள்) சேவடி-தன்னுடையசிவந்தபாதங்களே—தொழுதுநின்ற-வணங்கிநின்ற—தெரிவையை-தமயந்தியை—மகிழ்ந்து-மகிழ்ந்து—நோக்கி-பார்த்து—மூவுலகாளும்வேந்தர்-மூன்றுலோகத்திலும் உள்ள அரசர்களும்—ஒருவழி-ஒரிடத்திலே—திரண்டு-கூடி—மொய்த்தார்-நெருங்கினார்கள்—யாவர்-எவர்கள்—இவனை-இவ்வரசனை—எண்ணி-நினைத்து—இனையவொன்று-இத்தன்மையவொன்று—உரைப்பாரொன்ன-சொல்லுவாரென்று—பூவையேபோன்மேனியானை-காயாமலராலையொத்தகரியவண்ணத்தையுடையநாரணனை—புலவுவேலான்-வீரராஜன்—நினைந்தனன்-நினைந்தான்—(எ-று) எ-விரு.

(கருத்து) வீரராஜன் விஷ்ணுவைநினைந்தான்என்பதாம். (ஈடுக)

மன்னவரினைவையோர்த்தவண்டுழாயலங்கன்மார்பன்.....*
றன்னடிதொழுதுநின்றசதுர்முகத்தேவைநோக்கிக்..... *
கன்னலிற்கனிந்ததீஞ்சொற்கலைமகளன்றியாரே..... *
யின்னவென்றிவையாயெண்ணியேந்திழைக்கிசைக்குநீரார்.. *

(இ-ள்) மன்னவன்-வீரராஜனுடைய—நினைவையோர்த்து-நினைப்பைபறிந்து—வண்டுழாயலங்கல்-வளம்பொருந்திய துளபமாலையையணிந்த—மார்பன்-மார்பினையுடைய நாரணனுவன்—தன்னடி-தனதுபாதங்களே—தொழுதுநின்ற-வணங்கிநின்ற—சதுர்முகத்தேவை நோக்கி-பிரமதேவனைப்பார்த்து—கன்னலில்-கரும்பைக்*காட்டிலும்—கனிந்த-சுவைமுதிர்ந்த—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுடைய—கலைமகளன்றி-நாமகளல்லாமல்—இன்னவென்று-இத்தேயத்தினென்று—இவனை-இவ்வரசனை—எண்ணி-நினைத்து—ஏந்திழைக்கு-தமயந்திக்கு—இசைக்குமும்-சொல்லுகின்றவை—நீரார்-தன்மையையுடையவர்—யார்-யாவர்—(எ-று) எகாரம்-விஞ-* குவலயாநந்தம்-உறுப்பியல்-நின்றுகாட்டிலு நிமித்தமின்னுமைந்தாம்வேற்றுமையாகிவருமே-இவ்விதியால் காட்டிலும் என்றது ஐந்தாம்வேற்றுமையுருபாம் (கருத்து) விஷ்ணுவீரராஜன் நினைவையறிந்து பிரமனைப்பார்த்துச் சரஸ்வதியே தமயந்திக்கு இன்னாரின்னாரொன்று சொல்லவல்லவள் என்றார்,எ-ம். (ஈடுக)

என்றலுமலரின்மேலோனிளநிலாவெறிக்குமேனி..... *
மன்றலங்கரியகூந்தல்வாணிவாண்முகத்தைநோக்கிச்.....*

சென்றுநீயரசர்வெள்ளத்திரளினைவிதிர்ப்டனீன்ற..... *
பொன்றிகழ்மூலையிளைஞக்குமையெனப்புவியிற்போந்தாள்.

(இ-ள்) என்றலும்-இப்படியென்றுசொன்னவளவில்—மலரின் மேலோன்-பிரமதேவனனவன்—இளநிலா - இளமைபொருந்திய நிலவினொளியை—எதிர்க்கும்-வீசுகின்ற—மேனி - திருமேனியையுடைய—மன்றல்-வாசனைபொருந்திய—அம்-அழகிய—கரிடகூந்தல்-கறுத்தகூந்தலையுடைய—வாணி - நாமகளுடைய—வாள் - ஒளிபொருந்திய—முகத்தை நோக்கி-முகத்தைப்பார்த்து--நீசென்று-நீபோய்—அரசர்வெள்ளத்திரளினை-இராஜகூட்டத்திரட்சியை—விதர்ப்பனீன்ற-வீமன்பெற்ற—பொன்றிகழ் - பொன்போன்றதேகம்விளங்கிய—மூலையிளைஞக்கு-தமயந்திக்கு—உளாயென - சொல்லென்றுசொல்ல—புவியில்- பூமியிலே—போந்தாள் - வந்தாள்—(எ-று)(கருத்து) பிரமன்சரஸ்வதியைநோக்கித் தமயந்திக்கு அரசர்கள்பேரை அறிவியென்றுசொல்ல அவள் வந்தாள் என்பதாம்.

போந்தவள்வண்டுழுசாப்பொன்னரிமாலையோடும் .. ...*
வார்ந்தசேமமாலைதாழ்ந்தவதுலைவமண்டபத்தின்மேவி..... *
யேந்தெழிலெருத்தங்கோட்டிநாணெடுபிறைஞ்சிநின்ற... *
கூந்தலம்பிடிக்குவேந்தர்குலமுறைவினக்கலுற்றாள் .. .... *

(இ-ள்) போந்தவள்-அப்படிவந்தநாமகள்—வண்டுழுசா-வண்டுளால்மொய்க்கப்படாத—பொன்னரிமாலையோடும் - பொன்னரிமாலையுடனே—வார்ந்த-நீண்ட—சேம்- வாசனைபொருந்திய—மாலைதாழ்ந்த- மலர்மாலைகள்தாழப்பெற்ற—வதுலைவமண்டபத்தின்மேவிவிவாகமண்டபத்தில்—மேவி-பொருந்தி,ஏந்து-தாங்கிய—எழில்-அழகுபொருந்திய—எருத்தங்கோட்டி - கிலையைவணங்கிக்கொண்டு—நாணெடும்-நாணத்தோடும்—இறைஞ்சிநின்ற-தொழுதுநின்ற—கூந்தலம்பிடிக்கு-தமயந்திக்கு—வேந்தர்குலமுறை- அரசர்மரபினை—கிளக்கலுற்றாள்-சொல்லத்தொடங்கினாள்—(எ-று)(கருத்து) சரஸ்வதியானவள் தமயந்திக்கு அரசர்கள்குலமுறைசொல்லத் தொடங்கினாள் என்பதாம். (ஈடுரு)

சேயரிசிந்திநீண்டசெழுங்கடைமழைக்கட்செவ்வாய்..... *
மாயிருஞாலம்விற்கும்வருமூலத்தெரிவைகேட்டி..... *
யாயிரங்கதிர்கள்வீசியங்கண்மாஞாலம்போர்த்த..... *
பாயிருள்பருகுஞ்செங்கேழ்ப்பரிதியிவ்விருந்தேவே.....*

(இ-ள்) சேயரி-செவ்வரிகள்—சிந்தி- சிதறப்பெற்று—நீண்டநெடிய—செழுங்கடை - செழிமைபெற்றகடையையுடைய—மழை-குளிர்ச்சிபொருந்திய—கண்-கண்ணையும்—செவ்வாய் - சிவந்தவாயையும்—மா-மகத்தாகிய—இரு-பெரிய—ஞாலம் - பூமியை

—விற்கும்-வீலைசெய்யும்—வருமுலை-வளர்கின்ற ஸ்தனங்களையுமுடைய—தெரிவை-தமயந்தியை-கேட்டி-நீர்கேட்பாயாக—ஆயிரங்கதிர்கள்வீசி-ஆயிரங்கிரணங்களைவீசி—அங்கண்-அழகிய இடத்தையுடைய—மா-மகத்தானிய—ஞாலம்-பூமியை—பொன்திகழ்-மேருமலைய—பாயிருள்-பரவிபவிருளை—பருகும்-அழிக்கின்ற—செங்கதிர்ச்செஞ்சூரியனத்தையுடைய—பரிதி-சூரியன்—இப்பிரபந்தத்தைச்-சிறந்தகவியற்றஇந்திரன்—(என்-று) வகாரம் கூற்றசை (கருத்து) நமயந்தியே இவன் சூரியதேவன் என்றுள் என்பதாம். (எடை)

பண்ணைமயினியதீஞ்சொற்படாமுலைப்பாணைகேண்மோ *
கண்வழுக்குறுதண்சோதிக்கலைநிலவெறிபவல்லான்..... *
மண்ணியமணிபிற்செய்தவான்றவிசிருந்தசேவன்.. ..... *
விண்ணவர்க்கமிர்தமீந்தவெண்கதிர்க்கடவுளாமால்..... *

(இ-ள்) பண்-இசை—அமை-பொருந்திய—இனிய-இனியவாகிய—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுடைய—படர்-சாயற்—முலை ஸ்தனங்களையுடைய—பாவை-தமயந்தியை-கேளி-கேட்பாயாக—கண்-கண்களி--வழுக்குறு கூறுதலை-தன்-குணிச்சிபொருந்திய--சோதி- பிரகாசத்தையுடைய--கலை - சோடசகலைகளும்--நிலவெறிப்ப-ஒளிவீச-வல்லான்-வல்லவனுல்--மண்ணிய-ஒப்பமையமைந்த--மணியிற்செய்த-இரத்தினகளாற்செய்யப்பட்ட--வான்-பெரிய--தவிசு-ஆசனத்தில்— இருந்ததேவன்- இருந்தகிலையுற்றதேவருனவன்--விண்ணவர்க்கு-தேவர்களுக்கு--அமிர்தம்ஈந்த - அமிர்தத்தைக்கொடுத்த--வெண்கதிர்க்கடவுளாம் - சந்திரனுமாம்—(என்-று) மோனென்பது - முன்னிலைக்கண்வந்த அசை. (கருத்து) இவன் சந்திரனென்றுளனென்பதாம்- (எடுப்பு)

ஊர்சுணங்கணிந்துவிம்மியொழுகொளியாரஞ்சூடி..... *
யேர்கனிந்தொழுகும்பொம்மலிளமுலையணங்குகேட்டி.. *
தார்புனைமௌலிவேய்ந்ததிணப்பிலாதிருந்ததேவர்..... *
மாரனில்வனப்புவாய்ந்தமருத்துவத்திலெவர்தாமே..... *

(இ-ள்) ஊர்-பரவுகின்ற—சுணங்கணிந்து- தேமலையணிந்து—விம்மி-பருத்து--ஒழுகொளி-ஒளியைவீசுகின்ற--ஆரம- முத்துவடத்தை--சூழ-தரித்துக்கொண்டு--எர்- அழகானது--கனிந்து- முதிர்ந்து -ஒழுகும்-ஒழுகுகின்ற—பொம்மல்- பொலிவுபெற்ற—இளமுலை-இளமைபொருந்திய ஸ்தனங்களையுடைய—அணங்கு-தமயந்தியே--கேட்டி-கேட்பாயாக--தார்- மலர்மாலையை--புனை-தரித்த—மௌலிவேய்ந்து- கிரீடத்தையணிந்து — திணப்பிலாது - இணைபிரியாது—இருந்ததேவர்- (இந்திரனிருந்தகிலையுற்றதேவர்கள்)—மாரனில்-

மன்மதனைக்காட்டிலும்--வனப்புவாய்ந்த-அழகுபெற்ற--மருத்து வத்தலைவர்-அசுவினிதேவர்கள்—(எ-று) தாம்-ஏ-அசை- (கருத்து) இவர்கள் அசுவினிதேவர்கள் என்றுள் என்பதாம். (நாஉசு)

வண்ணமேகலையாய்மற்றுன்வருமுலைப்போகம்வேண்டி ...*
யெண்ணிலராகியிப்பாலினிதுவீற்றிருந்தோசொல்லாம் ... *
விண்ணவரப்பாற்பைம்பொன்வியன்றவிசிருந்தகோவர் ...*
பண்ணமைதிவினல்யாழ்பயின்றகாந்தருவவேந்தர்... ...*

(இ-ள்) வண்ணமேகலையாய்-அழகுபொருந்தியமேகலாபரணத் தையணிந்ததமயந்தியே—உன் உன்னுடைய—வரு - வளரப்பெற் ற —முலை-ஸ்தனங்களுடைய—போகம்வேண்டி- போகத்தைவிரு ம்பி—எண்ணிலராகி-அளவற்றவராகி—இப்பால் - இப்புறத்தில்— இனிது-இனிமையோடு—வீற்றிருந்தோசொல்லாம்- வீற்றுடனிருந்த லையுற்றவர்களெல்லாரும்—விண்ணவர்-தேவர்கள்—அப்பால்-அவர் க்கப்பறத்தில்—பைம்பொன்-பசியபொன்னுற்செய்த — வியன்- மேலாகிய--தவிசிருந்ததேவர்- ஆசனத்திலிருக்கப்பெற்றதேவர்கள் —பண்ணமை-இசையமைந்த — நிவவிர்-வலிக்கட்டினையுடைய-- நல்யாழ் நல்லயாழை — பயின்ற-வாசிக்கின்ற— காந்தருவவேந்த ர்-கந்தருவராசர்கள்—(எ-று) மற்றுஅசைநிலை) (கருத்து) இவர் கள் காந்தருவராசர்கள் என்றுள் என்பதாம். (நாஉஎ)

குழைமுகங்கிழிக்கும்வேற்கட்கொம்மை வெம்முலையாய்கே ட்டி, மழைவிடையென்னவாங்கண்மணித்தவி சிருந்ததேவ நிழுமெனவருவிச்காரனிமணிவரன்றித்தூங்கும்,விழைவுறு வெள்ளிவெற்பின்விஞ்சையர்க்கிறைவர்தாமே..... ... ...*

(இ-ள்) குழைமுகம்-காதணியினுடையமுகத்தை — கிழிக்கும்- கிழிக்கின்ற—வேற்கண்-வேல்போன்றகண்களையும் —கொம்மை- இளமையையுடைய—வெம்முலையாய்-விருப்பைச்செய்கின்றஸ்த னங்களையுமுடையதமயந்தியே — கேட்டி-கேட்பாயாக — மழவி டையென்ன-இளவேற்றைப்போல்—ஆர்கண் - அவ்விடத்தில்—ம ணித்தவிசு-இரத்நாசனத்திலே—இருந்ததேவர்-இருந்தலையுற்றதே வர்கள்—இழுமென-இழுமென்னுமோசையோடு—அருவி- அரு வியாலது—சாரல்-மலைப்பக்கத்தினின்றும்—இனமணி-கூட்டமா கியமணிகளை--வரன்றி-வாரிக்கொண்டு--தூங்கும்- ஒழுகுகின்ற--வி ழைவுறு-விருப்பமடைகின்ற--வெள்ளிவெற்பின்-கைலாசமலையிலி ருக்கின்ற — விஞ்சையர்க்கிறைவர்-வித்தியாதரருக்கரசர் —(எ-று) தாம்-ஏ-என்பன-இரண்டும்அசைகள்.)(கருத்து) இவர்கள் வித்தி யாதரருக்கரசர்கள் என்றுள் ,எ-ம். (நாஉஅ)

மூயற்கறையொழிந்தசெவ்விமுழுமதியதனிலைஞ ..... *
மபக்கியுள்ளபிணையுண்ணும்வாள்கிடத்தலைபகலைஞப் . *
பயக்கருஞ்சிறப்பிற்றிறவர்பாவலர்விண்டிருத்தகாலை..... *
யியக்கர்தம்பெருமானீன்றவெழில்புனைகுமரனேறை... ...*

(இ-ள்) மூயற்கறை-முயலினதுகறுப்பு—ஒழிந்த-நீங்கிய—செவ்வி-அழகுபொருந்திய—முழுமதியதனில்-பூரணசந்திரனையொத்தமுகத்தில—நாளும்-நாடோறும்—மயக்கி-மயங்கச்செய்து—உள்ளுயிரை-உள்ளேயிருக்கின்றஆவியை—உண்ணும்-உண்கின்ற—வாள்கிடந்தனைய-வாளினுந்தனையொத்த —கண்ணும்-கண்ணையுடையதமயந்தியே—பயக்கரும்-தோன்றுதற்கரிய—சிறப்பில-சிறப்பினால்—தேவர்பரவ-தேவர்கள்வணங்கும்படி—ஈண்டிருந்தி-இவ்விடத்திலிருந்தலைப்பெற்ற—காளை-அரசன்--இயக்கர்தம்பெருமானீன்ற-குபேரனுற்றரப்பட்ட—எழில்புனை-அழகுபொருந்திய—குமரனேறு-நளகூபரன்—(எ-று)-எ-அசை) (கருத்து) இவன்நளகூபரன்என்றுள் என்பதாம். (ஊஉ)

காதளவோடிமீண்டுகடைசிவந்தாவியுண்ணு..... .....*
மாதர்மென்றோக்கிணையிம்மணித்தவிசிருந்தவேந்தல்... .. *
பூதரவில்லினாற்புனிதனுக்கணியுமாம்ப்..... .....*
பாதலத்தின்பதிஞ்சுக்கும்பஃறலைப்பாந்தள்வேந்தே... ...*

(இ-ள்) காதளவோடி-காதுவரையாயோடி—மீண்டு-திரும்பி—கடைசிவந்து-கடைக்கண்சிவந்து—ஆவியுண்ணும்-உயிரையுண்கின்ற--மாதர்-அழகிய--மென்றோக்கிணை-மெல்லியபார்வையையுடையதமயந்தியே—இம்மணித்தவிசிருந்த-இத்திரத்நாசனத்திலிருந்தலைப்பெற்ற —எந்தல்-அரசனைவன்--புனிதனுக்கு-பரமசிவனுக்கு--பூதரவில்லின்-மேருவில்லில்--நாணை-நாரியாகயம்--ஆவியுமாகி-ஆபரணமாகியும்—பாதலத்து-நாகருலகத்திலிருந்து---நிலம்பதிப்பதற்கும்-சுகத்தையனுபவிக்கின்ற — பஃறலை - பலதலையையுடைய—பாந்தள்வேந்து-சர்ப்பராஜன்(எ-று) எ-ஈற்றலசை) (கருத்து) இவன் ஆதிசேடன் என்றுள் ,எ-டம். (ஊகூ)

இழைபரந்திமைக்குமல்குலின்னகைப்பவளச்செவ்வாய் ... *
மழைமதர்நெடுங்கணல்லாய்மலர்க்கணைவேளில்வேளுந் ...*
தொழுதகுவனப்புவாய்ந்துதோன்றுமித்தோன்றல்வெய்ய*
பொழிமதக்களிநலியானைப்புட்கரத்தீவில்வேந்தே... .....*

(இ-ள்) இழை-ஆபரணங்களால்—பரந்து- பரவப்பெற்று — இமைக்கும்-பிரகாசிக்கின்ற—அல்குல்-அல்குலையும்—இன்னகை-இனியதலையுள்ள--பவளச்செவ்வாய்-பவளம்போன்றசெவ்வாயையும்

—மழை-குளிர்ச்சிபொருந்திய—மதர்-களிப்பையுடைய—நெடுங்கண்-நெடியகண்களையுமுடைய—நல்லாய்-தமயந்தியே—மலர்த்தணை-பூங்கணைகளையுடைய—மேனில்மேவரும்-மன்மதனும்—தொழுதகு-வணங்கத்தக்க—வனப்புவாய்த்து-அழகுபெற்று,தோன்றும்-தோன்றுகின்ற—இத்தோன்றல்-இவ்வரசன்--வெய்ய-வெவ்விய—பொழிமதம்-மும்மதமும்பொழிகின்ற--களிறல்லானே-களிப்புடனிருந்தநல்லயானைகளையுடைய—புட்கரத்தீவில்-புட்கரமென்னுந்தீவிலிருக்கின்ற—வேந்து-அரசன். (எ-று) (கருத்து) இவன் புட்கரன்என்னுள் என்பதாம். (ஈகை)

ஆற்றல்சால்மன்னராவியருந்துவான்கரந்துவெய்ய..... *
கூற்றிருந்தனையவுண்கட்கோல்வேலினிதுகேட்டி..... *
வேற்படைத்தானைசூழவியன்றவிசிருந்தகாளை..... *
பாற்கடலுடித்தசாகத்தீவுறைபரிதிவேலான்---..... *

(இ-ள்) ஆற்றல்சால்-வலிமைமிக்க—மன்னராவி-அரசர்களுயிரை—அருந்துவான்-உண்ணும்படி—கரந்து-மறைந்து—வெய்ய-வெவ்விய—கூற்றிருந்தனைய-யமனிருந்ததைபோன்ற—உண்கண்-மையுண்டகண்களையுடைய—கோல்வேல்-தமயந்தியே—இனிது கேட்டி-இனிமையோடுகேட்பாயாக—வேற்படை-வேற்படையேந்திய—தானை-சேனைகள்—சூழ-தனைச்சுற்றும்படி--வியன்-அழகிய—தவிசிருந்த-ஆசனத்திலிருக்கப்பெற்ற—காளை-அரசனவன்—பாற்கடலுடித்த-பாற்கடலையுடித்த—சாகத்தீவுறை-சாகமென்னுந்தீவிலிருக்கின்ற—பரிதிவேலான்-சூரியன்போன்ற வேற்படையையுடையஅரசன்—(எ-று) (கருத்து) இவன் சாகத்தீவரசன் என்னுள் என்பதாம். (ஈகை)

தளரிடைமெலியவிஞ்சிச்சந்தனத்தேய்வைகொட்டி..... *
வளரிளமுலையாயிங்ஙன்வையமணிசெய்பூணு ..... *
னினைவெபிற்பரிதிமான்றேரிடறுபொற்குமம்யோங்கிக் ... *
கினமொளிவிரிக்குமாடக்கிரவுஞ்சத்தீவில்வேந்தன்.....*

(இ-ள்) தளரிடை-தளர்கின்றஇடையானது—மெலிய-வாட—மீங்கி-பருத்து—சந்தனத்தேவை-சந்தனக்குழம்பினை--கொட்டி-அப்பி—வளர்-வளரப்பெற்ற—இளமுலையாய்-இளமைபொருந்தியஸ்தனங்களையுடையதமயந்தியே—இங்ஙன்-இவ்விடத்தில்—வையகிய-தங்கிய--மணிசெய்பூணன்-இரத்நாபரணங்களையுடைய அரசன்—இனவெயில்-இளவெய்யிலையுடைய—பரிதிமான்றேர் சூரியனுடையதேரானது—இடறு-இடறுகின்ற—பொற்குமிழ்-பொன்னாற்செய்தகிரமானது—ஓங்கி-உயர்ந்து—இளர்-பி

குந்த—ஒளிவிரிக்கும்-காந்திலையப்பரப்புகின்ற—மாடம் - உப்பரி கைகளையுடைய, கிரவுஞ்சத்தீவின்-கிரவுஞ்சமென்னுந்தீவைபாளு கின்ற—வேந்தன்-அரசன்—(எ-று.) (கருதது) இவன்கிரவுஞ்சத்தீ வரசன்எனறுள் எனபதாம். (ஈகூஈ)

புரிவடஞ்சுமத்துவீங்கும்புணர்முலைமீங்குவைஞ்.....*
திருகுவெஞ்சிற்றத்துப்பிற்றிண்களியானையன்ஞன்.....*
விரைமதுவுபிர்க்குங்கைகை வேலிவாய்மணியும்பொன்னும்
வருதிரைகருட்டுங்கானக்வான்குசைத்தீவிலேவேந்தன்..... *

(இ-ள்) புரிவடம்-முத்துவடங்களை—சுமந்து- பொறுத்து—வீ ங்கும்-பருத்த--புனர்முலை- நெருங்கியஸ்தனங்களையுள்ள சமயந்தி யே—ஈங்குவைகும்-இங்கேயிருக்கின்ற—திருகு-மாறுபடின்ற— வெம்-வெவ்விய—சிற்றத்துப்பின்- மிகுந்தகோபத்தையும்—திண் வலிமையையுமுடைய—களியானைபன்னன் - களிப்புமிக்கயானை யையொத்தஅரசனைவன்—விரை-வாசனை பொருந்திய---மதுவுபி ர்க்கும்-தேனைத்தருகின்ற—கைகைதவேலியாய் - தாழைவேலியிடத் தில்—மணியும் - நவமணிகளையும்—பொன்னும்-பொன்னையும்— வருதிரை-வருகின்றஅலைகள்—சுருட்டும்-மடக்கிவீசுகின்ற—கான ல்-உடற்கனச்சோலைகளையுடைய—வான் - மேலாகிய— குசைத்தீ வில்-குசையென்னுந்தீவிலிருக்கின்ற---வேந்தன்-அரசன்—(எ று) (கருதது) இவன்குசைத்தீவரசன்எனறுள் என்பதாம். (ஈகூஉ)

தெண்டிரைப்பரவையின்றதெள்ளமிர்தூறல்போலும்.....*
* பண்டருமினிபதிஞ்சொற்படாமுலைப்பாவைகேண்மோ*
விண்டலப்பரிதிபோலவிளங்குபிக்குரிசில்வாசத்.....*
கண்டலையுறித்தகானற்சான்மலித்தீவிலமேவேந்தன்.....*

(இ-ள்) தெண்டிரை-தெளிந்தஅலைகளையுடைய—பரவையின்ற- கடலானதீன்ற—தெள்-தெளிந்த—அமிர்தூறல்போலும்- அமிர்த த்தினதூறல்போலும்—பண்டரும் - இசையைத்தருகின்ற—தீஞ் சொல்- மதுரம்பொருந்தியசொலையும்—படாமுலை - சாயாதஸ்த னங்களையுமுடைய—பாவை-தமயந்தியே - கேள்-கேட்பாயாக— விண்டலப்பரிதிபோல-ஆகாயத்திலிருக்கின்றசூரியன்போல—விள ங்கும் - பிரகாசிக்கின்ற—இக்குரிசில - இவ்வரசனைவன்—வாசத்தி ண்டலையுறித்த-வாசமிக்கமலர்களையுடையசோலைகளையுறித்த—கா னல்-நெய்தனிலத்தையுடைய—சான்மலித்தீவில்- சான்மலித்தீவினி ருக்கின்ற—வேந்தன்-அரசன்—(எ-று)*இலக்கணக்கொத்துபொ தியல்-மக-ஞ். அறுவகைதெகையுமறையுங்காலை, யொன்றே தொகுதலும்பலவினொகுதலு, மாறுவகையுமடங்கத்தொகுதலு,

மூருபேதொருதலும் பொருளே தொருதலு, மூருபும் பொருளு மொருங்கேதொருதலு, மூருபும்பொருளுமொருங்குபலதொருதலும், பொருளுமூருபும்பொருளுந்தொருதலு, முதலிலடகடையெனமூன்றினுந்தொருதலுங், கடையிடையிரண்டினுங் காணத்தொருதலுமாகியாய்ப்பலமுமறைந்தவர்புலவர், இவ்விதியால் பண்டருமினியதீஞ்சொல் இதில்பிள்ளங்கூழ்தொக்கது - (கருத்து) இவன் சான்மலித்தீவரசனென்றுள் என்பதாம். (ஈகூடு)

தேவர்கண்முதலாமற்றைத்தீவினில்வணப்புவாய்ந்த..... *
காவலரினையொன்றுவாதிணைக்கரியகூந்தற்..... ...*
பூவையந்தீஞ்சொலவாட்கட்பொம்மல்வெம்முலையினுட்கு *
நாவலந்தீவின்வேந்தர்யாரையுநவிலவுற்றுள்..... .....*

(இ-ள்) தேவர்கண்முதலா-தேவர்களாதியாக—மற்றைத்தீவினில்-மற்றைத்தீவுகளில்—வணப்புவாய்ந்த - அழகுபெற்ற—காவலர்-அரசர்கள்—இனையொன்று - இத்தன்மையொன்று— உரைத்துசொல்லி—மைமைபோலும்—கரியகூந்தல்- கறுத்தகுழலையும்—பூவையந்தீஞ்சொல்-பூவைப்புள்ளினிசையையொத்தஇனிக்கவார்த்தையையும்—வாட்கண்-வாள்போன்றகண்களையும்—பொம்மல்-பொலிவுபெற்ற—வெம்முலையினுட்கு - விருப்பத்தைச்செய்கின்றஸ்தனங்களையுள்ளதமயந்திகை—நாவலந்தீவின்வேந்தர்-நாவலந்தீவிலிருக்கின்றஅரசர்கள்--யாரையும்-எவர்களையும்--நவிலவுற்றுள்-சொல்லத்தொடங்கினாள்—(எ-று) (கருத்து)நாவலந்தீவரசர்களைச்சொல்லத்தொடங்கினாள் என்பதாம். (ஈகூசு)

கொள்ளைவண்டிமிருங்கூந்தற்கோதைபிவ்விருந்தவேந்தல் *
வள்ளவாய்க்கமலவாவிவாளையம்பகடுகாவிக்..... *
கள்ளுலாம்பசியதாற்றுக்கழுகிளம்பாளைகீறு.....*
மள்ளலம்பழனஞ்சூழ்ந்தவயந்திநாடாளுமவேந்தே.....*

(இ-ள்) கொள்ளை-கூட்டமாகிய—வண்டு-வண்டுகள்—இமிரும்-சத்திக்கின்ற—கூந்தல் - அளகத்தையுடைய—கோதை- தமயந்தியே—இவ்விருந்தவேந்தல்-இங்கிருந்தவிவ்வரசன்—வள்ளவாய் - இண்ணம்போன்றவாயையுடைய—கமலவாவி - தாமரைத்தடாகத்தினின்றும்—வாளையம்பகடு-ஆண்வாளைகள்—காவி-பாய்ந்து—கள்ளுலாம்-தேனெழுகின்ற—பசிய - பசுமைபொருந்திய—தாறுகுலைகளுள்ள—கழுகிளம்பாளை-கழுகமரத்தினிளம்பாளைகளை—கீறும்-கிழிக்கும்படியிருக்கின்ற—அள்ளல்-சேற்றினை—அம்-அழகிய — பழனஞ்சூழ்ந்த-கழனிகள்சூழ்ந்த—அவந்தி நாடு-அவந்தி

தேயத்தை—ஆளும்-ஆளுகின்ற—வேந்து-அரசன்—(எ-று) (கருத்து) இவன் அவந்திநாட்டரசன் என்றுள்,எ-ம். (ஈகூ)

நன்னலங்கனிந்தகோதாயீங்குறைநாமவேலான் ..... *
பொன்னவிர்மாடைநெற்றிப்பொழிமதக்களிறுமாய்க்குஞ்*
செந்நெலங்குலியிற்றூங்குந்தீந்தொடைநறவுகாலும்.....*
கன்னலங்கழனிசூழ்ந்தகௌடநாட்டரசர்மேற..... *

(இ-ள்) நன்னலம்-மிகுந்தநலமானது—கனிந்த - முதிர்ந்த—கோதாய்-தமயந்தியே—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—நாமம்-அச்சத்தைத்தருகின்ற—வேலான் - வேலாயுதத்தையுடைய அரசன்—பொன்-பொன்னுற்செய்தது—அவிர் - பிரகாசிக்கின்ற—ஒடை-முகபடாத்தையணிந்த—நெற்றி - நெற்றியையும்—பொழிமதம்-பொழிகின்றமதத்தையுமுடைய—களிறு-யானையை—மாய்க்கும்-மறைக்கின்ற—செந்நெல் - செஞ்சாலிகளுள்ளனவும்— அங்குலியில்-அழகியகுலைகள்போல—தூங்கும்-தூங்குகின்ற—தீம்-தித்திப்புடைய—தொடை-தேன்கூண்டானது—நறவு-தேனை—காலும்-ஒழுக்கின்ற—கன்னல்-கரும்புள்ளனவுமாகிய—அங்கழனி-அழகியகழனிகளால்—சூழ்ந்த- சூழப்பட்ட—கௌடநாடு - கௌடதேயத்தையாளுகின்ற—அரசர்-மன்னர்க்கு—ஏறு - ஆண்சிங்கத்தையொத்தவரசன்—(எ-று) (கருத்து)இவன் கௌடநாட்டரசன்என்றுள்ளன்பதாம். (ஈகூ)

கஞ்சநாண்மலைவென்றுகடைகுழையெறிந்துமீண்ட ... *
நஞ்செனக்கொடியவாட்கணங்கையிவ்விருந்தமீளி.....*
வெஞ்சமங்காத்தலன்றியணியெனவிளங்கச்செய்த.....*
விஞ்சிசூழ்மதுரைமூதூர்மதுகுலமன்னரேறே..... *

(இ-ள்) கஞ்சம்-தாமரையினுடைய—நாண்மலரை - புதியமலரை---வென்று-வெற்றிகொண்டு---கடைகுழை - காதணியினுடையகடையை---எறிந்து-வீசி---மீண்ட-திருப்பிய—நஞ்சென- விடம்போல--கொடிய- கொடியவாகிய—வாட்கண்-வாள்போன்றகண்ணையுடைய---நங்கை-தமயந்தியே—இவ்விருந்தமீளி-இருந்தஇலப்பெற்றவிவ்வரசன்—வெம்-வெப்பம்பொருந்திய—சமம்-யுத்தத்திலே—காத்தலன்றி-காப்பதற்கல்லாமல்—அணியென - அலங்காரமாக—விளங்கச்செய்த - பிரகாசிக்கும்படிசெய்த—இஞ்சிசூழ்-மதில்சூழ்ந்த—மதுரைமூதூர்-மதுராபுரியையாளுகின்ற—எதுகுலமன்னர்-எதுகுலவரசர்க்கு—ஏறு- ஆண்சிங்கத்தையொத்தவன்---(எ-று) (கருத்து)இவன் மதுராபுரியரசன் என்றுள் என்பதாம்.

* அமிழ்தினேமுனிந்துசாரலருவிதாழ்மலையமீன்ற.....*
தமிழினுமினியதீஞ்சொற்றையலீண்டிருந்தகோமா..... *
னிமிழ்திரைகொழித்தமுத்தமேனழநின்முறுவல்காட்டுங்...*
கமழலந்துறைசூழ்தெண்ணீர்க்கங்கைநாடாளும்வேந்தன்.*

இ-ள்) அமிழ்தினை - அமிர்தத்தை—முனிந்து-கோபித்து—சாரல்-பக்கங்களில்—அருவிதாழ்- அருவியான துதாழ்கின்ற—மலையம் - பொதியமலையிலிருக்கும் அகத்தியமுனிவனால் — ஈன்ற-தரப்பட்ட—தமிழினும்- தமிழைக்காட்டிலும்—இனிய-இனிமையுள்ள—தீஞ்சொல்-மதுரமொழிபொருந்தியசொல்லையுடைய—தையல்- தமயந்தியே—ஈண்டிருந்த-இவ்விடத்திருந்த---கோமான்- அரசனுவன்---இமிழ்-பிரகாசிக்கின்ற —திரை - அலைகளானவை---கொழித்த-ஒதுக்கிய---முத்தம்-முத்துக்கள்---எழை-தமயந்தியே---நின்முறுவல்-உன்னுடையபல்வரிசையை—காட்டும்-காண்பிக்கும்---கமழ்ந்-பரிமளிக்கின்ற—அலம் - அமைவினையுடைய—துறைசூழ்- துறைகள்சூழ்ந்த—தெண்-தெளிவுபொருந்திய—நீர் - நீரையுடைய—கங்கைநாடாளும்வேந்தன்-கங்கைநாடாளும் அரசன்—(எ-று)

[*இலக்கணக்கொத்து ஒழிபியல்- உ- சூ. "பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும்,மொழித்தானுமிலக்குந்தமிழ்மொழி, இவ்விதியால் அமிழ்து சிறப்பெழுத்தால்வந்த தமிழ்மொழி] (கருத்து)
இவன்கங்கைநாட்டரசன் என்றுள்ளது,எ-ம். (நகசம)

வனைமலர்க்குழல்கன்மாலைவணிருங்கூந்தற்செவ்வா..... *
யினவனைமடந்தையிப்பாலெனிமணித்தவிசிற்றோன்று.....*
நனைவிரியலங்கன்மார்பனுள்விழவறுதலீதிக் . . . .*
கனைகுரன்முரசந்துஞ்சாக்காம்பிலிக்காவல்வேந்தன்... ... *

(இ-ள்) வனைமலர்-மலராற்செய்த—குழற்கன்மாலை- அழகியமாலையையணிந்த—வணர்-வளைந்த—இரும்-பெரிய—கூந்தல்-குழலையும்—செவ்வாய்-செவ்வாயையும்—இனவனை - கூட்டமாகியவளையலையுமுடைய—மடந்தை- தமயந்தியே—இப்பால் - இப்புறத்து—எரி-ஒளிவிடுகின்ற—மணித்தவிசில்- இரத்நாசனத்தில்—தோன்றும்-தோன்றுகின்ற—நனைவிரி-அரும்புகள்விரிந்த—அலங்கல்-மாலையையணிந்த—மார்பன்-மார்பையுடையவன்---தாள்-நாடோறும்—விழவறுத-திருவிழாநீங்காத—வீதி வீதியிலே—கனை - சத்திக்கின்ற—முரல்-முழக்கையுடைய—முரசம்-பேரிகையானது—துஞ்சா-ஓய்வில்லாத—காம்பிலிக்காவல்வேந்தன்-காம்பிலிதேயத்தையாளுகின்ற அரசன்—(எ-று)(கருத்து) இவன்காம்பிலிதேசாதிபதி என்றுள் என்பதாம். (நாசக)

தூழைதொசிமருங்குறேம்பதுண்ணெழின்மாமைவாய்த்த ✱
விழைவளர்முலைபிழைப்மற்றிங்கினிதிருந்தோன்றன்..... ✱
மழலைவண்டுழலத்தூங்குமனமதப்புழைக்கைநால்வாய்க் ✱
கழைசுளிகளிறல்யானைக்கலிங்கநாடாளுமன்னன்..... ✱

(இ-ள்) தூழைதொசி-மிகுந்தபூட்பத்தையுடைய—மருங்குல்-இடையானது—தேம்ப-வாட—துண்-பூட்பம்பொருந்திய—எழில்-அழகானது—மாமைவாய்த்த-பிரகாசம்பொருந்திய—இழை-ஆபரணத்தையணிந்த—வளர்முலையினும்-வளரப்பெற்றமுலையினையுடையதமயந்தியை-இங்கு-இவ்விடத்தில்-இனிது-இனிதாக, இருந்த-இருக்கப்பெற்ற—தோன்றல்-அரசனானவன்—மழலை-இனிமைபொருந்தியவோசையுள்ள—வண்டு-வண்டுகள், உழல-உழலும்படி—தூங்கும்-தங்கிய—மழைமதம்-மழைபோன்றமதத்தையும்—புழைக்கை-துவாரம்பொருந்தியதுதிக்கையையும், நால்வாய்-தொங்குகின்றவாயையுமுடைய—கழைசுளி-கரும்பைமுறிக்கின்ற—களிறல்யானை-களிப்புப்பொருந்திய நல்லயானைகளையுடைய—கலிங்கநாடாளுமன்னன்-கலிங்கநாட்டையாளுகின்ற அரசன்—(எ-று) (கருத்து) இவன் கலிங்கதேசாதிபதி என்றுள் என்பதாம். (ாசஉ)

உளங்கனிந்தருகப்பைந்தார்க்காமனுமுவக்குஞ்சாய..... ✱
றுளங்கொளிமுத்தமூரற்முகைபோன்றிருந்தோன்றல் ... ✱
விளங்கிழைதினதுகண்போல்வேரிபங்குவளை பூத்த..... ✱
வளங்கெழுமருதவேலிவாரணவாசிமன்னன்.. ..... ✱

(இ-ள்) உளம்-மனமானது--கனிந்தருக-இளகியுருகும்படி—பைந்தார் பசியமாலையையணிந்த—காமனும்-மன்மதனும்—உவக்கும்-விரும்புகின்ற--சாயல்-சாயலையும்---துளங்கு-அசைகின்ற---ஒளி ஒளியையுடைய—முத்தமூரல்-முத்தையொத்தபற்களையுமுடைய—தோகை-தமயந்தியை---இங்கு-இங்கே—இருத்த-இருத்தலைப்பெற்ற—தோன்றல்-அரசனானவன்--விளங்கிழை-விளங்குகின்றவாபரணத்தையுடையாய்---நினது-உன்னுடைய—கண்போல்-கண்ணைப்போல்--வேரியங்குவளை-தேனையுடைய அழகியகுவளைமலர்கள்--பூத்த-பூத்திருக்கின்ற--வளங்கெழு-வளம்பொருந்திய—மருதவேலி-மருதநிலத்தையுடைய--வாரணவாசிமன்னன்-காஞ்சேயத்தரசன்—(எ-று) வாரணவாசியென்பதுவாரணவாசியெனமருவிற்று (கருத்து) இவன்காஞ்சேசாதிபதி என்றுள் என்பதாம். (ாசரு)

குவட்டிளமுலையினுய்நின்குழைமுகத்திங்கணோக்கு..... ✱
யுவட்டெடுத்துவகைவெள்ளமோங்கவீங்கிருந்தோன்றல் ✱
கவட்டடிக்கடவாட்மேதிகன்றுள்ளிப்பொழிந்தீம்பா..... ✱
றெவிட்டவுண்டன்னைதுஞ்சுஞ்செழும்புனற்சிற்றூவெற்றே ✱

(இ-ள்) குவடு-மலைபோன்ற--இளமுலை-இளமைபொருந்தியஸ்தனங்களையுடையதமயந்தியே--நின்-உன்னுடைய--குழை-குண்டலந்தையணிந்த—முகத்திங்களேஎன்று-மூகமாகிய சந்திரனைப்பார்த்து--உவட்டெடுத்து-பெருக்கெடுத்து--உவகை-மகிழ்ச்சியென்னும்--வெள்ளம் கடலானது--ஒங்க-மிகுந்தொலிக்க--ஈங்கிருந்த இங்கிருந்தலையுற்ற--தோன்றல்-அரசனானவன்--கவட்டடி-பிளப்பாகிய குளம்பையும்--கையாய்-பெரியவாயையுமுடைய--மேனி-எருமைகன்றுள்ளி-தன்கன்றைநினைத்து--பொழிந்த-சொரிந்த---தீம்பால்-தித்திப்புப்பாலை--தெவிட்டவுண்டு-நிறையவுண்டு-- அன்னந்தூங்கும்-அன்னப்பறவைதுயிலுகின்ற--செழும்புனல்- செழுமையுள்ளநீரையுடைய--கிந்தூவேந்து,-கிந்தூதேயத்தையாளுகின்றஅரசன்—(எ-று) ஏகாரம்-ஈற்றசை. (கருத்து) இவன் கிந்தூதேசாதிபதியென்றுள் என்பதாம். (ஈசூ)

பகட்டிளமுலையாயீங்குப்பயிதிரைப்பரவைவேலை.. ... ...*
முகட்டெழும்பரிதியெய்ப்பவீங்குறைமுழுவுதிதோளான், *
பொருட்டிமென்கமலவாவிப்பூம்புனலுழக்கிக்கொண்ட... *
லகட்டினில்வாளாதாவுமகன்பணைக்குதமேறே.....*

(இ-ள்)பகடு-யானைமத்தகம்போன்ற--இளமுலையாய்-இளமைபொருந்திபமுலையையுடைய தமயந்தியே—ஈங்கு-இவ்விடத்தில்--பயிரிலை-அலைகளையுடைய--பரவை-பரந்த--வேலைமுகட்டெழு-கடலுச்சிபிற்றோன்றிய—பரிதியெய்ப்ப-சூரியனேயொப்ப -- ஈங்குறை-இங்கிருக்கின்ற--முழவுதிதோளான்-மத்தளம்போன்றதோளையுடையவன்--பொருட்டி-கொட்டையையுடைய--மென்கமல -மெல்லியதாமரைமலரையுடைய--வாவி-தடாகத்திலுள்ள ---பூம்புனலுழக்கி-அழகுபொருந்தியநீரைக்கலக்கி--கொண்டலகட்டினில் -மேகங்களுடையவபிற்றினிடத்தில்--வாளாதாவும்-வாளாமீன்கள்தாவுகின்ற--அகன்பணை-அகன்றவயலையுடைய-குருதேயத்தாருக்குச்சிங்கமேற்றவெயாத்த அரசன்—(எ-று) (கருத்து) இவன்குருதேசாதிபதியென்றுள்ளென்பதாம். (ஈசூ)

வேலைனப்பிறழ்ந்துகூற்றவெல்லைவளர்வுகவென்று --- *
வோலைவிட்டிலவுங்கண்ணுதிக்குறையுலகீகாடோளான் ...*
சூலினாற்றலறிப்பைதீர்த்தன்றளிக்குமென்*கமலப்போதில•
வாலவளைமுத்தமீனும்வளவயன்மசசரிக்காவே .. .. *

(இ-ள்) வேலைனப்பிறழ்ந்து-வேற்படைபோலொளியைக்செய்து—கூற்றை-யமனை—வெல்லுமென்-வெற்றிகொள்ளுமென்--வருகவென்று-நீவாக்கடவாயென்று—ஏலிவிட்டு - அந்தயமனுக்குதூலை

யெழுதிவிட்டு—உலவும்-உலாவுகின்ற--கண்ணுய்-கண்களோயுடைய
தமையத்தியே—ஈங்குறை-இங்கேயிருக்கின்ற—உலங்கொள்-திரள்க
ளில்வலியைக்கொண்ட—தோளான்-புயத்தையுடையவன்—சூலு
ளாந்து-கருப்பவாசைப்பட்டு—அலறி-ஒலித்து—மைபந்தேன் பசி
யதேனை—துளிக்கும்-தெறிக்கின்ற—மென்கமலப்போதின்-மெல்
லியதாமரைமலரில்—வால்-வெண்மைபொருந்திய—வேல-சங்கங்க
ள்—முத்தமீனும்-முத்துக்களோப்பெறுகின்ற—வளம்-வளம்பொ
ருந்திய—வயல-கழனிகள்சூழ்ந்த—மச்சமோ-மச்சதேயத்தாருக்
கரசன்.--(எ-று) [* இலக்கணக்கொத்து ஒழிபியல்-க-சூ-பொ னு
வெழுத்தானுஞ்சிறப்பெழுத்தானு, மீமொழுத்தானுமியைந்துமொ
ழிபெயர்த்து,ம்பா துவெழுத்துள்ளும்பொதுவாய்த்திரிந்துந், தமி
ழ்ச்சிறப்பெழுத்தைத்தானுநதிரிந்து, மொழிமுதலிடைகடையெ
னுமூன்றிடத்துந்ந்தான்றனமுதலாவிகாரந்தோன்றியும், வருமே
தமிழ்தூல்வடமொழியென்க,இவ்விதியால்கமலம்வடமொழி.] (க
ருத்து) இவன்மச்சதேசாதிபதினன்ருள்ளன்பதாம். (நாசாரு)

சூடங்கயினெடியவாட்கட்கொம்பனையிருப்பைபம்பொன் *
மடங்கலாசனத்தின்மேயமணியெழுவனைதோளான் ... *
மூடங்ருவெணிடோட்டிக்கைகைதைமுருகுயிர்த்திரங்குந்தெண்
ணீர்த்-திடங்கடற்புலவுபோக்குந்தண்டிறைமகதநாடன் ...*

(இ-ள்) சூடங்கயின்-உள்ளங்கைபோல்—நெடியவாட்கண்-நீ
ண்டவாள்போலுங்கண்களோயுடைய—கொம்பனையீ-தமையத்தியே—
ஈங்கு-இங்கே—யைம்பொன்-பசும்பொன்னுற்செய்த — மடங்க
லாசனத்தின்-சிங்காசனத்தில்,மேய-பொருந்திய--மணியெழுவனை
ய-அழகிய எழுத்தாணையொத்த—தோளான் - புயங்களையுடைய
ன்—மூடங்கு-வீணவினையுடைய—வெண்டோட்டி-வெண்மைபொ
ருந்திய விதழையுடைய—கைதை-தாழைகளானவை—முருகுயிர்
த்து-வாசனையைவீசி—இரங்கும்-சத்திக்கின்ற—தெண்ணீர் - தெ
ளிந்தநீரையுடைய—திடம்-விசாலம்பொருந்திய—கடற்புலவு - க
டலினதுபுலாலுற்றத்தை—போக்கும்-நீக்குகின்ற— தண்மிறை கு
ளிர்ச்சிபொருந்திய குறையையுடைய—மகதநாடன்-மகததேசத்
தரசன்—(எ-று) (கருத்து) இவன்மகதநாட்டரசன் என்றுள்-எ-ம்,

கழையெனத்திரண்டமென்றோட்காமருகுவிளையுண்கட் ....*
பொழிகதிர்முத்தமூரற்பூங்கொடியிங்குவைகு... ... . *
மழிகவுட்கடாத்தசீற்றத்தண்ணலங்களிறுபோல்வான் - -*
மழைபகரிரஞ்சுமாடமலிகுறைநாடர்கோவே. - - - *

(இ-ள்) கழையென-மூங்கிற்போல்—திரண்ட-திரண்டிருக்கின்
ற—மென்றோள்-மெல்லியதோள்களோயும்—காமர்-அழகுபொருந்

நிய—குவளையுண்கண்—நீலோற்பலத்தழகையுண்டகண்களையும்—பொழிகதிர்-கிரணங்களைப்பொழிகின்ற—முத்தமுரல்-முத்தங்களையொத்தபற்களையுமுடைய—பூங்கொடி-தமயந்தியே—ஈங்குவைகும்-இங்கேதங்கிய—அழி-ஒழுகுகின்ற—கவுட்கடாத்த-மதமொழுகுகின்றகன்னத்தையும்—சிற்றத்த-கோபத்தையுமுடைய—அண்ணல்-பெரிய—களிறுபோல்வான்-யானையையொத்தசரணனவன்—மழைபகழி-மேகத்தின்வரிற்றை—உரிஞ்சு-தேய்க்கின்ற—மாடமலி உப்பரிகைகள்நெருங்கிய—குருநாடர்கோ-குருநாடர்க்கதிபதி—(எ-று)கழையென்பது-கரும்பெனினும் ஒக்கும் (கருத்து)இவண்குருநாட்டரசன் என்றுள்,எ-ம். (நாசா)

வடிநெடுங்கண்ணிபீடுகுவைகியமடங்கலன்னான்..... *
குடநிகர்செருத்தற்செங்கட் குவிமுலையெருமைதெண்ணீர்த்
தடவயலுழகவாளைதாவிமூப்புடைக்காய்தெங்கின் ... *
படிபழமுதிர்ச்சுஞ்சூழற்பல்லவதேயவேந்தே..... *

(இ-ள்) வடி-மாவடுபோன்ற—நெடுங்கண்ணி-நெடியகண்களையுடையதமயந்தியே—ஈங்கு-இங்கே—வைகிய-தங்கப்பெற்ற—மடங்கலன்னான்-சிங்கவேற்றையொத்தவன்—சூடநிகர்-குடத்தையொத்த—செருத்தல்-மதமையும்—செங்கண்-சிவந்தகண்களையும்—குவிமுலை-குவிந்தமுலையையுமுடைய—எருமை-எருமையானது—தெண்ணீர்-தெளிந்தநீரையுடைய—தடவயல்-விசாலம்பொருந்தியகழனிகளை—உழக்க-கலக்க—வாளை-அதனிலிழும்பியவாளைகள்—தாவி-பாய்ந்து—மூப்புடைக்காய்-மூன்றுபக்கமுள்ளகாயையுடைய—தெங்கின்-தென்னைமரத்தில்—பழ-உண்டாகிய—பழம்-பழங்களை—உதிர்க்கும்-உதிர்க்கின்ற—சூழல்-இடத்தையுடைய—பல்லவதேயவேந்து-பல்லவதேயத்தையாளுகின்றஅரசன்—(எ-று)எகாரம்-ஈற்றசைக்கண்வந்தது.(கருத்து)இவன்பல்லவதேயத்தரசன்எம்முள் என்பதாம். (நாசா)

பிள்ளைமாமேனிக்கியைபீடுகுவைகியபிறங்கற்றோளா..... *
னள்ளிலைக்கமலப்பள்ளிபாதிலரசிளவன்னங்காண..... *
வள்ளுகிறபிலிற்றுநீர்கண்காரிவரவெதிர்மயில்களாடக்..... *
கிள்ளைபாட்டயருஞ்சோலைக்கேகயநாட்டிவேந்தீன் .....*

(இ-ள்) பிள்ளைமான்-இளமான்பார்வையையொத்த---நோக்கிபார்வையுடையதமயந்தியே---ஈங்கு-இங்கே--வைகிய-தங்கப்பெற்ற--பிறங்கல்-மலையையொத்த--தோளான்-தோளையுடையவன்---அள்ளில்-நெருங்கியஇலையையுடைய---கமலப்பள்ளில்-தாமரைமே

லரிவிருச்கின்ற—அரசிளவல்லனங்காண-இளமைபொருந்திய அரச அல்லனம்பார்க்கும்படி—வள்-வளம்பொருந்திய—உறை-துளியை—பிலிற்றம்-துளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய--கார்-மேகங்களினுடைய—வரவெதிர்-வரவினையெதிர்ந்த---மயில்களாட- மயில்கள்கூத்தாட—குள்ளை - இளிப்பிள்ளைகள்—பாட்டயரும்- பாட்டைப்பாம்பு--சோலை-சோலைகள்சூழ்ந்த—கேகயநாட்டிவேந்தன்-கேகடநாட்டரசன்—(எ-று) (கருத்து) இவன் கேகயநாட்டரசன் என்றுள் என்பதாம். (ஈரைய)

கொல்லுலவேற்கணல்லாயிங்குறை கூவுதற்கோளான்..... *
மூல்லையம்புறவிற்சேதாமுலைவழியொழுகுநீம்பா..... *
வல்லியங்கமலவள்ளத்தரசிளவல்லனமாந்து..... .... *
மல்லலம்பழனஞ்சூழ்ந்தமத்திரதேயவேந்தன்..... .. *

(இ-ள்) கொல்லுலை-கொல்லனுலையிற்காய்ந்த--வேற்கண்-வேல் போன்றகண்களையுடைய—நல்லாய்-தகுயநத்தியே—ஈங்குறை-இங்கே பிருக்கின்ற—கூவுவு-திரட்சிபொருந்திய--தோளான் - தோள்களையுடையவன்—மூல்லையம்புறவில்-மூல்லைகளையுடைய அந்நிலத்தில்---சேதா-செவ்வியபசுக்களினுடைய—முலைவழி - முலையின்வழியே--ஒழுகுநீம்பால்-ஒழுகியநீத்திப்புப்பாலை-- அல்லியங்கமலவள்ளத்து-அகவிதழையுடைய தாமரைமலராகிய கிண்ணத்தில்—அரசிளவல்லனம்-இளமைபொருந்திய அரசவல்லங்கள்—மாந்தும்-உண்ணுகின்ற--மல்லல்-வளம்பொருந்திய--பழனஞ்சூழ்ந்த - வயல்களாற்சுற்றப்பட்ட--மத்திரதேயவேந்தன்- மத்திரதேயத்தையாளுகின்றவரசன்—(எ-று)(கருத்து)இவன்மத்திரதேயத்தரசன்என்றுள் என்பதாம். (ஈரஎ)

தாளதாமரையின்மேயதாக்கணங்கனையாயிங்குக்..... *
கோளரியென்னவைகுங்குருதிகொப்புளிக்கும்வேலான்... *
பாலவாய்க்கமுகிற்றுவிப்பலவின்முட்புறக்காய்சிந்த.....*
வாலயம்பகமிதாவும்வங்கநாடாளுமென்றேதை..... *

(இ-ள்) தாள-நாளத்தையுடைய—தாமரையின் - தாமரைமலரிலே--மேய-இருக்கின்ற---தாக்கணங்கனையாய்- இலக்குமியையொத்ததபத்தியே---ஈங்கு-இங்கே---கோளரியென்ன - சிங்கமேற்றலைப்போல--வைகும்-தங்கிய--குருதி - உதிரத்தை---கொப்புளிக்கும்-கொழிக்கின்ற--வேலான்-வேற்படையையுடையவன்---பாலவாய்-பாலைகள்வாய்ந்த—கமுகிற்றுவி-கமுகமரத்தின்மேற்றுவி-- பலவின் - பலாமரத்திற்காய்த்த---முட்புறக்காய் - முள்ளைப்புறத்திலேயுடையகாய்கள்---சிந்த-சிதற---வாலயம்பகமிதாவும்-ஆன்வாலை

வ்நாவுகின்ற--வங்கநாடாளும்வேந்து- வங்கதேயத்தையாளுகின்ற அரசன்—(எ-று)ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது.(கருத்து) இவன் வங்கதேயத்தரசன் என்றுள் என்பதாம். (நாடுஉ)

காப்பறப்பகியமென்றோட்கதிர்முலைத்துவர்வாய்த்தீஞ்சொற்
பாம்பிமல்குலீங்குலைகியபரிதிவேலான்.....*
றேம்பொதிகமலமேயவாள்வளைதிங்களென்ன.....*
வாம்பல்வாய்மலரும்வாவியங்கநாடாளும்வேந்தே.....*

(இ-ள்) சாப்புறம்-மூங்கிலையொத்த---பகிய பகியவாகிய--மென்றோள்-மெல்லியபோள்களையும்--கதிர்முலை - பிரகாசம்பொருந்தியமுலையையும்--துவர்வாய்-சிவந்தவாயையும்— தீஞ்சொல்- மதுரம்பொருந்தியசொல்லையும்—பாம்பிடை-பாம்பினையடுத்துள்ள-அல்குல்-அல்குலையுடையமயந்தியே—ஈங்குலைகிய-இங்கேதங்கிய—பரிதிவேலான்-சூரியன்போன்றவேலையுடையவன்---தேம்- தேனை உடை--பொதி-நிறைந்த--கமலமேய-தாமரைமலரிலிருக்கின்ற--வாள்வளை-வெண்சங்குகளை--திங்களென்ன - சந்திரனென்று--ஆம்பல்-அல்லிமுகைதன்--வாய்மலரும்-விரியும்--வாவி-தடாகத்தையுடைய—அங்கநாடாளும்-அங்கதேயத்தையாளுகின்ற--வேந்து-அரசன்—(எ-று)ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது.(கருத்து)இவன் அங்கதேயத்தரசன்என்றுள் என்பதாம். (நாடுஈ)

சிதரரிநெடுங்கணல்லாயிருகுறைதினிபொற்றோளான்.....*
கதிர்பயிகழனியூடுகணைத்தினவண்டிரிதேனும்.....*
புதிதுணைக்கமலப்போதுபுரிமுறுக்கவிழ்ந்தமாரு.....*
மதுமடைதிறந்துபாயும்வளங்கொள்பாஞ்சாலவேந்தே...*

(இ-ள்) சிதர்-பரவுகின்ற—அரி- செவ்வரிபாய்ந்த —நெடுங்கணல்லாப்-நெடியகண்களையுடையமயந்தியே—ஈங்குறை-இங்கேயிருக்கின்ற—தினி- வலிமைபொருந்திய—பொற்றோளான் - அழகியதோளையுடையவன்—கதிர்பயி - கதிர்களானிறையப்பெற்ற—கழனியூடு-வயல்களின்மேல்—கணைத்த-ஆரவாரித்த—இனம்- கூட்டமாகிய—வண்டிம்-வண்டினங்களும்—தேனும்- தேன்வண்டினங்களும்—புதிதுணை-புதிதாகவுண்ண---கமலப்போது-தாமரைமலர்கள்--புரி-கட்டுப்பட்ட---முறுக்கவிழ்ந்த-முறுக்குலடைந்த---மாரு- நீங்காத--மது-தேனை---மடைதிறந்த-மடையைத்திறந்த---பாயும்-பாய்கின்ற--வளங்கொள்-வளத்தைக்கொண்ட--பாஞ்சாலவேந்து-பாஞ்சாலம்என்னுமரசன்—(எ-று)ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது(கருத்து) இவன்பாஞ்சாலதேயத்தரசன் என்றுள் என்பதாம்.(நாடுஉ)

இழைபுனைமருங்குலின்னெயிறுமிறுமென்னவீங்கி.....*
யழகுவீற்றிருந்தபொம்மலணிமுலையாங்குலைகூர்... ....*
கொழுநிவண்டிமிருந்தாரான்மோனிலேதிரிந்தஞான்று... *
மழைவளஞ்சுரக்குஞ்செலவமலித்தகாந்தாரவேந்தே..... *

(இ-ள்) மூரி-வளைந்த—திரை-அலைபொருந்திய — பரவை-பரப்பையுடைய—வேலைமுகட்டெழுந்த - கடலினுச்சியிலுதித்த—அகல்வான்மேய-அகன்றஆகாயத்தின்கணுள்ள— விரிகதிர்மதியம்-விரிகின்றகிரணங்களையுடையசந்திரனை— நீண்மும்-தொடுகின்ற—வெள்ளெயிற்றரவமென்ன-வெள்ளியபல்லையுடையசர்ப்பம்போல்—குருதிகொப்புளிக்கும்-உதிரத்தையுமிழ்கின்ற— வேலான்-வேற்படைதாங்கியதானையனாகிய—கொற்றம் - சயத்தைத்தருகின்ற— வெண்குடையின்மீது-தவளசத்திரத்தின்மேல—வரிசிலைகுழைத்து நெடியவில்லைவளைத்து—வெய்ய-கொடிய— வடிக்கணையொன்றுகூரியகணையொன்றை—விட்டான்-விடுத்தனன்—(எ-று) (கருத்து) தானைமகததேயத்தரசன்மேல் கணைதொடுத்தான் என்பதாம். (சக)

சுரும்பிமிர்தும்பைவேய்ந்தசுடர்முடிமகதர்கோமான்.....*
விரும்பலர்சிதைக்குக்கும்வேலான்விற்பழுதுமிழும்வெய்ய*
சரபடவற்றுவீழ்ந்தகன்னுடற்குறைதின்றுட..... ... ...*
வாம்பரியோன்றுநோக்கியனியமணிமுரலவூதினான்.. ...*

(இ-ள்) சுரும்பு-வண்டுகள்—இமிர்-ஒலிக்கின்ற— தும்பைவேய்ந்த-தும்பைமாலைதரித்தவந்த — சுடர்முடி - கிரணங்களீவீசுகின்றகிரீடத்தையுடைய--மகதர்கோமான்-மகததேயத்தரசனுடையவன்--விரும்பலர்-சத்துருக்களை—செகுக்கும்-கொல்லுகின்ற--வேலான்

வேற்படையையுடையநளனது—விற்படைத்து - வில்லானதுபடைத்
தது—உயிர்ழும்-உயிர்ப்கின்ற—வெய்யசரம்பட-வெவ்வியபாணங்கள்
பட(அவைகளால்)—அற்றுவீழ்ந்த-துணிந்துவீழ்ந்த—தன்-தின்
னுடைய—உடற்குறை-கவந்தமானது—நின்று-நின்று—ஆட-கூ
த்தாட—அரம்பையரோடு-தெய்வமாதரோடு—நோக்கி-பார்த்து,
அணி-அழகிய—மணி-முத்தையொத்தநகைதோன்ற—முறுவல்பூ
த்தான்-நகைத்தனன்—(எ-று),(கருத்து) நளன்கணைபட்டு மகத
தேயத்தரசனிறந்தான்,எ-ம். (சுஉ)

அமைப்பருந்தகட்சீற்றத்தாளரியேறுபோல்வான்..... *
சமர்த்தலையிகலினற்றதரியலர்சென்னிவீழத்..... *
குமித்திடுங்குருதியொள்வாள்சுடரொழிதிப்பட்நாக்கி .. *
யிமைத்தலும்வளவர்கோனேவெருவனீயேகுகென்றான்... *

(இ-ள்) அமைப்பரும்-அமைத்தற்கரிய—தறுகண்-அஞ்சா
மையையும்—சீற்றத்து-கோபத்தையும்—ஆர்-ஆளுகின்ற—அரி
யேறுபோல்வான்-சிங்கமேற்றையொத்தநளனவன்—சமர்த்தலை
யுத்தகளத்தில்—இகலினேற்ற- பகையினுலெதிர்த்த—தரியலர்-சத்
துருக்களுடைய—சென்னிவீழ-தலைகள்விழும்படி—குமித்திடும்-
தறித்திடுகின்ற—குருதி-உதிரத்தையுடைய—ஒள்வாள்-ஒள்ளியவா
ட்படையை—சுடரொழி-ஒளிதானும்ப—விதிர்ப்ப-அசைக்க—நோ
க்கி-அதுகண்டு—இமைத்தலும்-இமைக்கோட்டிமளவில—வளவர்
கோனை-சோழனை—வெருவல்-அஞ்சாதே—நீ-நீ—எதுகென்றா
ன்-போவென்றான்—(எ-று) (கருத்து) நளன்வாளைவைக்கண்
டு சோழன்பயந்து இமைகோட்டலுமதைக்கண்டநளன்சோழனை
அஞ்சாதேபோவென்றான் என்பதாம். (சக)

கொய்யுளைப்புரவிதூண்டிக்கொடுமரங்குழையவாங்கி ... *
வெய்யவெம்பகழிமாரிவிண்ணகம்புதைப்பதூவி... ... *
யையன்மெய்க்கவசமீதுமைங்கணைசிதறியார்த்தான்..... *
மையறுசிறப்பின்மிக்கவஞ்சியம்பதிக்குவேந்தே... . ... *

(இ-ள்) மையறு-குற்றமற்ற—சிறப்பின்மிக்க - சிறப்பினுலு
யர்ந்த—வஞ்சியம்பதிக்கு - வஞ்சியென்னுநகரத்திற்கு—வேந்து-
அரசனுகியசேரமான்—கொய்யுளை-கொய்துகட்டிய புறமயிரினை
யுடைய—புரவி-குதிரையை—தூண்டி- செலுத்தி—கொடுமரம்-
வில்லை—குழையவாங்கி-வளையவளைத்து—வெய்ய- கொடிய—வெ
ம்பகழிமாரி-வெவ்வியபாணமழைகளை—விண்ணகம்- ஆகாயமுழு
வதும்—புதைப்ப-மூடும்படி—தூவி-இறைத்து—ஐயன-நளனு
டைய—மெய்க்கவசமீதும்-சரீரவின்மேலும்—ஐங்கணைதூவி- ஐ

நீதுபாணம்விட்டு—ஆர்த்தான்-கர்ச்சித்தான்—(எ-று) (கருத்து)
சேரமான் நளன்மெய்க்கவசத்தின்மே லங்கணைவிடித்தான், எ-ம்.

சில்லியந்தடந்தேருந்திதிண்சிலைகுழையவாங்கிக்..... *
கொலலியவெழுந்தகூற்றிற்கொடியவெம்பகழிதூவி..... *
மல்லடுதோளுமார்பும்வழிபெருங்குருதியோடும்..... .. *
வில்லவன்வெருவியோடவெஞ்சமமுடற்றினானே..... *

(இ-ள்) சில்லி-உருளையையுடைய—தடம்- விசாலம்பொருந்திய—தேருந்தி-தேரைசெலுத்தி—திண்- வலிமைபொருந்திய—சிலை-வில்லை—குழையவாங்கி- வளையவளைத்து—கொலலியவெழுந்த-கொல்லவெழுந்த—கூற்றில்-இயமன்போல்—கொடிய-கொடியவாகிய—வெம்பகழி வெவ்வியபாணங்களை—தூவி- விட்டு—மல்லடு-மற்போர்செய்கின்ற—தோளும்-புயங்களிலும்—மார்பும்-மார்பிலும்—வழி-வழிகின்ற—பெருங்குருதியோடும் - அதிக உதிரந்தோடும்—வில்லவன்-சேரமான்—வெருவியோட - அஞ்சியோடும்படி—வெஞ்சமம்-வெவ்வியபோரை—உடற்றினான்- செய்தான்—(எ-று) (கருத்து) சேரமான்பயந்தோட நளன் போர்செய்தான்-என்பதாம். (கூடு)

நிறங்கிளர்வைரப்பைம்பூணிடதோள்கோன்றொடித்தகோலிற் *
கறங்கெனத்திரியும்வெய்யகலினமான்றடந்தேர்வீழ..... *
மறங்கிளர்பரிதிவேலுமானமுந்துறந்தநாணும்..... *
புறங்கொடுத்திரியல்போனல்புட்கரத்தீவிலம்வந்தன்..... *

(இ-ள்) புட்கரத்தீவில்வேந்தன்- புட்கரத்தீவையாளுமரசனவன்—நிறங்கிளர்-ஒளிவிளங்குகின்ற —வைரப்பைம்பூண - வச்சிராபரணத்தையுடைய—நிடதர்கோன்-நளமஹாராஜன்—தொடித்த-பிரயோகஞ்செய்த—கோல்-பாணத்தால்—கறங்கெனத்திரியும்-காற்றுழிபோற்றிரிகின்ற—வெய்ய-வெவ்விய—கலினமான்-கழிவாளமபூண்டகுதிரைகட்டிய—தடம் - விசாலம்பொருந்திய—தேர்வீழ-ரதம்விழ—மறங்கிளர்-மறமிகுந்த—பரிதிவேலும்- சூரியனைபொத்தவேற்படையையும்—மானமும் - அபிமானத்தையும்—துறந்து-விட்டு—நாணல்-நாணத்தால்—புறங்கொடுத்து- முதுகுகாட்டி—திரியல்போனல்-ஓடிப்போனான்—(எ-று) (கருத்து) புட்கரன்நளனுடனெதிர்த்தோடினன் என்பதாம். (கூசு)

(கலிவிருத்தம்.)

பாகடிவெந்திறற்பரு மயானைமேல்..... .....*
வேகவெங்கலினமாவெள்ளஞ்சூழ்வரச்..... *
(சஅ)

சாகத்தீவுக்கிறைசமரிளூர்ப்பொடு..... ... *
தோகையர்*கண்ணெனப்பகழிதூவினன்..... *

(இ-ள்) பாகு-பாகனை—அடி-கொல்லுகின்ற—வெந்திறல்-வெவ்வியதிறலையுடைய—பருமயானைமேல்-ஒப்பனைசெய்த யானையின்மேல்—வேக-வேகத்தையுடைய--வெங்கலினமாவெள்ளம்-வெவ்வியகடிவாளம்பூண்டகுதிரைக்கூட்டங்கள்—சூழ்வர-தன்னைச்சூழ்ந்துவரும்படி—சாகத்தீவுக்கிறை-சாகத்தீவுகரசனைவன்---சமரிளூர்ப்பொடும்-யுத்தத்திளூரவாரத்துடன்--தோகையர்கண்ணெனமாதர்விழிகள்போல்—பகழி பாணங்களை—தூவினன்-சிந்தினன்—(எ-று) * அகத்தியம்-உவமேயமதனையுவமானமாக்கல்-விமோசனியில்வீறுமென்க. (கருத்து)சாகத்தீவரசன் பாணம்தொடுத்தான் என்பதாம். (கூள)

துணங்கையிட்டலகைகடுள்ளியார்த்தெழ ..... *
வணங்கெயிற்றரவெனவழலும்வாளிகள்... ... *
வணங்குவிற்கால்களூத்தெய்துமாற்றினு . ... *
ணிணங்கமழ்குருதிவேனிடதர்வேந்தனே... ... *

(இ-ள்) துணங்கையிட்டு - கையைக்கொட்டி—அலகைகள்-பேய்கள்—துள்ளி-குதித்து—ஆர்த்து - ஒலித்து—எழ-எழும்ப—அணங்கு-வருத்தத்தைச்செய்கின்ற—எயிற்று-பல்லையுடைய--அரவென-சர்ப்பம்போல்—அழலும்-சுடுகின்ற—வாளிகள் - பாணங்களை—வணங்கு-வளைகின்ற—வில்-வில்லை—கால்வளைத்து - காலிலுன்றிவளைத்து—எய்து-பிரயோகஞ்செய்து—மாற்றினன்- நீக்கினன்—நிணங்கமழ்-கொழுப்புநாறுகின்ற—குருதி-வல்-உதிரத்தோய்த்தவேற்படையையுடைய—நிடதர்வேந்தன்-நளமஹாராஜன்--(எ-று) ஏகாரம் ஈற்றசைக்கண்வந்தது. (கருத்து) சாகத்தீவரசன் பாணங்களை நளன்விலக்கினன் என்பதாம். (கூஅ)

பாற்றினந்தொடர்வதுபகைவரூன்சுவைத்.....*
தூற்றிருந்நிடையருதிரங்காலுவது.....*
கூற்றெறிந்தோழமைகொள்வதாயதோர்..... *
மாற்றரும்கொடியவேன்மன்னன்வாங்கினன். *

(இ-ள்) பாற்றினந்தொடர்வது-பருந்துகூட்டங்கள்தொடர்வதும்—பகைவர்-சத்துருக்களுடைய—உளன் - மாமிசத்தை—சுவைத்து-மென்று—உளற்றிருந்து - உளற்றுகவிருந்து—இடையருது-ஒழியாமல்—உதிரங்காலுவது - உதிரங்கக்குவதும்—கூற்றெறிம்-இயமனுடன்—தோழமைகொள்வதாயது-சினேகங்கொள்வதாகியதுமாகிய—ஓர்-ஒரு—மாற்றரும் - தடுப்பதற்கரிய—கொடிய

வேல்-கொடியவேற்படையை—மன்னன்-நளனுவன்--வாங்கினன்-ஈகைக்கொண்டான்—(எ-று) (கருத்து) நளன் வேலாயுதத்தைக் கைக்கொண்டான்,எ-ம். (ஞகூ)

அயிலெடுத்தெறிதலுமடர்க்குமொன்னலார்... *
வயிறெரிதழற்றிதுவரவாட்படை..... .... *
செயிறரவேந்திய*சாகத்தீவிறை.....*
யுயிர்கூறந்தத்தகனுலகம்புக்கதே..... *

(இ-ள்) அயிலெடுத்தெறிதலும்-வேற்படையையெடுத்துவீசியவளவில்—அடர்க்கும்-பொருகின்ற—ஒன்னலார்-பகைவருடைய—வயிறு-வயிறுனது—எரி-நெருப்பிலுல்—தவழ்ந்தது-தவழ்ந்திடப்பட்டது--வைரவாட்படை-வச்சிரவாளை---செயிறர-குற்றமற—ஏந்திய-தாங்கப்பெற்ற--சாகத்தீவிறை- சாகத்தீவுக்கரசனுடைய--உயிர்-உயிரானது--துறந்து-அவனைவிட்டு---அந்தகனுலகம்-இயமலோகத்தில்--புக்கது-புகுந்தது—(எ-று) * அகத்தியம்- புறத்திணைப்படலம்-போரினிலநீதியாப்புறங்கொடுத்திட்டவன்- சாரும் யமபுரிதவறுதலிலவே-இவ்விதியால் போரில்வென்கொடித்தவனுவி சுவர்க்கம்புகது யமபுரியிற்புகுந்தது. (கருத்து) சாகத்தீவரசனுயிர் யமலோகஞ்சென்றது என்பதாம். (ருய)

தூம்புடைக்கரமலையெருத்திற்றேன்றுபு..... *
காம்பிலிக்கரசன்வில்வாங்கிக்காய்கணை..... *
தேம்பொதிசெழுமலர்த்தெரியன்மார்பினுன்...*
வாம்பரித்தர்மிசைமழையிற்றூவினுன்..... *

(இ-ள்) தூம்புடை-துவாரத்தையுடைய—கரமலை-கையையுடையமலைபோன்றயானையினது--எருத்தில்- பிடரியின்மேல்--தேன்றுபு-தோன்றி--காம்பிலிக்கரசன்-காம்பிலிநாட்டிக்கரசனுனவன்—வில்வாங்கி-வில்லைவளைத்து--காய்-கொல்லாநின்ற--கணை- பாணங்களை--தேம்-வாசனை--பொதி-நெருங்கிய--செழுமலர்-செழுமையுள்ளமலராற்றொடுத்த--தெரியல்- மாலையையணிந்த--மார்பினுன்-தனது--வாம்-தாவுகின்ற--பரி-குதிரைகட்டிய--தேர்மிசை- தேரின்மேல்--மழையில்-மேகம்போல்--தூவினுன்- பிரயோகித்தான்--(எ-று) (கருத்து) காம்பிலிதேயத்தரசன் நளனது தேர்மேற் கணை தொடுத்தான் என்பதாம். (ருக)

சிலையுயிர்த்துயிர்ப்பவிகலருத்திண்கணை.....*
கொலைவடிவேலினுன்றுரப்பக்குஞ்சர ..... *
மலையெனக்கவிழ்தலுமடங்கலேறனைப்..... *
புலவுவாளொடுமவன்புயியிற்பாய்ந்தனன்.....*

(இ-ள்) சிலையுயிர்த்து-வில்லால்விடப்பட்டு—உயிர்ப்பலிகவரும்-உயிராகியவுணவையுண்கின்ற—திண்கணை- வலிமைபெற்றபாணங்களை--கொலைவடிவேலினன்-நளனுனவன்—துரப்ப-செலுத்த--ருஞ்சரம் (எறிவந்தான்) யானையான-து---மலையெனக்கவிழ்ந்தலும்-மலைபோற்கவிழ்ந்துவீழ்ந்தவளவில்--மடங்சலேறென- சிங்கவேற்றைப்போல்--புலவு-புலாலுற்றதீஞையுடைய— வாளொடும்- வாட்படையுடன்—அவன்-அவ்வரசனவன்--புவியில்- பூமியிலே—பாய்ந்தனன்-குதித்தான்—(எ-று) (கருத்து) நளன்பாணம்விடிக்கயானைவிழவும்,காம்பிலிதேயத்தரசன்நிலத்திற்குதித்தான் என்பதாம்.

வார்மயிர்க்கேடகம்பற்றிவாள்விதிர்த்..... *
தூர்கிணக்களிற்றணியுழக்கியொப்பெனப்..... *
போர்முகத்துரதிவெம்புலியின்போத்தெனச் *
சாரிகைதிரிந்தனன்றுகளுளனே..... *

(இ-ள்) வார்-நெடிய--மயிர்க்கேடகம்-மயிரையுடையதோற்கேடகத்தை—பற்றி பிடித்து-- வாள்விதிர்த்து-வாளை பகைத்து—உளர் நடக்கின்ற---ஈனம்-கோபத்தையுடைய--களிற்றணி- யானைவகுப்பை- உழக்கி-கலக்கி--ஒப்பென- விரைவில் -போர்முகத்து-யுத்தமுகத்தில்--உரறி-கர்ச்சித்து--வெம்புலியின் போத்தென -வெப்பயபுலிப்போத்துப்போல்—சாரிகைதிரிந்தனன் - வட்டமாகத்திரிந்தான்--தூறுகளுளன்- அஞ்சத்தக்கவகட்கு அஞ்சாதகாம்பிலிதேயத்தரசனவன்—(எ-று) (கருத்து) காம்பிலிதேயத்தரசன் கேடகம்பற்றி வாளையசைத்து வட்டமிட்டுஉலாவினன்என்பதாம்.(நாகு)

பாரினின்றவனமர்புரியப்பாய்பரித்..... *
தேரினின்றுங்கணைச்செருவிளைத்திட ..... *
ரூருடையவர்போர்த்தருமமன்றெனக்..... *
* கூர்துரிவாளரூரிக்குப்புற்றனனோ..... *

(இ-ள்)பாரினின்று-பூமியிலிருந்து—அவனமர்புரிய- அவ்வரசன்போர்புரிய—பாய்-தாவுகின்ற—பரித்தேரினின்று-குதிரைகட்டியதேரிலிருந்து—அங்கணை-கொல்லாநின்றபாணங்களைக்கொண்டு—சேருவிளைத்திடல்-யுத்தஞ்செய்தல்—தாருடை - வெற்றிமாலையையணிந்த--வயவர்-படைவீரருடைய—போர்த்தருமமன்றென-யுத்தத்தினுடையதருமமன்றென்று--கூர்-கூரிய--துரி- துளையையுடைய--வாளரூரி-இவ்வாளையுருவிக்கொண்டு--குப்புற்றனன்-குதித்தான் (எ-று) அரோவென்பது-அசை.* அகத்தியம்-புறத்திணைப்படலம்
தார்முழுமன்னர்சமருப்படைகொடு-போர்முடிப்பற்றம்பொருந்

தூறுமறனே-இவ்விதியால் நளன் அறநெறிதவறு தொழிலினாலன், (கருத்து) நளன்வாளையெடுத்துத் தேரைவிட்டிறங்கினான், எ-ம்.

மன்பெருங்கேடகந்தோள்மாவிடை . . . . . *
மின்பிறழ்ந்தனவாள்விரித்தோக்கினை . . . *
மொன்புறக்குன்றுடைந்தரியேவர்நவர்... ...*
வென்பிறழ்நிலைதிறலகொள்விரோ..... .. *

(இ-ள்) மன்-நிலைபெற்ற--பெரும்கேடகம்-பெரிய பரிசையை--தோள்-சுமற்றி--வானிடை-ஆகாயத்தில்கண்—மின்பிறழ்ந்தனன்ன-மின்னலடிக்கும்போல்—வாள்விரித்து-வாட்படையைய சைத்து--நோக்கினர்-பார்த்தவர்களுடைய--என்பு-எலும்புகள்—நெக்கு-நெக்குவிட்டு--உள்-உள்ளே—உடைந்தரிய-உடைந்தழியும்படி--வெற்றம்முறுகை--பிறர்-பிறர்களால்—அறிகிலா-அறியப்படாத--திறல்கொள்-வலிமையைக்கொண்ட--வீரர்-அரசர்கள்—ஏற்றனர்-எதிர்த்தனர்—(எ-று) (கருத்து) அரசர்களெதிர்த்தார்கள் என்பதாம். (குஎ)

நெறுஞ்சினந்தலைக்கொளீஇச்செங்கண்மடியுகப் *
பிறங்குபொற்கேடகம்பிறழவெற்றிய..... *
மறங்கிளர்வைரவாள்வாளிற்ருக்கியும்... .. .. *
கறங்கெனதிரிந்தனர்காளைவீரரே..... ..... *

(இ-ள்) நெறும்-அழிக்கின்ற—சினம்-கோபமானது—தலைக்கொளீஇ-அதிகரித்து—செங்கண்-சிவந்தகண்களினின்றும்—தீயுக-நெருப்புபுதிர—பிறங்கு-உயர்ந்த--பொற்கேடகம்-அழகியகேடகத்தை—பிறழ-நீங்கும்படி—எற்றியும்-எறிந்தும்—மறங்கிளர்-கொலைத்தொழிலமிகுந்த—வைரவாள்-வச்சிரவாளை—வாளிற்ருக்கியும்-வாளினாலெறிந்தும்—கறங்கென-காற்றடிப்போல்—காளைவீரர்-அரசர்கள்—திரிந்தனர்-திரிந்தார்கள்—(எ-று) (கருத்து) அரசர்கள் வாளினாற்போர்செய்தார்கள் என்பதாம். (குசு)

கோட்புலிப்போத்தெனநிடதர்கோமகன்..... *
ஞாட்பினுட் * காம்பிலிக்கிறைவனுமற.....* *
வாட்படையெறிந்தயிர்வவ்வினனவன்..... *
சேட்புலத்தரம்பையர்தெரியல்சூடினன்... ... *

(இ-ள்) கோள்-கொலைசெய்கின்ற—புலிப்போத்தென-ஆண்புலிபோல்--நிடதர்கோமகன்-நளனவன்--ஞாட்பினுள்-யுத்தத்தினகண்—காம்பிலிக்கிறைவன்-காம்பிலிநாட்டுக்கரசனுடைய—நாமற-நாமமறும்படி—வாட்படை-வாளாயுதத்தால்—எறிந்து-வீசி—உயிர்-ஆவியை—வவ்வினன்-கொண்டான்--அவன்-அவ்வரசன்--சேட்புலத்து-விண்ணுலகத்தின்கண்—அரம்பையர்-தெய்வமங்கை

யரால்—தெரியல்-மாலை—சூடினான்- சூடப்பட்டான்—(எ-து) நாமம்-நாமென்னக்கடைகுறைத்தது.[* அகத்திரும்- புறத்திணைப்படலம்.]வெற்றிபெற்றிறந்தோன் வீரசொர்க்கம்புகும்.இவ்விதியால் சுவர்க்கத்திற்குப்போனான் (கருத்து) நளன் காம்பிலிதேயத்துவேந்தனைக்கொன்றான் என்பதாம். ☞ போரின்மாய்ந்தோர்சுவர்க்கம்புகுவதொன்பது புராணஇதிகாசம். (இஎ)

அறைகழல்வேந்தர்மேலலங்கல்வேலினு... ... *
னெறுழ்வலிக்களிற்றிடைத்தாவுமெணையிலா... *
நொறில்பரிதேர்மிசைப்பாயுதோன்கெழு... ..*
சிறையொடுநிரிவதோர்சீயமென்னவே... ...*

(இ-ள்) அலங்கல்-வெற்றிமாலைதரித்த--வேலினன்-வேற்படையையுடையநளனுனவன்—தான்-கெழு- பெருமைபொருந்திய—சிறையொடுநிரிவது சிறகினுடன்திரிவதாகிய— ஓர் ஒரு—சீயமென்ன-சிங்கம்போல்—அறை-ஒலிக்கின்ற—கழல்-வீரக்கழலையணிந்த—வேந்தர்மேல்- அரசர்கள்மேலும்—எறிழ்வலி-மிகுதத்தவலிமையையுடைய—களிற்றிடை-யானையின்மேலும்—தாவும்-தாவுவான்—எணையிலா-அளவில்லாத—நொறில்-ஓலியையுடைய—பரி-குதிரைமேலும்—தேர்மிசை-தேரின்மேலும்—பாயும்-பாய்வான்—(எ-று) (கருத்து) நளன் அரசர்கள்மேலும்,யானைகள்மேலும்,குதிரைகள்மேலும்,தேர்களின்மேலும்பாய்வான் என்பதாம். (இஅ)

ஈன்னணங்கொடுஞ்சமர்முருக்கியேற்றிகன் ... *
மன்னவர்புறக்கொடைகண்டுமாலைதாழ்... ...*
கொன்னவில்குருதிவேற்குவவுத்தோளினன் .. *
சென்னிவான்றடவுபொற்றேரினேறினன்.....*

(இ-ள்) ஈன்னணம்-இந்தப்பிரகாரம்— கொடுஞ்சமர்-கொடியயுத்தத்தில்--முருக்கி-கொன்று--ஏற்று-எதிர்த்து-- இகல்-பகைக்கின்ற—மன்னவர்-அரசர்கள்—புறக்கொடைகண்டு-முதுகுகொடுத்தோடச்செய்து—மாலைதாழ்-மாலைதாழ்கின்ற—கொன்னவில்-கொல்லுதலைச்சொல்லுகின்ற—குருதி-வுதிரந்தோய்ந்த — வேல்-வேற்படையையுடைய—குவவுத்தோளினன்- திரட்சிபொருந்திய தோள்களையுடையநளனுனவன்—சென்னி-தலையினால்— வான்-ஆகாயத்தை—தடவு-தடவுகின்ற—பொற்றேரின் - அழகியதேரின் மேல்—ஏறினன்-ஏறினான்--(எ-று) (கருத்து) நளன்வெற்றிகொண்டுதேர்மேலேறினான் ,எ-ம். (இக)

(கொச்சகக்கலிப்பா.)

புலத்தலுமடநல்லார்புலவிதீர்தரச்சூட்டி..... ... ...*
மலர்த்தகமலர்க்குஞ்சியழிகுருதிப்புனலிலப்ப..... ... ...*

மலிதிரடந்திணிதோளாரிவடிக்கணெமையிற்போர்ப்பக் ...*
கொலைதகுமுண்மாப்போற்கொடுஞ்சமத்திற் கிடந்தனரே.

(இ-ள்) மடநலியார்-மாதர்கள்--புலக்கலும்-ஊடியிவளவில்--புலவி வவ்வுதல் — தீர்தர-நீக்குமாறு — சூட்டும்- அணிவிக்கும் — அலத்தகம்-அவர் பாதங்களினூட்டப்பெற்றசெம் பஞ்சுபடிந்த — மலர்-பூவையணிக்க — சூருஞ்சூரிமையை — ஏழி-அழிகின்ற — குருதிப்புனல்-உதிரநீரான — ஆலிப்ப-குமிழ்க்க — மலை- மலைபோல் — தடம்-பருத்த — திணி-வலிமைபொருந்திய — தோளார்-தோளையுடையவராகிய — வடிக்கணெ-கூரியபாணங்கள்--மெயிற்போர்ப்ப-தேகத்திலேமூட — கொலைதகுலை-கொல்லுதின்றதலையையுடைய — மூண்மாப்போல்-மூள்ளம்பன்றிபோல் — கொடுஞ்சமத்தில்-கொடியயுத்தகளத்தில் — கிடந்தனர்-கிடந்தனர் — (எ-று) (கருத்து) அரசர்கள்மெய்யிற்பட்டகணையாமுள்ளம்பன்றிபோற் போர்க்களத்திற்கிடந்தார்கள் ,எ-ம்- (கூய)

இகன்மிகுதிறல்வேந்தரோதியாற்களப்படுத்த.....*
புகர்முகக்கடாயானெபொழிகுருதிச்செழுஞ்சேற்றில்.....*
நிகரியகொடிஞ்சிநெடுந்தேருழக்கத்துகளெழுந்தவ்... ...*
வகலிருவிசும்புபோரிற்றந்திவான்போன்றதுதேவ..... .....*

(இ-ள்) இகன்மிகு-பகைமைமிகுந்த — திறல்-வலிமைபொருந்திய — வேந்தர்-அரசர்கள் — எதியால்-வாட்படையால் — களப்படுத்த-யுத்தகளத்திற்கொன்ற — புகர்முகக்கடாயானை- புள்ளிபெற்றமுகத்தையுமதத்தையுமுடையயானைகள் — பொழி-ஊற்றிய---குருதிச்செழுஞ்சேற்றில்-செழுமைபொருந்திய உதிரச்சேற்றில்--திகிரிய-உருளைகளையுடையனவும்--கொடிஞ்சி-மேன்மொட்டையுடையனவுமாகிய — நெடுந்தேர்-நெடியதேர்கள் — உழக்க-கலக்க — துகள்-தூளிகள் — எழுந்து-எழும்பி — அவ்வகலிருவிசும்பு-அந்தவகன்மூள்ளெபரியஆகாயத்தை — போர்த்து-மூடிக்கொண்டு--அந்திவான்-செவ்வானத்தை — போன்றது ஒத்தது--(எ-று) (கருத்து) போர்க்களமுதிரத்தாற்செவ்வானத்தையொத்திருந்தது ,எ-ம். (கூக)

ஒளிகிளர்மணியோடைகிதைத்தொழியவுடன்றபோர்க் ... *
களிகினமால்யானைக்கதிர்மருப்புமிழ்ந்தது..... ... ...*
மூளிதடஞ்சிணைமேயமுருங்கெரியெனப்பற்றி..... ...*
விளிதருவயவருடல்வெந்தொழியப்பரந்ததே..... ... ...*

(இ-ள்) ஒளிகிளர்-பிரகாசமிகுந்த — மணியோடை - அழகிய முகபடமானது — கிதைத்து-கெட்டி — ஒழிய - நீங்க — உடன்ற-

வெருண்ட—போர்-யுத்தத்தில்—களி,- செருக்கையும்--சினம்-கோ பத்தையுமுடைய—மால்-பெரிய—யானை- யானைகளுடைய—கதி ர்-பிரகாசம்பொருந்திய—மருப்பு-தந்தங்கள்—உமிழ்ந்த - சொரி ந்த—தீ-தெறுப்பான து—மூளி-காய்ந்த—தடம்-பருத்த—சினை- கிளைகளை—மேயும்-தகிக்கின்ற—முருங்கெரியென-அழியுந்தீயை ப்போல்—பற்றி-பற்றிக்கொண்டு—விளிதரு - இறந்த—வயவருட ல்-படைவீரருடையதேகங்கள்—வெந்தொழிய - வெந்துபோகும் படி—பரந்தது-பரவியது—(எ-று)ஆல்-அசை.(கருத்து) யுத்தக ளத்தில்யானைக்கொம்பிற்பிறந்தநீயானது அரசர்களுடல்வெந்தெரி யும்படிபரவியது,எ-ம். (கூஉ)

பரிதிவடிவாள்பிடித்துப்பல்லிலுளிதழுதுக்கித்... ... *
திருகுசினத்தலைக்கொளீஇச்செங்கண்கடீயுமிழக் .. *
குருதிபாயபிகளத்திற்குற்றுயிரிற்கிடந்தார்க்கண் ... *
டருகணையக்கொடுங்*கூற்றமஞ்சிநின்றலறுமால்... *

(இ-ள்) பரிதி- சூரியன்போன்ற—வடி- கூரிய—வாள்- வாட்ப டையை—பிடித்து-கையிற்பற்றி—பல்லினுல்-பற்களினுல்---இதழ தூக்கி-உதட்டைக்கடித்து—திருகு-மாறுபட்ட—சினம்-கோபம் —தலைக்கொளீஇ-அதிகரித்து—செங்கண்கள் - சிவந்தகண்களான வை—தீயுமிழ-தெறுப்பைச்சொரிய—குருதிபாய்- உதிரம்பரவிய —அதிகளத்தில்-கொலைக்களத்தில்—குற்றுயிரில்-குற்றுயிருடன்--- கிடந்தார்க்கண்டு-கிடந்தவர்களைக்கண்டு—அருகணைய - அவர்களரு கேவருதற்கு—கொடுங்கூற்றம்- கொடியயமனும்—அஞ்சிநின் று-அச்சமுற்றுநின்று—அலறும்-அலறுவான்—(எ-று)ஆல்-அசை நிலை. * அகத்திடம்-புறத்திணைப்பலடம் - கனத்திரண்மடியக்கானி லச்சம்மே - இவ்விதியால் இறந்தவரைக்காண்டலேயச்சம் இறவா து வீரக்குறியுற்றவனைக்காணிலயமனுக்கச்சந்தான்.(கருத்து)வா ளைக்கையிற்பிடித்துப் பல்லாலிதழைக்கடித்துக் கோபங்கொண்டு கண்ணிலே தெறுப்புப்பொறிபறக்கக் குற்றுயிரோடு போர்க்களத் திலிருக்கும் வீரரைக்கண்டயமன் அருகிற்போகப் பயப்படுவான் என்பதாம். (கூங)

சிலைபொருசினிதடந்தோட்டேர்வேந்தர்செருமலைந்து... *
கொலைபுரியபிகளத்திற்குடர்பின்னிகிடந்ததனைப்........ *
புலவுநாடற்றலைவேட்டுண்னவரும்புள்ளினங்கள்..... *
வலைவளைத்ததெனவெண்ணிவானினிடைச்சுழலுமால்... ...*

(இ-ள்) சிலைபொரு-மலையையொத்த—தினி- வலிமைபொரு ந்திய—தடந்தோள்-பருத்ததோள்களையுடைய—தேர்வேந்தர்- தே

னையுடையவரசர்கள்—செருமலைந்து-போர்செய்து—கொலைபுரி-
சொலைசெய்து—அடுகளத்தில்-யுத்தகளத்தில்—குடர்-குடர்கள்—
பின்னிக்கிடந்தனை-ஒன்றோடொன்றுபின்னிக்கிடந்ததை—புலவு
நாறு-புலாலுற்றநாறுகின்ற—உடற்றலை-தேகத்தின்மாமிசத்தை
—வேட்டி-விரும்பி—உண்ணவரும்-உண்பதற்குவந்த—புள்ளினங்
கள்-பறவைகூட்டங்களானவை—வலைவளைத்தென-வலையானது
வளைந்தென்று—எண்ணி-நினைந்து—வானினிடை-ஆகாயத்தின்
கண்—சூழலும்-வட்டமிடும்—(எ-று) ஆல்-அசை. (கருத்து) உளனு
ண்ணவந்த பறவைகள் குடல்கள் பின்னிக்கிடக்கின்றனவற்றைவலை
யென்றெண்ணி ஆகாயத்தில் வட்டமிடும் என்பதாம். (சுச)

சீற்றமிகுங்களியானைத்திறல்கெழுபோர்வயவேந்தர் .....*
காற்றரளக்குடைதுணித்துகளத்தினிடைக்கிடப்பனகை.... *
ளேற்றெருமைபுகுத்தடருமிருணிறத்தவெரிகுஞ்சிக்..... *
கூற்றமுயிர்ப்பலியேற்றுங்கொள்கலம்போன்றிருந்தனகே.*

(இ-ள்) சீற்றமிகும்-கோபமிகுந்த—களியானை-செருக்கையு
டையயானைகள்போல்—திறல்கெழு-வலிமைமிக்க—போர்-போர்
செய்த—வயவேந்தர்-வெற்றிமிகுந்த வீரர்களுடைய—கால்-கால்
பொருந்திய—தரளக்குடை-முத்துக்குடைகளானவை—துணித்து-துண்டுபட்டு—களத்தினிடை-யுத்தகளத்தின்கண்—கிடப்பனகள்-இருப்பனவாகி—எற்றெருமை-எருமைப்போத்தை—உகைத்து-செலுத்தி—அடரும்-நெருங்குகின்ற—இருணிறத்த-இருளை
யொத்தநிறத்தையுடைய—எரிகுஞ்சி-எரிபோன்றசிகையையுள்ள
—கூற்றம்-இயமனுனவன்—உயிர்ப்பலியேற்கும்-உயிர்ப்பிச்சை
யேற்கின்ற—கொள்கலம்போன்று-பாத்திரத்தையொத்து—இரு
ந்தன-இருந்தன—(எ-று) ஏகாரம்-ஈற்றசை (கருத்து) அரசர்கள்
குடைகளானவை யமனுயிர்ப்பிச்சையேற்கும் பாத்திரங்கள்போ
லிருந்தன, எ-ம். (சுரு)

(கலிவிருத்தம்.)

இன்னகளத்தினினிற்றவரல்லாற்..... .....*
றுன்னினராவிதுறத்தலுமெங்கூற்..... *
றன்னவன்வாளமராற்றலுநோக்காப்..... *
பொன்னகரத்திறைபுத்தியிலேற்றான்.....*

(இ-ள்) இன்னகளத்தில் இப்படிப்பட்டயுத்தகளத்தில்—நிற்
றவரல்லால்-ஓடிப்போனவரல்லாமல்—றுன்னினர்-எதிர்த்தவர்க
ள்—ஆவிதுறத்தலும்-உயிர்விடுதலையும்—வெங்கூற்றன்னவன்-வெ
வ்வியயமனையொத்தவளவனவன்—வாளமர்-வாட்போர—ஆற்ற

லும்-செய்தலையும்—நோக்கா-பார்த்து—பொன்னகரத்திறை-இந்திரனுலகின்—புந்தியின்-தன்புத்தியில்—ஓர்ந்தான்- சிந்தித்தான்.

(எ-று)(கருத்து) ஓடினவர்பிழைத்தலையும், எதிர்த்தவரிறத்தலையும் நளன்வாளின்வல்லமையும் இந்திரன்கண்டு ஆலோசித்தான்,எ-ம்,

மன்றன்மலர்த்தொடைமன்னனையெய்தி..... *
வென்றிகொள்போரைவிலக்கியமாயிற்..... *
றுண்றுதிரைக்கடல்சூழுலகெல்லா..... *
மின்றுமுடித்திடுமென்னநினைந்தே..... *

(இ-ள்) மன்றல்-வாசனைபொருந்திய—மலர்த்தொடை-மலர்மாலையையணிந்த— மன்னனை-நளனை—எய்தி- அடைந்து—வென்றிகொள்-வெற்றியைக்கொண்ட—போரை- யுத்தத்தை—விலக்கிலமாயின் - விலக்காமற்போனோமாகில்—துன்று- நெருங்கிய—திரை-அலையையுடைய—கடல்சூழ் - கடலாற்சூழப்பட்ட—உலகெல்லாம்-பூவுலகத்திலுள்ளயாவரையும்—இன்று - இன்று—முடித்திடுமென்ன-கொல்லுவானென்று-நினைந்து--(இந்திரன்முதலிய நால்வரும்)கருதி—(எ-று)(கருத்து) இந்திரன்முதலிய நால்வரும் நளனிடத்துச்சென்று (போலாவிலக்காவிடிலோமாகில் உலகத்தை இன்றேகொல்றிவானென்று இதுமுதல் இவ்விரண்டுங் குளகம்,எ-ம்.

மழகளிறன்னவன்மாணுருநீங்கி..... *
விழைவொடுதம்முருமேவியவிண்ணோர்... ...*
ரழகுறுகாளையரவ்வுருவிட்டோர்... ..... *
கிழவுருவெய்தியகேண்மையொத்தார்.....*

(இ-ள்)மழகளிறன்னவன்-இளங்களிற்றையொத்தநளனது—மாண்-பெருமைபொருந்திய—உரு-வடிவத்தை—நீங்கி- விட்டுநீங்கி—விழைவொடு-விருப்போடு—தம்முருமேவிய- தங்கள்வடிவைப்பொருந்திய—விண்ணோர்-தேவர்கள்—அழகுறு- அழகின்மிக்க—காளையர்-காளைப்பருவத்தையுடையவர்—அவ்வுருவிட்டு-அக்காளைவடிவத்தைவிட்டு--ஓர்கிழவுருவெய்திய- ஒருகிழவடிவத்தையடைந்த —கேண்மையர்-தன்மையராதலை—ஒத்தார்-ஒத்தனர்---(எ-று)(கருத்து) இந்திரன்முதலிய நால்வரும் நளன்வடிவத்தைவிட்டு நீங்கித்தங்கள்வடிவாகிய தேவர்கள் நளனழகுக்குமுன்னே வாலிபர்விருத்தராஞ்சோலானார்கள் என்பதாம். (சுஅ)

முன்னுறுமேவியமொய்குழல்விண்ணோர்..... *
மன்னனையெய்துவாய்மையிலுணர்..... *
வின்னலனத்தெறுதோள்வலியானு.....*
நின்னைநிலத்திடைநேர்பவர்யாரே.....*

(இ-ள்) முன்னுருமேவிய-பழையவடிவினைப்பெற்ற—மொய்-நெருங்கிய—கழல்-வீரக்கழலையணிந்த—விண்ணோர்-தேவர்கள்—மன்னனேயெய்துபு-நளனையடைந்து—வாய்மையினும்-சத்தியத்தினும்—துன்னலரை-சத்துருக்களை—தொறு-கொல்லுகின்ற—தோள்வலியானும்-புசபலத்தினும்—நின்னை-உன்னை—நேர்பவர்-ஒப்பவர்—நிலத்திடை-பூமியில்--யார் - எவர் ஒருவருமில்லை—(எ-று) ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது. *இலக்கணக்கொத்துவினையியல்-உக-சூ-வேறில்லையுண்டியார்வேண்டித்தரும்படும்,வினைபெயர்ச்சுட்டியங்கோள்பத்தும், திணைபாலிடமெலாஞ்செல்லுமென்ப, இவ்விதியால் யார்பொதுவாகவந்தது. (கருத்து) தேவர்கள் நளனை உண்மையினும்,வலிமையினும்,உனக்குநிகரானவரிவ்வுலகத்தில்லையென்றார்கள் என்பதாம். (நூகூ)

துன்றுகளத்தெதிர்துன்னலரியாரும்.....*
பொன்றமுருக்கியபோர்த்தொழினீங்கி.....*
வென்றிகொள்வேலவமின்னனையாடன்..... *
மன்றன்முடித்தனைவாழியவெண்ணூர்.....*

(இ-ள்) வென்றிகொள்- வெற்றியைக்கொண்ட—வேலவ-வேற்படையையுடையநளனே—துன்று- நெருங்கிய—களத்தெதிர்-யுத்தகளத்திலெதிர்த்த—துன்னலரியாரும்- சத்துருக்களெல்லாம்—பொன்ற-இறக்கும்படி—முருக்கிய- கொன்ற—போர்த்தொழினீங்கி-போர்த்தொழிலைவிட்டு—மின்னனையாடன்- மின்னலையொத்தகமயத்தியினது—மன்றல்-விவாகத்தை—முடித்தனை-செய்துகொண்டவனுடன்—வாழியவென்னூர்- (நீ) வாழக்கடவையென்னூர்கள்.—(எ-று) (கருத்து) தேவர்கள் போரைவிட்டு விவாகமுடித்துக்கொண்டு கமயத்தியோடு நீடுழிவாழ்கவென்று நளனை வாழ்த்தினார்கள் என்பதாம். (நூஅ)

விண்ணவரின்னணம்வேண்டினர்கூறப்..... *
புண்ணுறுவெப்பபுலால்கமழ்வையே.....*
லண்ணலமர்த்தொழிலாற்றிலனுகிப்..... *
பண்ணைடதேரினிழிந்துபணிந்தான்..... ... *

(இ-ள்) விண்ணவர்-தேவர்கள்—இன்னணம்-இந்தப்பிரகாரம்—வேண்டினர்-வேண்டினவராகி—கூற - சொல்ல—புண்ணுறு-மாமிசத்தங்கிய—வெப்ப-வெவ்விய—புலால்-புலாலுற்றம்--கமழ்-கமழ்கின்ற—வைவேல்- கூரியவேற்படையையுடைய—அண்ணல்-நளனவன்—அமர்த்தொழில்-யுத்தத்தை—ஆற்றிலனுகி-செய்யாதவனுகி—பண்ணைம-அலங்கரிப்பமைந்த—தேரினிழிந்து- தேரி

வின்றுயிரங்கி—பணித்தான்-(அந்நால்வரையும்) வணங்கினன்—(எ-று) (கருத்து)-தேவர்களிப்படிவேண்ட நளன்போர்செய்யாது வுலுய் தோஷிட்டிற்கிசுவர்களைப்பணித்தான் என்பதாம். (எச)

கருணையினெய்தியகாளையைநோக்கி.....*
யருமகமெவ்வுழியாற்றினுமாங்க.....*
ணுருவொடுவந்தவியுண்ணுவமென்னு.....*
மருவருநல்வரம்வாசவனீந்தான்.....*

(இ-ள்) வாசவன்-இந்திரனவன்—கருணை பின்-அருளினால்—எய்திய-அடைந்த—காளையை-நளனை—நோக்கி-பார்த்து—அருமகம்-அரியயாகத்தை—எவ்வுழி-எவ்விடத்தில்—ஆற்றினும்-நீ செய்தபோதினும்—ஆங்கண்-அவ்விடத்தில்—உருவொடு-உருவுடனே—வந்து-அடைந்து—அவிர்-அவிர்ப்பாகத்தை—உண்ணுவமென்னுயாமுண்போமென்று—மருவரும்-அடைதற்கரிய—நல்வரம்-நல்லவரத்தை—ஈந்தான்-கொடுத்தனன்—(எ-று) (கருத்து) இந்திரன்,நளனைப்பார்த்து நீயாகஞ்செய்தால் யாம்வந்து அவிர்ப்பாகமுண்போமென்று வரங்கொடுத்தான் என்பதாம். (எஉ)

மிடல்கெழுமேழகமேற்கொளுமேலோ.....*
ணுடைதிணாவேலியினின்னமுதொப்ப.....*
மடிதலில்வெங்கனலின்றியும்வாளா.....*
வடிசிலுடிந்தொழில்விஞ்சையளித்தான்.....*

(இ-ள்) மிடல்கெழு-வலிமைபொருந்திய—மேழகமேற்கொளும்-ஆட்டுக்கடாவின்மேலேறும்—மேலோன்-அக்கினிதேவனவன்—உடைதிணாவேலியின்-உடைகின்ற அலகாயுடையகடலிற் பிறந்த—இன்னமுதொப்ப-இனிய அமிர்தத்தையொப்ப — மடிதலில-கெடாத—வெங்கனலின்றியும்-வெவ்வியதீயில்லாமலும் — வாளா-சும்மா—அடிசில்-உணவை— அடுத்தொழில்-சமைக்குந் தொழிலாகிய—விஞ்சை-வித்தையை--அளித்தான் - வரமாகக்கொடுத்தான்—(எ-று) (கருத்து) அக்கினிபகவான் நளனுக்குத் தீயில்லாமற் சமையல்செய்யும் வித்தையைக்கற்பித்தான்என்பதாம். (எங)

அல்லலுழந்தவுரைத்தினுநெஞ்சி.....*
னல்லறமெய்தவுநண்ணியருட்பில்.....*
வெல்படைவேண்டியதெய்தவும்வென்றிக்.....*
கொல்சினவெம்பகடேற்றிகொடுத்தான்.....*

(இ-ள்) வென்றி-வெற்றியையும்—கொல்சினம்-கொல்லாநின்ற கோபத்தையுமுடைய—வெம்பகடேற்றி-வெவ்விய எருமைக்கடாவாகனத்தையுடைய இயமனவன்—அல்லலுழந்து-வருந்தப்

பட்டு---ஐருரெய்தினும்-தன்பமடையினும்—நெஞ்சில்-மனத்தின்கண்—நல்லறமெய்தவும்-நல்லதருமமடையவும் — நண்ணிய-பொருந்திய—ஞாட்பில்-யுத்தத்தில்—வெல்படை-வெல்லத்தக்கஆயுதங்கள்—வேண்மிவ-வேண்மினவற்றை—எப்தவும்-அடையவும்—கொடித்தான்-நளனுக்குவரங்கொடித்தான்—(எ-று) (கருத்து) யமன் நளனுக்குசத்துருக்களை வெல்லு மாயுதங்களைக் கொடித்தான் என்பதாம். (எச)

தார்புலராதுதயங்கவும்வேண்டி..... .....*
ஞர்கலிவற்றவமைக்கவுமல்லா ....*
னீரறுபாலியினஞ்சினிஞைப்பின்.....*
வார்புனலெய்தவும்வருணனளித்தான்... .... *

(இ-ள்) வருணன்-வருண்ணனவன்--தார்-மாலைகள்—புலராதுவாடாமல்--தயங்கவும்-விளங்கவும்--வேண்டின்-வேண்மினால்—ஆர்கலி-சமுத்திரமானது—வற்றவமைக்கவும்- வற்றும்படிசெய்யவும்--அல்லால்-அவையன்றியும்--நீரறுபாலியின்-நீரில்லாதபாலிநிலத்தின்--னெஞ்சினிஞைப்பின்-நெஞ்சிலேநினைத்தால்—வார்-நெடியபுனலெய்தவும்-நீருண்டாகவும்--அளித்தான் - நளனுக்குவரங்கொடித்தான்—(எ-று)(கருத்து)வருணராஜன்,நளனுக்குக்கடல்வற்றச்செய்யவும்,நீரில்லாவிடத்தில்நீருண்டாகச்செய்யவும் வரங்கொடித்தான் ,எ-ம். (எடி)

ஆண்டகைக்கின்னவளித்தரிவைக்கு... ... ...*
மாண்டகுகற்பவருத்துவமென்றீ... ... ...*
தீண்டினராவிசிதைத்திடுமாறும் .....,.... ...*
வேண்டுறுவெய்தவும்விண்ணவ ஜீரீந்தார்.....*

(இ-ள்) விண்ணவர்-இந்திரன்முதலியதேவர்கள்— ஆண்டகைக்கு-நளனுக்கு—இன்னவளித்து-இவ்வரங்களைக்கொடித்து — அரிவைக்கும்-தமயந்திக்கும்--மாண்டகு-மாட்சிமைபொருந்திய--கற்பை-கற்பினை--வருத்துவமென்று-வருத்துவோமென்று —தீண்டினர்-தொட்டவர்களுடைய--ஆவி-உயிர்--சிதைத்திடுமாறும்- கெடுமாறும்—வேண்டுருவெய்தவும்-வேண்டியவடிவங்களெடுக்கவும்--ஈந்தார்-வரங்கொடித்தனர்—(எ-று) ஜ அகத்தியம் - சொற்பொருட்படலம். [வரமென்றதுவேமநந்திரமாமிதே, யாக்கலழித்தல்சுரத்தன்முத்தொழில்செயும்] (கருத்து) இந்திரன்முதலியதேவர்கள்நளனுக்குந்தமயந்திக்கும்வேண்டியவரமும்பெறவும்தமயந்திகற்பழியத்தீண்டினவரின்உயிர்விடவும் வரங்கொடித்தார்கள் ,எ-ம். (எசு)

கண்ணகன்ஞாலமளித்தகழற்கா..... ...*
லண்ணலியேத்தியருந்தவிமானும்..... *
பெண்ணமுதத்தையவியத்துபெருஞ்சீர்..... *
விண்ணவர்கம்பதிமேவினரன்மேற..... *

(இ-ள்) கண்ணகல்-இடமகன்ற—ஞாலம்- பூமியை—அளித்த-இரக்ஷித்த—கழற்கால்-வீரக்கழலியலணிந்தகாலியுடைய—அண்ணலை-நளனை—ஏத்தி-துதித்து—அருந்தவிமானும்-அருந்தவியையொத்த—பெண்ணமுதத்தை-தமயந்தியை—வியந்து-அதிசயித்து—பெருஞ்சீர்-மிகுந்தசிறப்பையுடைய—விண்ணவர்-தேவர்கள்—கம்பதி-கம்மூடையநகரங்களை—மேவினர்-அடைந்தனர்—(எ-று) அன்று-எ-அசைகள்.(கருத்து) இத்திரன்மூலியதேவர்கள் நளனைப்புகழ்ந்தும் தமயந்தியைக்கண்டதிசயித்தும்சுவர்க்கத்திற்குப்போனார்கள் என்பதாம். (எஎ)

(கலிவிருத்தம்.)

அங்கண்வானத்தமரரு*மாழியிற்..... *
பொங்குதானையரசரும்போயபின்... ... *
சிங்கவேறனையான்றிகழ்மாமணி..... *
தங்குலம்பொன்னிருக்கையிற் சார்ந்தனன்.

(இ-ள்) அங்கண்-அழகியவிடத்தையுடைய—வானத்து-தெய்வலோகத்திலிருந்துவந்த—அமரரும்-தேவரும்—ஆழியில்-சமுத்திரம்போல்—பொங்கு-மிகுந்த—தானை-சேனையையுடைய—அரசரும்-அரசர்களும்—போயபின்-போனபின்பு—திகழ்-பிரகாசிக்கின்ற—மாமணி-மாணிக்கமணிகளிழைத்து—தங்கு-தங்கிய—பைம்பொன்-பசியபொன்னுற்செய்த—இருக்கையில்-ஓரிடத்தில்—சிங்கவேறனையான்-சிங்கவேற்றையொத்தநளனவன்—சார்ந்தனன்-சேர்ந்தனன்—(எ-று) *அகத்தியம்-ஆழமுமுதலாலாழியென்றுதொகை. (கருத்து) தேவர்களும், அரசர்களும், போனபின்பு நளன் நவமணிபீடத்திலிருந்தனன் என்பதாம். (எஅ)

போர்புரிபடலம் - முற்றிற்று.

மணம்புரிபடலம்.

இப்படலத்தால்- நளமஹாராஜன் தமயந்தியை விவாகஞ்செய்தல் சொல்லப்படுகின்றது.

(கலிவிருத்தம்.)

சாந்தமூழ்குகடமூலைக்கோதையர்... .. *
காந்தளைம்பொற்கவரியிரட்டுற ... .*
வாய்ந்தசெவ்விமணவினைமாடத்தின்....*
வேந்தர்சூழ்வரவீமன்வந்தெய்தினான்.....*

(இ-ள்) சாந்தம்-சந்தனக்குழம்பினால்—மூழ்கு-முழுகப்பெற்ற—தடமுலை-பருத்தமுலையையுடைய—கோதையர்-மாதர்கள்—காந்தள்-பிரகாசிக்கின்ற—ஐம்பொன்-பசியபொற்காம்பையுடையவை—கவரி-சாமரைகளை—இரட்டுற-வீச—வாய்ந்த-பொருந்திய—செவ்வி-அழகிய—மணவினை-விவாகஞ்செய்யும்—மாடத்தின்-உபரிகையில்—வேந்தர்-அரசர்களனைவரும்—சூழ்வர-சூழ்ந்துவரா நிற்க—வீமன்-வீமராஜன்—வந்தெய்தினான்-வந்துசேர்ந்தான்—(எ-று) (கருத்து) வீமராஜன் விவாகமண்டபத்துக்கு வந்தான் என்பதாம். (க)

ஆற்றுவேள்வியருந்தவர்சூழ்வர....*
போற்றுநான்மறைக்கௌதமன்போர்கெழு
வேற்றடங்கண்விளங்கிழைமன்றலுக்....*
கேற்றயாவையுங்கொண்டிடனெய்தினான்.*

(இ-ள்) வேள்வி-யாகங்களை—ஆற்று-செய்கின்ற—அருந்தவர்-முனிவர்கள்—சூழ்வர-சூழ்ந்துவர—நான்மறை-நாலுவேதங்களையும்--போற்று-போற்றுகின்ற--கௌதமன்-கௌதமமுனிவன்--போர்கெழு-போரின்மிக்க—வேற்றடங்கண்-வேல்போன்றவிசாலம்பொருந்தியகண்களையுடைய--விளங்கிழை-தமயந்தியினது—மன்றலுக்கு-விவாகத்துக்கு—ஏற்றயாவையும்-ஏற்றதிரவியமுணர்த்தையும்--கொண்டு-வருவித்துக்கொண்டு--உடன்-அதனுடனே--எய்தினான்-வந்தான்—(எ-று)(கருத்து)கௌதமரிஷ்விவாகத்திற்கு வேண்டியவைகளைக்கொண்டுவந்தான் என்பதாம். (உ)

வேரியந்தொடைவீமனும்வேந்தருந்.....*
சேரு * நான்மறைச்செல்வருமன்றலுக்.....*

கோளையெய்தியதென்றுழையொற்றரா... ... *
லாரமார்பற்கரியவுணர்த்திறுர்..... *

(இ-ள்) வேரியத்தொடை-தேனெழுகுமலர்மாலையையணிந்த--மேனும்-மீமராஜனும்—வேந்தரும்- அரசர்களும்—தேருநான்மறைச்செல்வரும் - நாலுவேதங்களோயுமறிந்தபிராமணர்களும்—மன்றலுக்கு- விவாகத்திற்கு—ஓளையெய்தியதென்று - மூகூர்த்தகாலம்வந்ததென்று—உழை-அருகிலிருத்த—ஒற்றரால்- ஒற்றுவரால்—ஆரமார்பற்கு- நளமகாராஜனுக்கு—அறிய - தெரியும்படி—உணர்த்திறுர்-தெரிவித்தார்கள்—(எ-று)[*அகத்தியம்.மறைபொருளுறுதலான்மறையெனப்படுமே.] (கருத்து) மீமராஜன்மூகூர்த்தலக்கினம்வந்ததென்று வேவுகாராலேநளனுக்கறிவித்தார்கள் என்பதாம். (கூ)

ஒற்றர்கூறவொளிர்முடிவேந்தனே.....*
கற்றைவார்சடைக்காசிபருறியோர்... ..... *
சொற்றநான்மறைநூல்வழிச்சோமணிப்.....*
பெற்றசும்பினிற்பூம்புனலாட்டினுர்..... *

(இ-ன்) ஒற்றர்கூற-ஒற்றுவர்சொல்ல—(அவ்வளவில்) ஒளிர்முடிவிளங்குகின்றமுடியையுடைய—வேந்தனே- (நளனே)—கற்றைமயிர்திரளொருங்கியகூர்சடை-நெடியசடையையுடைய—காசிபருறியோர்- காசிபன்மூலமாகவுளவர்கள்—சொற்றநான்மறைநூல்வழி-வேதநூலிற்சொல்லியவிதிப்படி—தூபரிசுத்தமாகிய—மணி-நவமணிகள்பதித்த--பொற்சும்பினில்-பொற்குடத்திற்கொணர்ந்த—பூம்புனல்- பொலிவையுடைய தீர்த்தங்களினுல்—ஆட்டினுர்-ஸ்நானஞ்செய்வித்தார்கள்—(எ-று) பூம்புனலெனலால- கங்கையாதியதீர்த்தமெனக்கொள்க.(கருத்து) காசிபர்முதலானமுனிவர்கள் கொண்டுவந்த புண்ணியதீர்த்தத்தினுலே நளனை ஸ்நானஞ் செய்வித்தார்கள் என்பதாம். (சு)

புனிற்றிளம்பிறைக்கண்ணியன்பூங்கழன்..... *
மனத்தினெண்ணினிவழிபட்டுமாமறை.....*
யனேத்துவல்லவறநெறியுந்தணர்..... ... *
தினேத்தயாவையுநீயொடுநல்கினுன்.. ... . *

(இ-ன்) புனிற்றிளம்-பிஞ்சுத்தவிளமைபொருந்திய—பிறைக்கண்ணியன்-பாலசந்திரனுடியமாலையணிந்தபரமசிவனுடைய—பூங்கழல்-அழகியபாதங்களை—மனத்தினெண்ணி - இதயத்திலேயிருத்தி—வழிபட்டு-பூசித்து—மாமறையனேத்தும்வல்ல-வேதமுழுதுந்தெரிந்த—அறநெறி-தருமமார்க்கத்தினின்ற—அந்தணர் - பிராம

ணர்கள்--நினைத்தயாவையும்-நினைத்தவையனைத்தையும்--நீகொடு-நீருடனே--நல்கினன்-கொடுத்தனன்--(எ-று)(கருத்து)நளன்பிரா மணர்கள் நினைத்தயாவையுந் தானமாகக்கொடுத்தான், எ-ம். (இ)

அழகுவாய்ப்பவனைபவரண்ணலைத்.....*
தொழுதுநல்லருள்பூண்டிசுடர்விரி.....*
மழவுதன்கதிர்மால்வரைசேர்த்தெனச் .....*
செழுமணிப்பொற்றிகழ்முடிசூட்டினர்...*

(இ-ள்) அழகுவாய்ப்ப-அழகுபொருந்த--வனைபவர்-ஆபரணந் தரிப்பவர்கள்--அண்ணலைத்தொழுது - நளனைவணங்கி---நல்லருள் பூண்டி-அவனுடையகிருபைபெற்று--சுடர்விரி-கிரணம்விரிகின்ற--மழவுதன்கதிர்-இளஞ்சூரியனைவன்--மால்வரைசேர்த்தென- உதய கிரியில்வந்ததுபோல்--செழுமணி-செழுமையுள்ளமணிகள்பதித்து ---பொன்-பொன்னைச்செய்து--திகழ் - பிரகாசிக்கின்ற--மூடி-கிரீ டத்தை--சூட்டினர்-தரித்தார்கள்--(எ-று)(கருத்து)நளனுக்குமுடி தரித்தார்கள் என்பதாம். (ஈ)

புயங்களென்னும்பொலங்கிரிமீதுவான்...*
றயங்குசோதிக்கதிர்கடவுந்தெனக.....*
கயங்கொள்வள்ளைக்கவின்கவர்காதினில்...*
வயங்குபைம்பொன்மணிக்குழைசேர்த்தினர்.

(இ-ள்) புயங்களென்னும்- தோள்களென்கின்ற-பொலங்கிரிமீ து-மேருமலையின்மேல்--வான்-ஆகாயத்தில்--தயங்கு-தங்குகின்ற--சோதி-ஒளியையுடைய--கதிர்கள்-சூரியர்கள்--தவழ்ந்தென - தவழ் ந்தனபோல்-கயங்கொள்-தடாகங்கள்கொண்ட--வள்ளை- வள்ளையி லையிலுடைய--கவின்-அழகை--கவர்-கொண்ட--காதினில்- செவிக ளில்--வயங்கு-பிரகாசிக்கின்ற--பைம்பொன்- பசியபொன்னைச்செ ய்த--மணிக்குழை-இரத்நகுண்டலங்களை--சேர்த்தினர் - தரித்தார் கள்---(எ-று) (கருத்து) நளன் செவியில் குண்டல மணித்தார்கள் என்பதாம். (எ)

வண்ணமேகலையார்மனங்கூட்டினைக்..... *
கண்ணைகன்றுகவின்செயுமார்பிடை..... *
யண்ணல்மால்வரைதாழுமருவிபோற்.. *
றெண்ணிலாமணியாரவடஞ்சேர்த்தினர்...*

(இ-ள்) வண்ணமேகலையார்-அழகியமேகலையதரித்தமங்கை யர்களுடைய---மனம்-நெஞ்சை--கூட்டினை - கொள்ளைகொள்ள--- கண்ணைகன்று-இடமகன்று---கவின்செயும் - அழகைச்செய்யும்--- மார்பிடை-மார்பின்கண்ணே --- அண்ணல்-பெரிய---மால்வரை-மே

ருமலியில்—காழ்ஏருவம்போல்-தாழ்நீர்தொழுகுமருவிநீரைப்போல்—தெள் கெளிந்த—நிலா-ஒளியையுடைய—மணியார்வடம்-முத்துவா ங்களை—சேர்த்திஞர்-தரித்தார்கள்—(எ-று)(கருத்து) நள ன்மார்பில் முத்துமாலையணிந்தார்கள் என்பதாம். (அ)

பூமலர்ச்செழுங்கற்பகம்புல்லிய..... ...*
காமர்வல்லியெனக்கவின்செய்திடத்..... ...*
தூமணிச்சுடர்தூங்குபொலந்தொடி.....*
தேமலர்த்தொடைத்திண்புயஞ்சேர்த்திஞர்.

(இ-ள்) பூமலர்-பொலிவுபொருந்தியமலர்களையுடைய—செழும் -செழுமையுள்ள—கற்பகம்புல்லிய-கற்பகத்தைத்தழுவிய—காமர் வல்லியென-காமர்வல்லியென்னுங்கொடிபோல்—கவின்செய்திட- அழகைச்செய்ய—தூ-பரிசுத்தமாகிய—மணிச்சுடர்-நவமணியின் கிரணங்கள்—தூங்கு-தங்கிய—பொலந்தொடி- தோள்வளையை— தேமலர்த்தொடை - வாசனைபொருந்தியமலர்மாலையையணிந்த— திண்புயம்- திண்ணியதோள்களில்—சேர்த்திஞர் - தரித்தார்கள்— (எ-று)(கருத்து)நளன்தோள்களில்வாகுவலயத்தரித்தார்கள், எ-ம்.

துளங்குதெண்டிரைசூழ்கடல்வையக... .....*
மளந்துகோடற்சருவிலப்பூத்துகில்.....*
விளங்குபொன்னங்கிரியினைவெண்முகில்... ... *
வளைந்தசென்னிமருங்கினிற்சார்த்திஞர்.....*

(இ-ள்) துளங்கு-அசைகின்ற—தெண்டிரைசூழ்கடல்-தெளிந்த அலைகளையுடையகடலாற்சூழப்பட்ட—வையகம்-பூமியை— அளந்து-கோடற்கு- அளவிட்டுக்கொள்ளுதற்கு—அருவிலை - அரியவிலை யையுடைய—பூத்துகில்-அழகியஆடையை—விளங்கு - பிரகாசிக் கின்ற—பொன்னங்கிரியினை-மேருமலையை—வெண்முகில் - வெள் ளைமேகமான து—வளைந்தசென்னி- சூழ்ந்தது போல்—மருங்கினி ல்-அரையின்கண்—சார்த்திஞர்- தரித்தார்கள்—(எ-று) (கருத்து) நளனிடையிலாடைதரித்தார்கள் என்பதாம். (ஆ)

பாந்தளேந்தியபார் * பொதுநீக்கிய.....*
வேந்தல்சேவடிப்போதினெழில்பெற.....*
வேந்தர்பொன்முடிதேய்த்துவினங்கிய.....*
காந்தளம்பொற் * கனைகழல்வீக்கினர்.....*

(இ-ள்) பாந்தள்- நாகிசேடனுல்—எந்திய-சுமக்கப்பட்ட—பார் -பூமியை—பொதுநீக்கிய- யாவருக்கும்பொதுவாதலைநீக்கிய—எ ந்தல்-நாயனது—சேவடிப்போதின்-சிவந்தவலப்பாதமலரில்—எழி ல்பெற-அழகுபெறும்படி—வேந்தர் - அரசர்களுடைய—பொன்

மூடி-சுவர்னகிரீடங்களால்—தேய்த்து- தேய்க்கப்பட்டு—விளங்கிய-பிரகாசித்த—காந்து-சொலிக்கின்ற—பைம்பொன்- பசும்பொன்னுற்செய்த—கணைகழல்-ஒலிக்கும்வீரக்கழலை—வீக்கினர்-கட்டினர்கள்—(எ-று) (கருத்து) நளன் வலப்பாதத்தில் வீரக்கழலணிந்தார்கள் என்பதாம்.[* அகத்தியம். பொதுநீக்கரசனுலகொருங்குடையோன்.] ☞ * அகத்தியம். வெற்றிகொள்வேந்தர்விருதுவீரக்கழல், வலத்தாளொன்றில்வயங்குமென்க. (யக)

இன்னபேரணியாவுமெழிலில்செயத்..... ... ...*
னனனிடெங்குமூழவத்துலவத்திடப்.....*
பொன்னஞ்சூழிப்புகர்முகமெத்பின்மேன்.....*
மன்னர்மன்னன்மகிழ்ச்சியொடேகினன்..... *

(இ-ள்) இன்ன-இப்படிப்பட்ட— பேரணியாவும்-பெரியவிலையுள்ளஆபரணங்களனைத்தும்—எழிலில்செய- அழகினைச்செய்ய—எங்கும்-எவ்விடத்தும்—துன்னி-நெருங்கிய—முழவும்- பேரிகைகள், துலைவத்திட-ஒலிசெய்ய—பொன்-பொன்னுற்செய்த—னும்- அழகிய—சூழி-முகபடாத்தையுடைய—புகர்முக- புள்ளிபெற்றமுகத்தையுடைய—மெற்பின்மேல் - யானையின்மேல்—மன்னர்மன்னன்-நளனவன்—மகிழ்ச்சியொடு-மகிழ்ச்சியுடன்—எகினன் சென்றான்—(எ-று) (கருத்து) நளன்யானையேறிச்சென்றான்,எ-ம். யஉ.

நேமிசூழ்ந்தநெடுநிலமன்னவர்..... ... *
தாமமெண்குடைதாங்கினர்பின்வர... .. *
வாமமேகலைமங்கையரங்கையிற்... ... ...*
காமர்செம்பொற்சவரியிரட்டமே.....,*

(இ-ள்) நேமிசூழ்ந்த- சமுத்திரஞ்சூழ்ந்த—நெடுநிலமன்னவர்-நெடியபூவுலகத்தரசர்—தாமம்-மாலையணிந்த—வெண்குடை-வெண்கொற்றக்குடையை—தாங்கினர்-சுமந்தவராகி—பின்வர - பின்னேவரவும்—வாமம்-அழகிய—மேகலை- மேகலாபரணத்தையுடைய—மங்கையர்-மாதர்கள்—அங்கையில்-அழகியகையினால்—காமர்-அழகிய—செம்பொன் - சிவந்தபொற்காம்பையுடைய—சவரி-சாமரைகள்—இரட்ட-வீசிவரவும்—(எ-று) (கருத்து) வேந்தர்குடைபிடிக்கவும்,மாதர்சாமரைவீசவும் என்பதாம்.[இதுமூவலிரண்டிங்குளகம்.] (யகூ)

தண்ணறுந்தாமரைத்தாக்கணங்கன்னவர்.....*
கண்ணுறுநெஞ்சுமுவந்துகளிப்புற... .....*
வெண்ணிலவேயியராகியியம்பிட.....*
வண்ணமாமணிமண்டபத்தெய்தினன்..... ... *

(இ-ள்) கண்ணநீர்த்தாமரை - குளிர்ச்சிபொருந்தியதாமரைமலரி
லிருக்கின்ற — தாக்கணங்கன்னவர்-இலக்குமியையொத்தமங்கையர்
— கண்ணுநெஞ்சும்-கண்ணுமனமும்—மகிழ்ந்து-மகிழ்ச்சியடை
ந்து — களிப்புற-களிப்புமிக — எண்ணில்வேதியர்- அளவற்றபிராம
ணர்கள் — ஆசியியம்பிட-ஆசீர்வதிக்க--வண்ணமாமணி-அழகியமா
ணிக்கமணிகள்பதித்த---மண்டபத்து- மண்டபத்தில்---எய்தினன்-
வந்துசேர்ந்தான்—(எ-று) (கருத்து) மாதர்கள்மகிழ மறையவர்
வாழ்த்த நளன்விவாகமண்டபத்தில்வந்தான் என்பதாம். (ஐச)

வேனிலங்கணைவேள்பறங்காத்திடப்.....*
பானலுண்கட்பனிமதிவாணுதற்..... .. ...*
றேனவாங்குழற்றேமொழியைக்கொடு.....
மானினேக்கின்மடந்தையசெய்தினர்... .. ...

(இ-ள்) வேனில்-வசந்தகாலத்திற்குரிய---ஐங்கணைவேள்- பஞ்ச
பாணங்களையுடையமன்மதனுனவன்---புறங்காத்திட-புறங்காத்து
வர---பானலங்கண்- நீலோற்பலம்போன்றகண்களையும்---பனிமொ
ழி-குளிர்ச்சிபொருந்தியசொல்லையும்---வாணுதல் - ஒளிபொருந்தி
யநெற்றியையும்---தேனவாம்-வண்டுகள்விரும்புகின்ற---குழல்-கூ
ந்தலையுமுடைய---தேமொழியைக்கொடி-தமயந்தியையழைத்துக்
கொண்டு---மானினேக்கின்-மான்பார்வையையொத்தபார்வையை
யுடைய---மடந்தையர்-மாதர்கள்---எய்தினர்- அடைந்தார்.(எ-று)
(கருத்து) மாதர்கள் தமயந்தியை யழைத்துக்கொண்டுவந்தார்கள்
என்பதாம். (ஐஞ)

கள்ளறுமலர்நாற்றியெண்காவதம்..... ...
மூள்ளகன்றவொளிர்மணிமாடத்தின்.....
பிள்ளைமானிகர்நோக்கியைப்பெய்கழல். .
வள்ளலோடுமணத்தவிசேற்றினர் .. ..

(இ-ள்)கள்ளறு-தேனறுதல்---மலர்நாற்றி-மலர்மாலைதூக்கி--எண்
காவதம்-எண்காததூரம்---உள்ளகன்ற-உள்ளேவிரிந்த--ஒளிர்- பிர
காசம்பொருந்திய---மணிமாடத்தின்-மணிகள்பதித்தஉப்பரிகையில்
--பிள்ளைமானிகர்-இளமான்பார்வைபோன்ற-- நோக்கியை-பார்
வையையுடையதமயந்தியை---பெய்கழல்- வீரக்கழலையணிந்த---
வள்ளலோடு-நளனுடன்---மணத்தவிசு-கல்யாணமேடையில்--ஏற்றி
னர்-ஏற்றினர்கள். ---எ-று (கருத்து) தமயந்தியைநளனெடு கல்
யாணமேடையிலேற்றினர்கள் ,எ-ம். (ஐசு)

உதகநல்குநல்லோனையிஃதென.....
விரியிழைக்கணிகர்வினம்பலும்..... .. ....

பதலியார்த்தெழப்பாலவையதல்கிய..... ஐ
மதுமலர்த்தொடைமன்னெழுந்தானரோ..... ஐ

(இ-ள்) உதகநல்லும் - தாமரைவார்க்கின்ற---நல்லோரை-நல்லழு கூர்த்தம்---இஃதென-இதுவென்று---விதியிழுடி-சோதிடவிதிப்ப டிபார்த்து---கணிதர்-கணிதநூலோர்---விளம்பவும்-சொன்னவள விவ்--பதலை-வாத்தியங்கள்---ஆர்த்தெழ-மிகவொலிக்க--பாலவலை நல்கிய-தமயந்தியைப்பெற்ற---மதுமலர்த்தொடை-தேனிழுகுமல ர்மாலையையணிந்த---மன்-வீமன்---எழுந்தான் - எழுந்தனன்— (எ-று) (கருத்து) சோதிடர் முகூர்த்தலக்கினமிதுவென்றுசொல்ல வீமனெழுந்தான் என்பதாம். (யஎ)

கமலமீதுசெங்காந்தளலர்த்தினைக்..... ... .. ஐ
குமரனங்கையிற்கோல்வளைசெங்கைவைத்.....ஐ
திமயமாதுமிறைவனும்போலவாழ்ந்த்..... ... ஐ
தமைதிரென்னவரும்புனனல்கிஞன் .....ஐ

(இ-ள்) கமலமீது-தாமரைமலரின்மேல்—செங்காந்தளலர்த்தின னை-சிவந்தகாந்தண்மலர்பூத்ததுபோல்---குமரனங்கையில் - நளன தழகியகைம்மேல்---கோல்வளை-தமயந்தியினது--செங்கைவை த்து-சிவந்தகையையைவைத்து---இமயமாதும்-பார்வதியும்---இறைவ னும்போலவாழ்ந்து-பரமசிவனும்போல்வாழ்ந்து---அமைதிரென்ன-பொருந்தியிருமென்று---அரும்பனல்-அரியநீரை--நல்கிஞன்-வார்த்தான்—(எ-று)(கருத்து) ஈமன் நளன்கையில் தமயந்திகை யைவைத்து வாழ்ந்திருங்களென்றுதாரைவார்த்தான்,எ-ம். (யஅ)

காந்தழுழ்குதடம்புயஞரழற்.....*
கேய்ந்தயாவுமினிதுமுடித்தபி .....ஐ
ஞய்ந்தநான்மறையின்வழியாயிழை... .. ...ஐ
காந்தண்மெல்விரற் ஐ கைபிடித்தானரோ..... ஐ

(இ-ள்) காந்தழுழ்கு-சந்தனக்குழம்பால்முழ்கபெற்ற---தட ம்புயன்-பருத்தபுயங்களையுடையநளனவன்--ஆர்-பொருந்திய-- அழற்கேய்ந்தயாவும்,- அக்கினிகாரியத்துக்குப் பொருந்தியவனைத் தையும்---இனிதுமுடித்தபின்-இனிமையோடுசெய்துமுடித்தபின் பு---ஆய்ந்த-ஆய்ந்திருக்கின்ற---நான்மறையின்வழி- வேதமார்க்க ப்படி---ஆயிழை-தமயந்தியினது---காந்தண்மெல்விரல்-காந்தள ரும்புபோன்றமெல்லியவிரல்களை--கை-தன்கையால்--பற்றினன்- பிடித்தான்—(எ-று) [ஐ அகத்தியம். இரண்டன்விபத்தியெஞ்சில் வியியல்பாம்.] (கருத்து) நளன் தமயந்தி கையைப்பிடித்தான் என்பதாம். (யக)

பொங்குசெந்தழல்சூழ்வந்துபும்பொறி... ...
செங்கையாரச்சொரிந்துதிருமகள்... ... .
பங்கயப்பதம்பைம்பொனிணம்மிலைவத்.....
தங்கண்வானத்திருந்துதிகாட்டினன்..... .....

(இ-ள்) பொங்கு-மிகுந்த---செந்தழல்-அக்கினியை—சூழ்வந்து-வலம்வந்து—பும்பொறி-அழகியபொரியை—செங்கையார-சிவந்தகைகளிலறைய—சொரிந்து-அத்தீயிலிட்டு--திருமகள்-தமயந்தியினது—பங்கயப்பதம்-தாமரைமலர்போன்றபாதத்தை—பைம்பொனின்-பசியபொன்னாற்செய்த — அம்மிலைவத்து - அம்மியின் மேற்றாக்கிலைவத்து--அங்கண்வானத்து-அழகியஇடத்தையுடையஆகாயத்திலிருந்துகின்ற---அருந்ததி-அருந்ததிநாகஷத்திரத்தை--காட்டினன்-காண்பித்தான்—(எ-று) [அகத்தியம்-பங்கதத்துப்பவம் பங்கயமென்க.] (கருத்து) அக்கினிவலம்வந்து பொரியிறைத்துத் தமயந்திபாதத்தை யம்மியில்லைவத்து அருந்ததியைக்காட்டினன் என்பதாம். (உ)

ஏனையுள்ளனயாவுமுடித்தபின்.....
மானிலேக்கியோர்வல்லியிலைப்பெய்த்...
தானையங்கடற்றானைபொற்றானினிற்.....
றேனைவாய்குழற்றேமலர்சூட்டினன்..... ...

(இ-ள்) ஏனையுள்ளன-மற்றக்காரியங்கள்---யாவும் - எல்லாம்--முடித்தபின்-முடித்தபின்பு--மானிலேக்கி-தமயந்தியானவள்--ஓர்வல்லியின்-ஓர்நகைமடிபோல்--ஒலக்கிட்டபோய்-அசைத்துப்போய்---தானையங்கடல-சேனைசமுத்திரத்தையுடைய--தானை-தகப்பனுடைய மீனன---பொற்றானினில்-பொற்பாத்தங்களில்---தேனைவாய்-வண்டுகளால்விரும்பப்படுகின்ற---குழல்-கூந்தலையுடைய---தேமலர்-வாசனைபொருந்தியமலரை---சூட்டினன்-தரித்தாள்---(எ-று) (கருத்து) தமயந்தி தன்பிதாவின்காலில்விழுந்தாள்,எ-ம். (உ)

சென்னிதாழ்த்திவணங்கியதேமொழி.....
மின்னைஞ்னையுவந்துவிதர்ப்பர்கோன்... .....
பொன்னந்தாமரைப்பூவையுமாலும்பரன் ...
மன்னர்கோலெடும்வாழ்தென்வாழ்த்தினன் ...

(இ-ள்) சென்னி-தலையை---தாழ்த்தி- தாழச்செய்து---வணங்கியபணிந்த---தேமொழி- தேன்போன்றசொல்லையுடைய---மின்னைஞனை-தமயந்தியை--உவந்து-மகிழ்ந்து---விதர்ப்பர்கோன்-விமலனவன்---பொன்னந்தாமரைப்பூவையும்- இலக்குமியையும்---மாலும்போல்-திருமாலையும்போல்---மன்னர்கோலெடுப்-நளனை

மும்---வாழ்கென-வாழக்கடவையென்று---வாழ்தீதிறைஞ் - சாழ்த்தி
ஞன்—எ-று)(கருத்து) வீமன், தமயந்தியைநளனெனவே வாழ்கவென்
றுவாழ்த்திஞன் என்பதாம். (உஉ)

முருகுவாய்மலிதண்டளிமூசுபூந்.....
தெரியன்மார்பினன்றேசிகர்தாம்டாழு ...
துருமன்பிணவந்துவிதர்ப்பர்கோன் ..
வளைகொண்மார்பமகிழ்வுறட்புலிஞன் ...

(இ-ள்) முருகு-தேனை---வாய்மடித்து-உண்டு--அளி-வண்டுகள்--
மூசு-மொய்க்கப்பெற்ற---பூந்தெரியல்மார்பினன்-மலர்மாலையை
யணிந்தமார்பையுடையநளனெனவன்---தேசிகர்-ஆசிரியரது---தா
டாழுது-பாதத்தைவணங்கி--உருகும்-சாகின்ற—அன்பின்-
பத்தியினால்---உவந்து மகிழ்ந்து---விதர்ப்பர்கோன்-வீமராஜனு
டைய---வளைகொண்மார்பம்-மலியினதழகைக்கொண்டமார்பினை
---மகிழ்வுற-மகிழ்ச்சிபடைய---புலவிஞன்-தழுவினன்---(எ-று)
(கருத்து)நளன் தருவைவணங்கிவீமனைத்தழுவினன், எ-ம். (உங)

கோதில்குன்மறைக்கோதமமுனியா... ... .*
மாதவத்தமுனிமருமன்னருங் ....*
காதல்வேலைகையாழிந்தோங்கிட..... ... *
வர்தாரத்தொடு ※ மாசியிடம்பிஞன் ....*

(இ-ள்) கோதில்-குற்றமற்ற—தான்மறை நாலுவேதங்களையு
டைய---கோதமனுமியாய்-கௌதமமுனிமுதலாகிய—மாதவத்து-
பெரியதவத்தைச்செய்யும்—முனிவரும்-தபோதனரும்—மன்னரு
ம்-அரசரும்—காதல்-ஆசையாகிய—வேலை-கடலானது—கையழி
ந்து-கரைகெட்டு—ஓங்கிட-உயர—ஆகாதத்தொடும்-அன்புடனே—
ஆசியிடம்பிஞர்-ஆசீர்வதித்தார்கள்—(எ-று) [※ தாதுவிளக்கம்.
ஆசையோடுகாத்தலா லாசியம்முணைக்க.] (கருத்து)முனிவரும்,
அரசரும், நளனே வாழ்கவென்றார்கள் என்பதாம். (உச)

(அறுசீர்க்கழி நடிலடியாசிரியவிருத்தம்.)

இன்னவைநிகழ்ந்தபின்னரிறைஞ்சுமணங்களுளும்...*
பொன்னரிமாலைநாற்றிப்பூப்புனைகமழ்தூட்டிப்.....*
பன்னருஞ்சிறப்புவாய்த்தபனியிருவிசும்புபாரின் ...*
மன்னியதனையகாலமனைவரையெய்திஞரோ..... *...*

(இ-ள்) இன்னவை-இத்தன்மையானவை—நிகழ்ந்தபின்னர்-நட
ந்தபின்பு—இறைவனும்-நளனும்—அணங்களுளும்-தமயந்தியும்—
பொன்னரிமாலை-பொன்னரிமாலையை— நாற்றி-தொங்கவிட்டு—
பூம்புகை-அழகியபுகையை—கமழ-பரிமளிக்கும்படி — ஊட்டி-

ளுட்டுவித்து—பன்னரும்-சொல்லுதற்கரிய— சிறப்புவாய்ந்து-சி றப்புப்பொருந்தி—பலி-குளிர்ச்சிபொருந்திய—இரு - பெரிய— விசும்பு-பொன்னுலகம்—பாரில்-பூமியின்கண்— மன்னியதனை-பொருந்தியிருந்ததையொத்த—கோலம்-அழகிய—மணவகை-பதி க்கையறையை — எய்தினர்-அடைந்தார்கள்—(எ-று) (கருத்து) நளனுந் தமயந்தியும் பள்ளியறையிற்சேர்ந்தார்கள் ,எ-ம். (உரு)

பாயிருட் § பிழம்புசீத்துப்பகற்கதிருமிழும்வெய்ய...*
காயெரிமணியிற்செய்தகவின்றிகழ்மஞ்சமீது.....*
தூயமென்பஞ்சியன்னத்தூவியுறினி பசெய்பு.. ...*
மாய்மயிர்முதலமூவைந்தடுகியவமளிசேர்ந்தார்.....*

(இ-ள்) பாய்-பாயாதின்ற—இருட்பிழம்பு - இருளினதுதிரட்சி யை—சீத்து-போக்கி—பகற்கதிர்-சூரியகிரணங்களோ — உமிழும்-கொப்புளிக்கின்ற—வெய்ய-வெவ்விய—காய்-சுடுகின்ற—எரி- அக் கினிபோன்ற—மணியிற்செய்த-மணிகளாற்செய்யப்பெற்ற —கவி ன்றிகழ்-அழகுவிளங்குகின்ற—மஞ்சமீது-கட்டிலின்மீது—தூய-சுத்தமாகிய—மென்-மெல்லிய—பஞ்சி-பஞ்சியினுலும்— அன்னத் தூவி-அன்னப்புள்ளினிறகாலும்—ஊறு-பரிசம்—இனிய - இனிய வாக—செய்யும்-செய்கின்ற—ஆய்-ஆயாதின்ற—மயிர்முதல்- மயி ர்முதலியவாக—மூவைந்து-மூவைந்தாக—அடுக்கிய- ஒன்றின்மே லொன்றுசேர்த்த—அமளி-மெத்தையின்மேல்—சேர்ந்தார்-சேர்ந் தார்கள்—(எ-று) [§ அகத்தியம் குழைசேறனவாக்கூடிருள்பிழம் பே.] (கருத்து) பதினேந்து பஞ்சணையடுக்கிய கட்டிலின்மேற்சேர் ந்தார்கள் என்பதாம். (உசு)

போயிறுமருங்குலென்னப்புணர்முலைசுமக்கலாற்றாச்* சேயிழைபஞ்சியார்ந்தசீறடிக்கமலப்போதின்...*
மீயுயர்விசும்புதூக்கமின்னுருக்கொண்டதன்ன.....*
வாயிரங்கோடிமாதரயினிநீர்சுழற்றிப்போனார்.....*

(இ-ள்) மருங்குல்-இடையானது—போயிறுமென்ன- இற்றுப் போய்விடுமென்னும்படி--புணர்முலை-தெருங்கியமுலைகளோ—சுமக் கலாற்றா-சுமக்கமாட்டாத—சேயிழை-தமயந்தியினுடைய— பஞ் சியார்ந்த-செம்பஞ்சுநிறைந்த—சீறடி-சிறிய அடிகளாகிய— கமல ப்போதின்-தாமரைமலரின்மேல்—மீயுயர்-மேலாகவுயர்ந்த— விசு ம்புதூக்க-மேகத்திலுண்டாகிய—மின்-மின்னல்— உருக்கொண்டத ன்ன-பெண்வடிவுகொண்டதென்னும்படியுள்ள-- ஆயிரங்கோடிமா மாதர்-ஆயிரங்கோடிமங்கையர்கள்—அயினிநீர்- சோறிடப்பட்டம ஞ்சன்நீரை—சுழற்றி-சுழற்றுதல்செய்து--போனார்-போயினார்கள்.

(எ-று) (கருத்து) ஆயிரங்கோடிப்பெண்க ளாலஞ்சுமந்திப்போ ர்கள் என்பதாம். (உஎ)

அருப்புமென்முலையாளஞ்ஞூற் றைம்பதிற்றெண்மர் பைம்
பொற், பொருப்புறழ்தோளிலுற்கும்பொருகயற்கண்ணினுட்
குமுருக்கிளர்மணியிற்செய்தவொளிகிளர்பசும்பொற் றட்டிற்
கருப்புரத்தீபமேற்றிக்கண்ணெச்சில்கழித்திட்டாரே ... ...*

(இ-ள்) அருப்பு-தாமரையரும்பையொத்த--- பெண்முலையார்-மெல்லியமுலைகளையுடையமங்கையர்கள்--- ஐஞ்ஞூற்றைம்பதிற்றெண்மர் - ஐஞ்ஞூற்றைம்பத்தெட்டென்னுந்தொகையையுடையமகளிர்கள்---பைம்பொன்-பசியபொன்மயமாகிய---பொருப்பறழ்- மேருமலையையொத்த---தோளிலுற்கும்-புயங்களையுடையநளனுக்கும்---பொருகயற்கண்ணினுட்கும் - கயற்கண்டையையொத்தகண்களையுடையதமயந்திக்கும்---உருக்கிளர்-உருவிளக்குகின்ற---மணியிற்செய்த-நவமணிகளிற்செய்த--- ஒளிகிளர்-ஒளிவிளக்குகின்ற --- பசும்பொற்றட்டில்-பசியபொன்னாற்செய்ததட்டினில்--- கருப்புரத்தீபமேற்றி-கருபூரத்தீபத்தையேற்றி---கண்ணெச்சில்- திருஷ்டிதோஷத்தை---கழித்திட்டார்-போக்கினார்கள்.(எ-று) (கருத்து)ஐந்நூற்றைம்பத்தெட்டுப்பெண்கள் நளனுக்குந் தமயந்திக்குங்கருப்பூரத்தீபத்தால் திருஷ்டிகழித்தார்கள்,எ-ம். (உஅ)

வாசனைகமழுஞ்சுண்ணம்வண்டிமிர்குழங்கன்மாலை.....*
யோசனைநாறுஞ்சாந்தமொண்கருப்பூரம்பைங்காய்க்...*
கர்ச்றுசெப்பிலுற்றகமழ்திலாயமிழ்திணெய்.....*
தூசுலாம்பருமவல்குற் ❊ றேகையரேத்தினாரே.....*

(இ-ள்) வாசனை-பரிமளமான நறு—கமழும்-மணக்கின்ற--சுண்ணம்-பொடிகளையும்—வண்டிமிர்- வண்டுகளை விக்கின்ற—குழங்கன்மாலை-அழகியமாலைகளையும்—யோசனை-யோசனைதூரம்—நாறும்-கமழ்கின்ற—சாந்தம்-சந்தனத்தையும்—ஒண்- ஒள்ளிய—கருப்பூரம்-பச்சைகருப்பூரத்தையும்—பைங்காய்- துவர்க்காயையும்—காசறு-குற்றமற்ற—செப்பில்-வட்டில்களில்—ஆர்த்த-ஆர்ந்தெடுத்த—கமழ்-பரிமளிக்கின்ற—சுவை-சுவையையுடைய—அமிழ்திணெயும்-அமிர்தத்தையொத்தநெய்—தூசுலாம் - ஆடைமேலசைகின்ற—பருமம்-பருத்த—அல்குல்-நிதம்பத்தையுடைய—தோகையர்-மங்கையர்கள்—ஏற்றினார்-தாங்கினார்—(எ-று) (பருமம் - பதினெண்சாணமுள்ளது) [❊ அகத்தியம்-சொற்பொருட்படலம்.தோகை போற்சாயலார்தீந்தோகையென்றோதுக.] (கருத்து) பெண்கள் வா

சுனைப்பொழிலும்மலை,சந்தனம்,கருப்பூரம்,பாக்கு, அமிழ்து,இவை களையேத்திஞர்கள் என்பதாம். (உசு)

பண்ணமைதிவவினல்யாழ்பருமணியடைப்பதோக்கிற் ..*
கண்வழுக்குறுசெஞ்சோதிக்கதிர்மணிக்கால்செய்வட்டம் *
வெண்ணிறக்கவரிசெம்பொற்படியகமினையவெல்லா..... *
மண்ணியமணிசெய்பம்பூண்மடந்தையர்மருங்குவைத்தார்.*

(இ-ள்)பண்ணமை-இசையமைத்த—திவவின்-கட்டுக்களையுடைய—நல்யாழ் - நல்லயாழும்—பருமணி- பரியமணிகள்கோத்த—அடைப்பை-தாம்பூலப்பையும்—நோக்கில்-பார்த்தால்—கண்வழுக்குறு-கண்கள்சுழுகின்ற—செஞ்சோதி - சிவந்தகாந்தியையுடைய—கதிர்மணி - கிரணங்களையுடையமணிகள்பதித்த—கால்செய்வட்டம்-சாந்தாற்றியும்—வெண்ணிற-வெள்ளியநிறத்தையுடைய—கவரி-சாமரையும்—செம்பொன்- சிவந்தபொன்னுற்செய்த—படியகம்-தம்பலப்படிக்கமும்—இனையவெல்லாம்-ஆகியவிவைமுதலியவனத்தையும்—மண்ணிய-கழுவிய—மணிசெய்-மணிகள்பதித்த—பைம்பூண்-பசியஆபரணங்களையுடைய—மடந்தையர்- மாதர்கள்—மருங்கு-அருகே—வைத்தார்-வைத்தனர்—(எ-று)(கருத்து) மாதர்கள்,யாழ்,அடைப்பை,ஆலவட்டம்,சாமரை,பொற்படிகம், இவற்றைப் பக்கலில்வைத்தார்கள் என்பதாம். (ஈ)

பாம்பினைப்படத்தைமாணும்பங்கயப்பருமவல்குற் .....*
காம்புறழ்பசியமென்றோட்காரிகைவிழைவுநாணு..... *
மேம்பலோடினிதுநோக்கியின்னுயிர்த்தோழிமார்கள் ... *
பூம்புகைதவழ்ந்தாலன்னபொருமுகவெழினிவீழ்த்தார் ... *

(இ-ள்) பாம்பின்-சர்ப்பத்தினது—படத்தை- படத்தினை—மாணும்-ஒத்த—பங்கயம்-தாமரைமலரையொத்த—பருமம்-பருமத்தையுடைய—அல்குல்-அல்குலையும்—காம்புறழ்-மூங்கிலையொத்த—பசிய-பசுமையாகிய—மென்றோள்-மெல்லியதோளையுமுடைய—காரிகை-தமயந்தியினுடைய—விழைவும் - விருப்பத்தையும்—நாணும்-நாணத்தையும்—ஏம்பலோடு - அகமலர்ச்சியுடன்—இனிதுநோக்கி-இனிமையிலேபார்த்து—இன்னுயிர் - இனியவுயிரையொத்த—தோழிமார்கள்-தோழிகள்—பூம்புகை - அழகியபுகையான—தவழ்ந்தாலன்ன- தவழ்ந்ததைபோலத்த—பொருமுகவெழினி- பொருமுகவெழினியென்னுந்திரையை—வீழ்த்தார்- விழத்தார்கள்—(எ-று) பாம்பினைப்படத்தையென்றதில் - ஐகாரியாகக்கொண்டுபாம்பினதுபடமெனக்கொள்க.(கருத்து)தோழிமார்கள் திரையைவிழத்தார்கள் என்பதாம். (ஈக)

வரிமுலையோடிந்தோன்றிவளர்தொறும்வளர்த்துவீங்கிப்...*
பெருகுநாண்சுமக்கலாற்றுப்பெய்ம்மலர்க்கொம்புபோல்வா
டிருமுகஞ்சிறிதுகோட்டிக்கயிற்புறமதனிற்றேங்கொள்...*
விரிமலர்க்கூந்தலுழலுமின்னைநுடங்கிநின்றுள்.....*

(இ-ள்) வரிமுலையோடிந்தோன்றி - சந்தனக்கோலத்தையுடைய முலைகளுண்டானபோதுண்டாகி—வளர்தொறும்- அவைகள்வளருந்தோறும்—வளர்த்து-தாளும்வளர்த்தி—வீங்கி-பருத்து—பெருகுநாண்-பெருகியதாணை—சுமக்கலாற்று-சுமக்கமாட்டாதை--பெய்-பெய்கின்ற—மலர்-மலரையுடைய—கொழும்புபோல்வாள்-கொம்பையொத்தமயற்தியானவள்—திருமுகம்-திருமுகத்தை—சிறிதுகோட்டி-கொஞ்சம்வளக்கி—கயிற்புறமதனில்-பிடரியின்மேல்--தேங்கொள்-வாசனைகொண்ட---விரிமலர்க்கூந்தல்-விரிகின்றமலையணிந்தகுழலான---தாழ-சோர---மின்னென-மின்னல்போல்---நுடங்கி-துவண்டி---நின்றுள்- நின்றனள்---(எ-று) (கருத்து) மயற்தி நாணிநின்றுள்,எ-ம். (நஉ)

ஐ கூற்றுறழ்தடங்கணிவிகொள்ளைகொண்மெண்ணவேவி....*
மாற்றமொன்றுரையாதிங்குன்மதிமுகங்கோட்டிநின்றீர்...*
சேற்றிதழ்க்கமலப்போதிற்றிருந்திழையனையீர்காதை... ...*
லாற்றுமாறெவன்கொலாசைக்கடற்படுமிளையன்றனே... *

(இ-ள்) கூற்றுறழ்-இயமனையொத்த---தடங்கண்- விசாலம்பொருந்தியகண்ணை---ஆவி - என்னுயிரை---கொள்ளைகொண்மெண்ணை-கொள்ளையிட்டருந்த---எவி- அணுப்பி---மாற்றமென்றுரையாது-ஒருபேச்சும்பேசாமல்—இங்குன்-இவ்விடத்தில்—மதிமுகம்-சந்திரன்போன்றமுகத்தை—கோட்டி நின்றீர்- வேறுத்துநின்றீர்—சேறு-சேற்றிலிருக்கின்ற—இதழ்க்கமலப்போதில்- இதழையுடையதாமரைமலரிலிருக்கின்ற—திருந்திழையனையீர்-இலக்குமியையொத்தவரே—காதல்-ஆசையை—ஆற்றுமாறு-சகிக்குமாறு—எவன்கொல்-எப்படி—ஆசைக்கடற்படும்- ஆசைக்கடலில்மூழ்கிய—இளையன்-எளியேன்—(எ-று) [ஐ அகத்தியம்- சொற்பொருட்படலம். கூறுபடுத்தலாற் கூற்றென்றுரையே.(கருத்து) மயற்தியே! பேசாதுமுகங்கோணி நிற்கின்றாய் ஆசைக்கடலில்வீழ்ந்த வெளியேன் விதகஞ்சகிக்கும்வழியாது ? என்றான் என்பதாம். (நங)

வாட்டடங்கருங்கட்கூற்றைமலர்க்கையாண்மறைத்தீராலி...*
கோட்டுமண்கொண்டுவீங்குகுவிமுலைக்கனிநல்யானை ... *
யாட்டுசாந்தகலம்போழாதளியனேன்றடந்தோட்கத்திற் *
பூட்டிடலன்றோமுன்னம்புரிற்தமுமையதாமே.....*

(இ-ள்) வாள்-வாள்போன்ற—தடம்-விசாலம்பொருந்திய—கரு
ங்கட்கூற்றை-கரியகண்ணுடைய இயமனை—மலர்க்கையால்-மலர்போ
ன்றகையிலுல்—மறைத்தீர்-மூடிக்கொண்டீர்—ஆவி - உயிராகிய
—கோட்டிமண்- கபாலத்தை—கொண்டு- கொண்டு—வீங்கும்-
பருத்த—குவிமுலை-குவிந்தமுலையாகிய—களிறல்யானை-களிப்பை
யுடையயானையை—ஆட்டுசாந்து-சந்தனம்பூசிய—அகலம் - மார்
பினிடத்தில்—போழாதி-பிளவாது—அளியனேன்-என்னுடைய -
தடந்தோள்-பருத்ததோளாகிய—கந்தில் - தறியில்—பூட்டிடலன்
றே-பூட்டினலன்றே—முன்னம்புரிந்ததும் - முன்செய்ததும்—
அளியதாம்-அன்பாகும்—(ஏ-று) (கருத்து) தமயந்தியே, உன்மு
லைகளாகிய யானைகளை என்னுடையதோள்களாகியகட்டுத்தறிகளில்
கட்டினலல்லவோ வன்பாகும் என்பதாம். (ஈகை)

* சுற்றறல்கூரவாழ்ந்தோமுறுசிறியர்போல..... .. *
விற்றிடைமெலியச்செம்மாந்தெழுமுலைப்பாரம்பார்த்துங் *
கங்றைபங்குழலில்வீழ்ந்தமதுகரர்களிவண்டூரின்... ... *
றற்றதுமக்குமேலோரளியெனவளித்தபேரோ.....*

(இ-ள்)சுற்றம்-சுற்றத்தார்—நல்கூர-வறுமையடைய—வாழும்-
வாழ்கின்ற—தோழுறு-குற்றத்தையுடைய—சிறியர்போல- சிறிய
வர்களைப்போல்—இற்று-ஒடிந்து—இடை- இடையானது—மெலி
ய-வாட—செம்மாந்து-அகமலர்ச்சியடைந்து—எழு-எழுகின்ற—
முலைப்பாரம்- முலையினுடையபாரமை—பார்த்தும் - கண்டும்—
கற்றையங்குழலில்- மயிர்த்தொகுதியாகியகூந்தலில்—வீழ்ந்து-வி
ழுந்து—மதுகரர்-கள்ளையுண்கின்ற—களி - களிப்பையுடைய—
வண்டூர்-வண்டுகளே—றுமக்கு உமக்கு—மேலோர் - பெரியோர்
கள்—அளியென-அளியென்று—அளித்தபேர் - கொடித்தநாமமா
னது—இன்று-இன்று—அற்றது-அற்றவிட்டது—(ன-று) [*அக
த்தியம்-சொற்பொருட்படலம். கொள்ளவித்தொடித்தலிற்கூடியோ
ரீசுற்றம்.](கருத்து) வண்டுகளே! தமயந்திமுலைப்பாரத்தைப்பார்
த்தும் கூந்தலில்வீழ்ந்துமிதிக்கின்றீர்கள். இடையொடிந்து பழிவ
ரும். உங்களுக்கு அளியென்னும் பேரின்றேயற்றது என்பதாம்.

பகைக்கடல்சுவற்றும்வைவேற்பகட்டெழின்மார்பினன்ற...*
னகத்திடைப்பெருகிப்போங்குமாசையங்கடலினின்னே ... *
முகைத்தெழுமுலைமாதுமுருகுலாங்கோதைநாணுற் ... *
றகைத்திடலரிதன்றென்றனித்தன்னுளமேங்கிச்சிரிகூர்ந்தாள்

(இ-ள்) பகைக்கடல்-பகையாகியகடலை—சுவற்றும்- சுவறச்செ

யின்ற---வைவேல்-கூரியவேலையுடைய---பகட்டெழின்- பகட்டின்ற வழகையுடைய---மார்பினன்றன் - மார்பையுடையநளன தை--- அகத்திடை-மனத்தின்கண்---பெருகியோங்கும்- அதிகரித்துயர்கின்ற---ஆசையங்கடலில்-ஆசையாகியசமுத்திரத்தை---இன்னே- இப்பொழுதே---முகைத்து-அருப்பி---எழும் - எழுகின்ற --மூல்லைமாலை-முலைமாலைபினுடைய---முருகு-வாசனையான தை- உலாம்-உலாவுகின்ற---கோதை - கூந்தலையுடையதமயந்தியாளவள்---நாணுல்-னை தாணினுல்---தகைத்திடல்- தடுத்திடுவது---அரிதென்றெண்ணி-அருமையென்றறிஞனத்து---தன்னுளே-தன்மனத்தினுள்ளே--மகிழ்ச்சி-மகிழ்ச்சியை---கூர்ந்தாள்- மிகுந்தாள்---(எ-று) (கருத்து) நளன்காமத்தைத் தன்நாணுற்றடுப்பதரிதென்று தன்னுள்ளே மகிழ்ச்சியடைந்தாள்,எ-ம். (கூ)

கழி ❋ மடநாணமச்சம்பயிர்ப்பெனுங்காவல்வேலை..... *
யழிதரவைசெவ்ளமகத்திடையடங்காதாகி..... *
வழிவதேபோதவின்பம்வடிவெடுத்தனையநங்கை..... ... *
பொழிகநீர்நிலவுநாணப்புன்னகைகோட்டிஞளே... .... *

(இ-ள்) கழி-மிகுந்த---மடம்-மடமும்---நாணம்-நாணமும்--அச்சம்-பயமும்---பயிர்ப்பெனும்-அருவருப்புமென்றுசொல்லுகிற---காவல்-காவலையுடைய---வேலை - சமுத்திரமானது---அழிதல-அழியும்படி---ஆசைவெள்ளம்-ஆசையாகியவெள்ளமானது---அகத்திடை-மனத்தின்கண்---அடங்காதாகி - அடங்காததாய்---வழிவதேபோல்-வழிகிறதேபோல்---இன்பம் இன்பமானது---வடிவெடுத்தனைய-ஒருவடிவுகொண்டதையொத்த---நங்கை - தியத்தியானவள்---பொழிகநீர்-கிரணத்தைப்பொழிகின்ற---நிலவுநாணச்சந்திரிகையும்நாணும்படி---புன்னகை-புன்சிரிப்பு---கோட்டினுள்-செய்தாள்-- (எ-று) [❋ தொல்காப்பியம்-களவியல்- அ-ரு- அச்சமுநாணுமடனுமுந்துறுதலினிச்சமும்பெண்பாற்குரியவென்பு, இவ்விதியால் மகடூஉக்குணமறிக] (கருத்து)தமயந்தி,மடம், நாணம், அச்சம்,பயிர்ப்பு, இந்நாற்குணமுங்கொடுநகைத்தாள்,எ-ம். (கூ)

குருமணிவலயமின்னுங்குமக்குவவுத்தின்டோண்.....*
முருகுலாந்தாமமார்பன்முறுவலின்குறிப்புநோக்கித் .....*
ஐ திருநலங்கனியதின்றசெழுங்கடமைழக்கட்பேரை.... *
வருமுலைஞெமுங்கப்புல்விமலரேணமேயினனே..... *

(இ-ள்) குரு-நிறம்பொருந்திய---மணி-மணிகள்பதித்த--வலயம்-சேயுருங்கள்---மின்னும் மின்னுகின்ற---குங்குமம்- குங்குமமணி

ந்த---ருவவு-திரட்சிபொருந்திய---திண்-வலிமையையுடைய--தோ ள்-புயத்தையும்---முருகுலாம்-வாசனைவீசுகின்ற---தாமம்-தாலைய ணிந்த---மார்பன்-மார்பினையுமுடைய நளனுவன்---முறுவலின்- புன்சிரிப்பின்---குறிப்புநோக்கி-குறிப்பினைப்பார்த்து--திரு-றெ ப்பான---நலம்-சுகமான து---களியநின்ற-முதிரும்படியிருந்த-- செழுங்கடை-செழிபகடைபொருந்திய---மழைக்கண் - குளிர்ச்சி பொருந்தியகண்ணையுடைய---பேதை - தமயந்தியின்---வருமுலை- வளர்கின்றமுலையை---ஞெமுங்கப்புல்லி - அமுந்தத்தழுவி---மலர் ணை-மலர்மெத்தையில், மேயினான்-பொருந்தினான்--(எ-று) [இதொ ல்காப்பியம்- களவியல்- சு-ஆ. நாட்டமிரண்டு மறிவுடன்படுத்தற் குக், கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும், இவ்விதியால் கலவிக்குறிப் பறிக.] (கருத்து) நளன்தமயந்தியினது முகைக்குறிப்பை யறிந்து தழுவினன் என்பதாம். (சுஅ)

*ஆம்பலம்போதுமானுமணிநிகழ்பவளவாயிற்..... ... **
*றேம்பொதிந்தமுதமூறுஞ்செந்துவர்த்தேறன்மாந்திப் ... **
*பாம்பிமல்குலாடனபணைமுலைமணிக்கண்சேப்ப.. .....**
*வேம்பலுற்றினிதுபுல்லியிளநலம்பருகினானே .... **

(இ-ள்) ஆம்பலம்போதுமானும்-அல்லிமலரையொத்த--அணி அழகு---நிகழ்ந்-பிரகாசிக்கின்ற---பவளவாயில் - பவளம்போன்ற வாயில்---தேம்-வாசனை---பொதிந்து-தங்கி---அமுதமூறும்-அமிர் தமூறுகின்ற--செந்துவர்-செம்பவளம்போன்ற அதரத்தினுடைய ---தேறல்-தேனை---மாந்தி-உண்டு---பாம்பும்-பாம்பின்படத்தை யுடுகின்ற---அல்குலாடன்-அல்குலையுடையதமயந்தியினது--பணை -பருத்த--முலை-முலைகளின்--மணிக்கண்- கரியகண்களானவை--- சேப்ப-சிவக்க---ஏம்பலுற்று-இன்பத்தையடைந்து---இனிதுபுல் லி-இனிதாகத்தழுவி---இளநலம்-இளநலத்தை---பருகினான் - அனு பவித்தான்---(எ-று) (கருத்து) தமயந்தியினது இதழ்சுவைத்துக் கனதனமழுந்தத் தழுவினன் என்பதாம். (சுக)*

*கந்திலைக்கருமென்கூந்தல்கயிற்புறத்தவிழ்ந்துவீழ..... **
*முந்தரிச்சிலம்புபைம்பொற்கிண்கிணிமுன்றுபாடத்..... **
*தந்தரிநெடுங்கண்சேப்பத்தடமுலைதாங்கலாற்ற..... **
*தெய்த்துறுண்மருங்குறேம்பவேந்தலோ ❁ டாடினாளே. **

(இ-ள்) கந்திலை-மலர்மாலையையணிந்த--கருமென்கூந்தல்-கரி யமெல்லியகூந்தலானது--கயிற்புறத்து-பிடரியினிடத்து---அவிழ்ந் துவீழ-அவிழ்ந்துவீழவும்--முந்து-முந்துக்களாகிய--அரி-பரு

லையுடைய-சிலம்பு--சிலம்புகளும்-பைம்பொன்--பசும்பொன்னால் செய்த--கிண்கிணி-சதங்கைகளும்--முரன்று- ஒலித்து---பாடபாடவும்--தத்து-நெருங்குகின்ற--அரி-செவ்வரிபரந்த---தெடுங்கண்-நெடியகண்களாலவை--சேப்ப-சிவக்கவும்--தடமுலை - பருத்தமுலைகளை--தாங்கலாற்று து-சுமக்கமாட்டாது--எய்த்து- இளைத்து---நுண்மருங்குல்-நுண்ணிடையானது--தேம்ப - வருந்தவும்--எந்தலோடு-நளனோடு--ஆடிஞள்-புணர்ந்தாள்.—(எ-று)[❁ இலக்கணக்கொத்து-பெ-சூ-] இருவினைமுதலாவொருவினையும்முனை, இவ்விரு வினைவசப்படிபுல்லிஞள்] (கருத்து) தமயந்திகூந்தலவிழப் பாதசரஞ்சத்திக்கக் கண்கள்சிவக்க இடைதுவள நளனோடுசேர்ந்தாள் என்பதாம். (சுய)

களிக்கயல்பொருதுநீண்டகருப்பினையளக்கும்வேற்கட் ...*
மெளிப்புயன்மின்னினன்ஞட்டொண்டைவாயமுதமாந்தித் ...*
தளிர்த்தெழுமுவகைபொங்கத்தண்ணறுஞ்சாந்தமார்ப ...*
னளப்பருங்களிகொள்காமக்கடலகத்தழுந்தினனே ... ... *

(இ-ள்) களி-களிப்பையுடைய--கயல் -கயற்கண்ணையை---பொருது-போர்செய்து--நீண்டு-நெடுகி-- கருப்பினையளக்கும்-கூந்தலினையளக்கா நின்ற--வேற்கண்- வேல்போன்றகண்ணையுடைய---தளிர்-தளிபொருந்திய--புயல்-மேகத்தைத்தோன்றிய --- மின்னினன்ஞள்-மின்னலையொத்தகமயந்தியினது--தொண்டைவாய் - கொவ்வைக்கனியொத்தவாயிலுண்டாகிய---அமிர்தமாந்தி-அமிர்தத்தையுண்டு--தளிர்த்து-தளிர்த்து--எழும்-எழுகின்ற--உவகை- மகிழ்ச்சியானது--பொங்க-மிக-தண்-குளிர்ச்சிபொருந்திய-- நறும்-நல்ல--சாந்தமார்பன்-சந்தனத்தையணிந்த மார்பினையுடையநளனவன்--அளப்பரும்-அளத்தற்கரிய--களிகொள்-களிப்பைக்கொண்ட--காமக்கடலகத்து-காமசமுத்திரத்தில்--அழுந்தினனன்-மூழ்கினன்--(எ-று)(கருத்து) நளன்விரகவெள்ளத்திலழுந்தினனென்பதாம்.

அலங்கலங்குன்றமன்னன்மணிவரையகலமூழ்கி... ... .*
நலங்கெழுகலவைச்சாந்துதானமுமழிதலோடு.. ... .*
மிலங்கொளிவைரப்பைப் பூணினமுலைவடிக்கண்டேங்கிப் ...*
பொலங்கொடிநாணினோடும்பொய்த்துயில்கூர்ந்தாளன்றே.

(இ-ள்) அலங்கல்-மாலையணிந்த--அம்-அழகிய-- குன்றமன்னனன்-மலையையொத்தநளமஹாராஜனது---மணி-அழகிய---வரை-மலைபோன்ற--அகலமூழ்கி-மார்பினிடத்திலேமூழ்கி---நலங்கெழு-நன்மைபொருந்திய--கலவைச்சாந்தும்- கூட்டிவர்க்கஞ்சேர்ந்தசந்தனமும்

னக்குழம்பும்--நானமும்-கஸ்தூரியும்--அழிதலோடும்-அழிந்தவள்
வில்--இலங்கொளி-மிகுந்தவொளி யையுடைய-- வைரப்பைம்பூண்
-வச்சிராபரணத்தையுடைய--இளமுலை - இளமைபொருந்தியஸ்தன
த்தினிடத்திலே--வடிக்கண்டேங்க- வடிவைக்கண்டிரங்கி--பொல
க்கொடி-பொற்கொடிபோன்றதமயந்தியானவள்---நாணினோடும்-
நாணத்துடனே--பொய்த்துயில்கூர்ந்தாள்-பொய்ந்நித்திரையைச்
செய்தாள் (எ-று)---அன்று-எ-அசைகள்) (கருத்து) தமயந்திதன்
னுடையகனதனங்களிலே நளனகக்குறிகண்டு வெட்கங்கொண்டு
பொய்ந்நித்திரை செய்தாள் என்பதாம். (சஉ)

புலவியிற்றுயின்றுடின்முனிந்திடும்பூவையென்னு ...*
மலராணைப்பாத்துத்தானுந்துயிறல்போற்கிடப்பவாய்ந்த...*
கலவிபின் § வேட்கைதூண்டக்கனவினில்வெருவினுள்போன்
முலைமுகடழுந்தவேந்தன்முழவுதிதோள்புல்லினாளை... ..*

(இ-ள்) புலவியின்-பிணக்கினால்---துயின்றுள் நித்திரைசெய்தா
ள்--தீண்டின்.தொட்டால்--முனிந்திடும் கோபஞ்செய்வாள் --- பூ
வையென்னு-தமயந்தியென்று--மலரணைப்பாத்து-மலரணைபினிட
த்தில்--தானுந்துயிறல்போல்-தானும்நித்திரைசெய்தல்போல்----கி
டப்ப-இருக்க--வாய்ந்த-பொருந்திய--கலவியின் - புணர்ச்சியினு
டைய---வேட்கை-ஆசையான து--தூண்ட- தூண்டுதல் செய்ய---க
னவினில்-கனவினிடத்திலே---வெருவினுள்போல் - பயந்தவள்போ
ல--முலைமுகடு-முலைபினுச்சி--அழுந்த-அழுந்தும்படி--வேந்தன்-
நளமஹாராஜனுடைய--முழவுதிதோள்-மத்தளம்போன்றதோளை
-புல்லினாள்--தழுவினாள்.(எ-று) [§ அகத்தியம்-சொற்பொருட்ப
டலம்- வேட்கைக்குப்பதுறிவெண்வாவாகும்-] (கருத்து) தமயந்தி
கனவிற்பயந்தாள்போல நளன்புயங்களிலே கனதனங்களழுந்தப்பு
ணர்ந்தாள் என்பதாம். (சக)

புல்லலும்மிழிச்சிகூரப்புணர்முலைதுளைபமோத்து .. ..ஐ
மெல்லிதழமுதமாந்திமேகலைநெகிழ்த்தலோடு..... ... ... *
நல்லெழிற்கனிந்தகோதைநகையுளத்திடக்கலாற்றாளை.....*
முல்லைமென்முகையுநாணவரும்பிளமுறுவல்பூத்தாள் ... *

(இ-ள்) புல்லலும்-தழுவிக்கொண்டவளவில்--மகிழ்ச்சி-சந்தோ
ஷமானது--கூர-அதிகரிக்க--புணர்-நெருங்கிய--முலை-ஸ்தனங்கள்
--துளைபமோத்து-துளைபும்படியுச்சியில்மோதுத்து---மெல்-மிரு
துவாகிய--இதழ்-அதரத்தினுடைய---அமுதமாந்தி- அமிர்தத்தைப்

யுண்டு—மேகலை-மேகலாபரணத்தை—நெகிழ்த்தலோடும்- அணிந்
தவளவில்—நல்-நல்ல—எழில்-அழகானது—கனிந்த-முதிர்ந்த—
கோதை-தமயந்தியானவள்—நகை-மகிழ்ச்சியை—உளத்-மனத்
தின்கண்—அடக்கலாற்றாள்-அடக்கமாதவளாய்—முல்லை-முல்லையினு
டைய—மெல்-மிருதுவாகிய—முகையும்-அரும்புகளும்—நாண
நாணும்படி—அரும்பு-உண்டாகாநின்ற—இள-இளமையாகிய—
முறுவல்பூத்தாள்-தந்தங்கள்தோன்றமலர்த்தாள்—(எ-ம்) (கருத்து)
தமயந்திபுணர்ந்தவளவில் நளன் கனகனங்களை மேற்றி அதரபா
னம் பண்ணி மேகலாபரணத்தை யவிழ்த்தவளவில் நகைத்தாள்
எ-ம். (சக)

புருவவிற்கோலியுள்ளம்போழ்ந்தகட்கணைகளோட... ... *
புருவத்தாருடையவொற்றை * வலம்புரியொலிப்பிம்மி *
வரிமுலைக்களிநல்யானைமருமம்பாய்ந்தழகுகொண்டான்... ... *
விரிமலர்க்கோதைதாமவெஞ்சமம்விளைத்திட்டாளே... ...*

(இ-ள்) புருவம்- புருவமாகிய—வில்- தனுவை—கோலி-வளை
த்து—உள்ளம்-மனத்தை—போழ்ந்து- பிளந்து—கண்-கண்களாகி
ய—கணைகள்-பாணங்கள்—ஓட-ஓடவும்—உருவ- வடிவம்பொருந்
திய—தாருடைய-மாலையையுடைய—ஒற்றைவலம்புரி- ஒற்றைச்சங்
கமாகியபிடாரன்—ஒலிப்ப-சத்திக்க—விம்மி-பூரித்து—வரி- சந்த
னக்கோலம்வரைந்த—முலை- ஸ்தனங்களாகிய—களி - களிப்பையு
டைய—நல்-நல்ல—யானை-யானையான—மருமம்பாய்ந்து-மார்
பினிடத்திற்பாய்ந்து—உழக்க-கலக்க—மன்றல்-வாசனையை—விரி
-விரியச்செய்கின்ற—மலர்-மலரான்றொடுத்த—கோதை-மாலையை
யணிந்ததமயந்தியானவள்—காம-காமமாகிய—வெஞ்சமம்-வெவ்
வியயுத்தத்தை—விளைத்திட்டாள்-செய்தாள்—(எ-று) * அதனியல்
பும்-சொற்பொருட்படலும்-வலஞ்சுழிகொள்ளுதல் வலம்புரியென்க.
(கருத்து) தமயந்தி புருவவில்லைவளைத்துக் கண்ணென்னு மம்பை
யெய்து கண்டமாகிய வலம்புரிசங்குசத்திக்க முலைகளாகிய யானை
கள் நளன்மார்பிற்பாய்ந்து கலக்கக்காமப்போர்செய்தாள், எ-ம்.

திருநுதற்பொடித்தவேர்விற்றெங்கமழ்திலகந்தேய்ப்..... *
புரிமுறுக்கவிழ்ந்தகோழ்ந்தபொலங்குழைதிருவில்வீச ... ஜ
மருமலர்க்கூந்தல்சோரவசமழிந்தருகிவேந்த..... ... .. *
னெரிமணியாரமார்பினின்றுயிலபொருந்திலளே... .....*

(இ-ள்) திரு-அழகிய—நுதல்-நெற்றியின்கண்—பொடிதவ
உண்டாகிய—வேர்வின்-வேர்வையினாலே—தெம்-வாசனை—கமழ்
வீசுகின்ற—திலகம்-திருநாட்பொட்டு—தேய-அழியவும்—புரி-பு

நிந்த—மூறுக்கு-மூறுக்குகள்—அவிழ்ந்து-நீங்கி—தாழ்ந்த-தொ
ங்கியகாஞ்சி—தீந்து—பொலம்-பொன்னிழைசெய்த—குழை-குண்
டலங்கள்—திரு-அழகிய—வில்-பிரகாசத்தை—வீச-வீசவும்—ம
ருமலர்-வாசனைபொருந்திய மலர்களையணிந்த—கூந்தல்-அளகபா
ரமான து—சோர-சரியவும்—வசமழிந்து-பாவசப்பட்டு—உருகி-
மனமுருகி—வேந்தன்-தளபதிராஜனுடைய—னரி-பிரகாசிக்கி
ன்ற—மணி-மணிகள்பதித்த—ஆரமார்பின்-பதக்கமணிந்த மார்பி
விடத்தில்—இன்-துயில்-இனிதாகியநித்திரையை—பொருந்தினள்-
கொண்டனள்—(எ-று) (கருத்து) தமயந்தி நெற்றிவேர்வையாற்றி
லதமழியவும், குண்டலம்பிரகாசிக்கவும், கூந்தலவிழவும், மெய்
சோர்ந்துமனமுருகி தளன்மார்பினைச்செய்தாள் என்பதாம்.

கலவியின்மயக்கந்தீர்ந்தகனிபடுகிளவியாட..... ...*
னலர்முலையாகந்தைவந்தணிவடமணிந்துவாங்குஞ்... .....*
சிலதுறற்றிலகந்தீட்டித்தேங்கமழ்கூந்தல்கைசெய்.....*
திலமலர்க்கோதைசூட்டி*யிழைபலதிருத்தினானே... .....*

இ-ள் கலவியின்-புணர்ச்சியிற்றோன்றிய—மயக்கம்-மயக்கமா
னது—தீர்ந்த-நீங்கிய—கனிபடு-பழம்போற்சுவைபொருந்திய—
கிளவியாடன்-சொற்களையுடையதமயந்தியினது—அலர்-பரந்த—
முலை-ஸ்தனகளையுடைய—ஆகம்-மார்பை—தைவந்து-தடவி—அ
ணி-அழகிய—வடம்-மணிவடங்களை—அணிந்து-தரித்து—வாங்கு
ம்-வளைகின்ற—சில-விற்போன்ற—நுதல்-நெற்றியினிடத்து—தி
லகந்தீட்டி-சிந்துரப்பொட்டிட்டு—தேங்கமழ்-வாசனைவீசுகின்ற—
கூந்தல்-கூந்தலை—கைசெய்து-ஒழுங்குசெய்து—இலை-மருமுதலிய
விலைகளோடு—மலர்க்கோதை-மலர்மாலையை—சூட்டி-தரித்து—
இழைபல-பலவாபரணங்களை—திருத்தினான்-திருத்தஞ்செய்தான்—
(எ-று) * அகத்தியம். சொற்பொருட்படலம்-இழைக்குற்றொழி
லாவினழையெனப்படுமே.(கருத்து) தளன்தமயந்தியைத்தடவிக்கொ
டுத்த மணிவடஞ்சூட்டித் திலதமிட்டுக் கூந்தலைமுடித்து ஆபர
ணஞ்சூட்டினன் ,எ-ம். (சன)

தெளியுமின்னமிழ்தமன்னதேம்படுகிளவியாட..... .....*
ளெனிலெளிர்முகத்தலாயவோடரித்தடங்கண்போலக்... ...*
களியிளஞ்சுரும்புகாணீர்கண்டனவுளவோசொல்லீர்.....*
முளரிநாண்மலரிற்பூத்தமுழுநெறிக்குவளைப்போதே... ..*

(இ-ள்) தெளியும்-தெளிந்த—இன்-இனிதாகிய—அமிழ்தமன்
ன-அமிர்தம்போன்ற—தேம்படு-மதுரம்பொருந்திய—கிளவியா
டன் சொற்களையுடையதமயந்தியினது—ஒளி-காந்தியானது—

ளிர்-விளங்குகின்ற—முகத்துலாய-முகத்தினிடத்துலாவுகின்ற—ஒ ய்-காதளவுமோடாநின்ற—அரி-செவ்வரிபாந்த—தடம்- விசால ப்பொருந்திய—கண்போல-கண்களைப்போல—கனி-கனிப்பையுடை ய—இளம்-இளமையாகிய—சுரும்புசாள்-வண்டுகளே—நீர் - நீங் கள்—கண்டன-பார்த்தவை--உளவோ-உண்டோ—சொல்லீர்-சொ ல்லுங்கள்—முளரி-தாமரையாகிய—நாள்-அன்றலர்ந்த—மலரின்- மலரின்மேல்—பூத்த-உண்டாகிய—முழுதெறி- முழுதெறிப்பையு டைய—சுவளைப்போது-நீலோற்பலங்களை—(எ-று) (கருத்து) நா னன் வண்டுகளே தமயந்திகண்போலத் தாமரையிற்பூத்த நீலோற் பலத்தைநீங்கள்கண்டதுண்டோசொல்லுங்களென்றான் என்பதாம்

தாமரைப்பொகுட்டின்மேயதாக்கணங்கனையாய்நெஞ்ச... *
மேமுறைவரினுநின்னையிம்மையிற்பிரியேனென்ன... ... ... *
வாமமேகலையினுமுமையிற்பிரிவையென்னுக்... ... .. *
காமருசுவளைபோதுங்கண்பனியுகுப்பநின்றுள்... ... ... *

(இ-ள்) தாமரைப்பொகுட்டில்- தாமரைக்கொட்டையின்மே ல்—மேய-பொருந்திய—தாக்கணங்கனையாய் - இலக்குமியையொ த்தவளே—நெஞ்சம்-மனமானது—ஏமம்-வருத்தம்--உறவரினும்- பொருந்தவந்தாலும்—நின்னை-உன்னை—இம்மையில் - இப்பிறப் பில்—பிரியேனென்ன-பிரியனென்றுசொல்ல—வாமம்- அழகிய— மேகலையினுமும்-மேகலையையணிந்ததமயந்தியும்— மறுமையில்- வருபிறப்பில்—பிரிவையென்னு-நீபிரிவையேயென்று — காமரு- அழகிய—சுவளைபோதும்-நீலோற்பலம்போன்ற—கண்- கண்களி னின்றும்—பனியுகுப்ப-நீர்துளிக்க—நின்றுள்- வருந்திநின்றுள்— (எ-று) * இலக்கணக்கொத்து-வினையியல்-உ- சூ - நிலைமொழிம றையே வருமொழிமறையே - இருமொழிமறையேயெனமூவகைமை றை-இவ்விதியால் பிரியேன் என்றது நிலைமொழியெதிர்மறை- (கரு த்து) நளனிப்பிறப்பிற்பிரியேனென்றுசொல்லித் தமயந்திமறுபி றப்பிற் பிரிவையென்றழுதாள் என்பதாம். (சாம)

பெய்தொடிகலுழ்வதென்கொல்பிழைத்திலேணருளாயென்னி, லுய்குவன்கொல்லோவின்னையுள்ளுயிர்துறப்பலென்று ...*
வெய்துயிர்த்தனிச்சுப்போதின்மிழிப்பினும்பனித்துவாடிற்*
தெய்வமென்கமலப்போதுசென்னிமேற்சூழ்குழலே .. ...*

(இ-ள்) பெய்தொடி-தமயந்தியே—கலுழ்வது- நீகலங்குவது —என்கொல்-என்னகாரணம்—பிழைத்திலேன்-தானொருதப்புஞ் செய்திலேன்—அருளாயென்னில்-இருபைசெய்யாவிட்டால்— உய் குவன்கொல்லோ - பிழைப்பேனோ—இன்னே - இப்பொழுதே—

உள்ளுயிர்-உள்ளேயிருக்கின்றவுயிரை—துறப்பலென்னு - விடுவே னென்று—வெய்துயிர்த்து-பெருமூச்சுவிட்டு — அனிச்சப்போதில்-அனிச்சப்புட்பத்தில்—மிதிப்பினும் - நடந்தாலும்—பனித்து-கொப்புளித்து—வாடும்-வாடாநின்ற—தெய்வம்- தெய்வத்தன்மை பொருந்திய—மெல்-மிருதுவாகிய—கமலப்போது—பாதமாகிய தாமரைப்பூவை—சென்னிமேல்-சிரத்தின்மீது—சூடினான் - தரித் துக்கொண்டான்—'எ-று)(கருத்து) நான் தமயந்தியே நீயழுவ தென்ன நான் ஒருசூற்றமுஞ்செய்யவில்லை கிருபைசெய்யாவிடி னும் பிரைவிடுவேனென்று அவளடியை மூடியில்லைத்துக்கொண்டான் என்பதாம். (நிடு)

சூழுமியபறவையாவுங்கூட்டினைப்பொதுவினல்கும்..... *
பழுமரமனையதிண்டோட்பகட்டெழிற்றுமமார்ப..... *
வுழுவலன்போடுநின்னையொருமையிற்புணர்வதன்றி... ...*
யெழுமையுந்தொடருமாதர்கீறடியிறைஞ்சுகென்னு... ...*

(இ-ள்) சூழுமிய-கூடிய—பறவையாவும்- பறவைக்கூட்டங்க ளனைத்தும்—கூட்டினை - கொள்ளைகொள்ள— பொதுவினல்கும்- பொதுவாகத்தரும்—பழுமரமனைய- ஆலமரத்தையொத்த—திண் டோள்-வலிமைபொருந்தியதோளையும்--பகட்டெழில்-பகட்டினின் றழகையுடைய—தாமம்-மாலையணிந்த—மார்ப- 'மார்பினையுமு டைய நளமஹாராஜனே--உழுவலன்போடு - இடையறுதலின்புட னே—நின்னை-உன்னை--ஒருமையில்-இப்பிறப்பில்--புணர்வதன்றி- கூடுவதல்லாமல்—எழுமையும்-எழுபிறப்பிலும்--தொடரும்-தொ டர்ந்துவருகின்ற--மாதர்-மங்கையருடைய--கீறடி- சிறியபாதத்தி ல்--இறைஞ்சுகென்னு- வணங்குவாயென்றுசொல்லி---(எ-று) அ கத்தியம்-செற்பொருட்படலம் -பறத்தற்றொழிலாற்பறவையெனப் பெயர்(கருத்து)தமயந்தியானவள்மாலையணிந்தமார்பனுன்புடனே உன்மை இப்பிறப்பிற்புணர்வதல்லாமலெழுபிறப்பிலுமுன்னருமா தர்களினடியை வணங்கென்றுசொல்லி - இதுமுதல் விரண்டுங் குள கம். (நிக)

கிளிபொருகிளவியாள்பொற்கிண்கிணிகிலம்போடார்ப்பத் *
தளிநருப்பிலிற்றுமெல்லூற்றடம்புயத்தூதைத்தலோடுங்...*
களிசெயப்பொழித்தரோமங்கண்டகத்தூறுத்திலந்தோ... *
அளியகீறடிகணேமென்றல்லலுற்றழுங்கினனே... ..... *

(இ-ள்) கிளிபொரு-கிளியையொத்த--கிளவியாள்-வசனத்தை யுடையதமயந்தியானவள்--பொன்- பொன்னினுற்செய்த—கிண் கினி-சிறுசதங்கைகள்--கிலம்போ-கிலம்புடனே--ஆர்ப்ப-சத்திக்க

—தவி-தவி தனியாகிய—நறு-தேனை—பிலிற்றும்-தளிக்கின்ற—மென் மிநதுவாகிய—பூம்-புட்பமாலையணிந்த—தடம்- விசாலம் பொருந்திய--புயத்து-புசத்தினிடத்தில்--உலதத்தலோபம்-உதைத் தமாத்திரத்தில்—களிசெய-மகிழ்ச்சியைச்செய்ய—பொடித்த-புள கித்த--ரோமம்-மயிர்கள்--கண்டகத்து-முட்கள்போல்--உறுத்தில்-உறுத்துமாகில்--அந்தோ-ஐயோ--அவிய- பிருதுவாகிய—சீறடிக ள்-சிறியபாதங்கள்—நோமென்று-வருந்துமேயென்று-- அல்லலு ற்று-தன்பமுற்று—அழுங்கினுன்-வருந்தினுன்--(எ-று) (கருத்து) நளன்தோள்களிற் காலாலுதைத்தவளவில் அந்நளன் சிற்றழிநாவு மென்றழுதான் என்பதாம். (இ உ)

உடை*திரைப்பரவைஞாலத்துயர்ந்தவர்தொழும்புபூண்ட *
வடியவரிறைஞ்சுத்தகுமையருளெமும்பொறுப்பதல்லால்... .*
கொடியவர்போலச்சீறியாருயிர்குறைப்பர்கொல்லோ.. ...*
மடலவிழ்கமலப்போதில்வாள்கிடந்தனையகண்ணுப்.....ஐ

(இ-ள்) உடை-களையுடைக்கின்ற —திரை-அலைகளையுடை ய—பரவை-சமுத்திரஞ்சூழ்ந்த--ஞாலத்து-பூமியினிடத்தில்-உயர் ந்தவர்-பெரியோர்கள்--தொழும்புபூண்ட-தொண்டுபட்ட---அடிய வர்-வேலைக்காரர்கள்--இரைத்த-செய்த---தீமை-குற்றத்தை--அரு ளெமும்-கிருபையுடனே--பொறுப்பதல்லால்-பொறுத்துக்கொள் வதேயல்லாமல்--கொடியவர்போல-தீயவர்போல--சீறி-கோபித்து —ஆருயிர்-பொருந்தியசீவனை--குறைப்பர்கொல்லோ- சேதிப்பார் களோ--மடலவிழ்-இதழ்கள்விரிந்த--கமலப்போதில்- தாமரைமல ரில்--வாள்கிடந்தனைய-இரண்டுவாள்களிருந்தாலையொத்த--கண்ணு யி-தண்களையுடையதமயந்தியே---(எ-று) * அதத்தும்-சொற்பொ ருட்படலம். [திரையப்படிதலிற்றிரையெனச்செப்புக.] (கருத்து) தமயந்தியே பெரியோர் அடியவர்செய்தகுற்றத்தைப் பொறுப்ப தல்லாமலுயிர்ச்சேதம்செய்வாரோஎன்பதாம். (ரு)

அள்ளிலைமணிப்பூண்கோதையருளெனப்பணிதலோடும்... *
கள்ளுலாதநிபகூந்தல்கலவியினுலைத்தயாவும் .... *
தெள்ளுகண்மிழற்றுமாறுகேட்டிளநிலவுகாலு.....*
மூள்ளெயிறிலங்கச்செவ்விமுகிழ்நகைகோட்டினுளே.....*

(இ-ள்) அள்-நெருங்கிய--இலை- அரசிலைபோன்ற --மணிப்பூ ண்-இரத்நாபரணமணிந்த--கோதை - தமயந்தியே--அருளென-கி ருபைசெய்யென்று--பணிதலோடும்-வணங்கினமாத்திரத்தில்--கள் தேனை-உலாம்-பெருகுகின்ற-நறியகூந்தல்-வர்சனைபொருந்தி யகூந்தலையுடைய தமயந்தியானவள்--தலவியில்-புணர்ச்சியில்--உ

ரைத்தையாவும்-சொல்லியதெல்லாம்--இள்ளோகள்-இளிப்பிள்ளோகள்—மிழற்றுமாறு-சொல்லும்விதத்தை--கேட்டுகாதிற்கேட்டு---இளநிலவு-இளஞ்சந்திரிகையை,காலும்-கக்குகின்ற--முள்-முருத்துபோன்ற--எயிறு-தந்தங்கள்--இலங்க-பிரகாசிக்க--செவ்வி-அழகு-முகிழ்-அரும்புகின்ற--நகை-புன்சிரிப்பை--கோட்டிளுள்-செய்தாள்--(எ-று) (கருத்து) நளன்தமயந்தியே திருமைசெய்யெனவணங்கினவுடனே தமயந்திபுணர்ச்சியிற்சொன்னசொற்களோக்கிளிகள்சொல்லக்கேட்டுநகைத்தாள்,எ-ம். (நிச)

இன்னமிழ்துயிர்த்தசெவ்வியிளநிலாவுருவுவாய்ந்த.....*
நன்னலங்கனிந்தகோதைநகைமுகவாயிலெற்றுப்.....*
பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைக்கோடுபல்லிக்.....*
கன்னவிமேருவான்காமக்கடலகத் தழுந்தினானே.....*

(இ-ள்) இன்னமிழ்து-இனியவமிர்தத்தை--உயிர்த்த-ஈன்ற--செவ்வி-அழகுபொருந்திய—இளநிலா - இளமைபொருந்திய நிலவைபோத்த--உருவுவாய்ந்த-வடிவம்பொருந்திய--நன்னலம்- நல்லநலமான—கனிந்த-முதிர்ந்த--கோதை-தமயந்தியின்---நகைமுகம்-புன்சிரிப்பைபுடையமுகமாகிய-வாயில்பெற்று-தாதுபெற்று--பொன்னவிர்-பொன்னைஒப்போலும்பிரகாசிக்கின்ற--சுணங்குதேமலான--பூத்த-உண்டாகிய--புணர்-நெருங்கிய--முலை-ஸ்தனங்களாகிய--கோடு-கொம்பினை--புல்லி-தழுவி--கல்-மலைபோலும்-நவில்-சொல்லாநின்ற--தோளான்-தோளையுடையநளமஹாராஜன்—காமக்கடலகத்து-காமமாகியசமுத்திரத்தினிடத்தில், அழுந்தினான்-முழுகினான்—(எ-று) § இலக்கணக்கொத்து,[தனக்குப்பயனே பிறர்க்குப்பயனே தனக்கும்பிறர்க்குஞ்சாரிருபயனே, தனக்கும்பிறர்க்கும்பயன்சார்பிலவே,யெனநால்வகையாயியன்றேயிவைதாஞ்சிற்றறிவோர்விணை பேரறிவோர்வினை, யெனவிருகூறு பெட்டாமென்பர்,இவ்விதியால் அழுந்தினான்தனக்குப்பயன்வினை] (கருத்து) நளன்தமயந்தியைப்புணர்ந்துகாமக்கடலிலேமுழுகினான் என்பதாம்

எரிதிரைசுருட்டுமுந்நீரினியதெள்ளமிழ்திளுமிம்.....*
பொறைபுயிர்த்துலகில்வந்தபொலனெகிழியனையநங்கை
கறைகெழுகருவிவேற்கண்ணுலப்பட்டுவெம்போர்ம்.....*
திறல்கெழுசிக்கவேறுசிமிழ்ப்புண்டுகிடந்தகன்றே.....*

(இ-ள்) எறி-வீசாநின்ற—திரை-அலைகளை--சுருட்டும்-மடக்குகின்ற--முந்நீர்-கடலான—இனிய-இனிதாகிய--தெள்-தெளிந்த—அமிழ்திளுமிம்-அமிர்தத்தினுமே---பொறைபுயிர்த்து-பெறப்பெற்று--உலகில்வந்த-உலகத்தில்தோன்றிய-பொலம்கொடிய

னைய-பொற்கொடியையொத்த—நங்கை - தமயந்தியினது--கறை கெழு-உதிரந்தோய்ந்த--குருதிவைவேல்- சிவந்தகூரியவேல்போன் ற—கண்வலைப்பட்டு-கண்ணின்வலையிலகப்பட்டு--வெம்போர்-வெ வ்வியயுத்தத்தில்—திறல்கெழு-வலிமைமிக்க--சிங்கவேறு-நளனுகிய ஆண்சிங்கமான தை—சிமிழ்ப்புண்டு-கட்டுப்பட்டு--கிடந்தது- இரு ந்தது—(எ-று)அன்று-ஏ-அசை, (கருத்து) தமயந்தி கண்களாகிய வலைகளில் நளனுகியசிங்கங்கட்டுப்பட்டிருந்தது என்பதாம்.(இரு)

மல்லல்நீர்தாளிணைமனமதர்நெடுங்கணும்.....*
புல்லுவிட்டொழிபிலாவிபொன் றிமிலன்னவெண்ணி ... *
யல்லுநண்பகலும்விள்ளாதணிநலம்பருகியாங்குச்.....*
செல்வுழிநிகழ்ந்தவெல்லாஞ்செப்புவான்றொடங்குகின்றேன்

(இ-ள்) மல்லல்-வலிபொருந்திய—அம்- அழகிய—தோளிணை யும்-தோளையுடையநளனும்—மழை-குளிர்ச்சிபொருந்திய--மத ர்-களிப்பையுடைய--நெடுங்கணையும்- நெடியகண்களையுடைய தம யந்தியும்—புல்லுவிட்டு - ஒருவர்க்கொருவர்தழுவுதலைவிட்டு—ஒழி யில்-நீங்கில்--ஆவி உயிரான தை-பொன்றிமிலன்ன - இறக்குமென் றை--எண்ணி-நினைத்து--அல்லும்- இரவிற்பொழுதிலும்--நண்பக லும்-பகற்பொழுதிலும்--விள்ளாது-நீங்காமல்--அணி- அழகினது-- நலம்பருகி-நலத்தையுண்டு---ஆங்கு-அவ்விடத்தில்--செல்வுழி- செ லுமிடத்தில்—நிகழ்ந்தவெல்லாம்- நடந்தனவனைத்தும்—செப்பு வான்-சொல்லுப்படி-- தொடங்குகின்றேன்- ஆரம்பிக்கிறேன்— (எ-று)(கருத்து) நளனும், தமயந்தியும் மறுபவித்தவிடத்து நடந்த வையெல்லாஞ்சொல்லத்தொடங்குகின்றேன் என்றார் நூலாசிரியர். என்பதாம். (இ)

திருத்துயிலாரமார்பன்சேயரிக்கண்ணியோடு.....*
மருத்துயினுவந்தபம்பொணிநகர்க்கேகவெண்ணி,விரு
ப்பொடுவிதர்ப்பர்கோனுக்குணர்த்தலும்விதர்ப்பன்காதற்*
புரிக்குழன்மடந்தையோடும்வனவைமண்டபத்திற்புக்கான்*

(இ-ள்) திருத்துயில்-இலக்குமிதங்குகின்ற—ஆரமார்பன்- ப தக்கத்தையணிந்த மார்பினையுடைய நளன ஹாராஜன்— சேயரிக்க ண்ணியோடும்-தமயந்தியோடும்--அருத்திபின்-ஆசையினால்—உவ ந்து-மகிழ்ந்து--பைம்பொன்-பசியபொன்மயமாகிய— அணிநக ர்க்கு-அழகியமாலிந்தமாநகர்க்கு--ஏகவெண்ணி-போகும்படி நினை த்து—விருப்பொடு-ஆசையுடன்—விதர்ப்பர்கோனுக்கு- வீமரா ஜனுக்கு--உணர்த்தலும்-அறிவித்தலும்--விதர்ப்பன்-வீமராஜனை வன்--காதல்-ஆசையையுடைய--புரிக்குழல்- கட்டுப்பட்டகூந்தலை

யுடைய--மடந்தையோடும்-துணைவியுடன்--வதுவைமண்டபத்தில் விவாகமண்டபத்தில்--புக்கான்-புகுந்தான்—(எ-று) (கருத்து) நன்னமயந்தியுடனே தன்னூர்க்குப்போகவெண்ணிவிடையளிக்க நிவிக்க வீமன்தன்மகளுடன்(கலியாணமண்டபத்துக்குவந்தான்- எம்,

பொழிகதிர்மணியிற்செய்தபுதவுடைக்கடிகொள்வாயில்...*
குழைமுகம்பொருதவேற்கட்கோதையர்விளைவிற்றோழி ... ஜ
விழைவொடும்விதிர்ப்பர்கோமான்போற்றமைவிளம்பலோடு
ம்-மழவிடையனையான்போற்றுமாமனைதிறுவிணனே ... *

(இ-ள்) பொழிகதிர்-கதிர்களைவீசுகின்ற—மணியிற்செய்த-இரத்நங்களாற்செய்த—புதவுடை-கதவையுடைய—கடிகொள்-காவலிக்கொண்ட—வாயில்-வாசற்படியில்—குழைமுகம்-காதின்முகத்தை—பொருத-மோதிய—வேற்கண்-வேல்போன்றகண்களையுடைய—கோதையர்-மாதர்கள்—விளைவிற்றோழி-விளைத்துபோயி—விழைவொடும்-விருப்பத்தோடும்—விதிர்ப்பர்கோமான்-வீமராஜன்—போற்றமை-வந்தனன்மையை—விளம்பலோடும்-சொன்னவளவில்—மழவிடையனையான்-இளவேற்றையொத்தநளமஹாராஜன்—போற்று-வந்து—மாமனை-மாமனுடைய—திறுவிணன்-தழுவிக்கொண்டான்—(எ-று) (கருத்து)வீமன்வந்தனைப்பெண்களின்சொல்ல நளன்வீமனைத்தழுவினன் என்பதாம். (நூ)

மழைபுறந்தடக்கைவேந்தன்மனைப்பெருங்கிழமைபூண்ட. *
தொழுதகுகற்பினாளைச்சுடர்மணிக்கொம்பினல்லி... .. *
மெழில்குலந்தனேடறங்கையிறைஞ்சலுமெடுத்துமோந்து.ஜ
விழைவொடுகுறங்கில்வைத்துமெய்புறந்தழுவிக்கொண்டாள்

(இ-ள்) மழைபுறம் மேகத்தையொத்த—தடக்கை-விசாலம்பொருந்தியகையையுடைய—வேந்தன்-வீமராஜன்—மனை-வீட்டிக்கு—பெருங்கிழமைபூண்ட-பெரியவுரிமையைக்கொண்ட—தொழுதகு-வணங்கத்தக்க—கற்பினாள்-கற்பையுடையதாருகாசனியை--சுடர்-காந்தியையுடைய—மணிக்கொம்பின்-இரத்நக்கொம்புபோல்—எல்லை-உள்ளது—எழில்குலந்தனை-அழகெல்லாமொன்றுசேர்ந்தவடிவத்தை—நங்கை-தமயந்தியாளை—இறைஞ்சலும்-வணங்கவும்—எடுத்து-எடுத்து—மோந்து-மோந்து—விழைவொடு-ஆசையோடு—குறங்கில்வைத்து-தொடையின்மேல்வைத்துக்கொண்டு—மெய்புற-மெய்யிலே பொருந்த—தழுவினள்-தழுவிக்கொண்டாள்—(எ-று) (கருத்து) தமயந்தி தன்தாயை வணங்கினபின் தாயாகிய தாருகாசனி மகளையெடுத்து முத்தமிட்டுத் தொடையில்வைத்துத் தழுவிக்கொண்டாள் என்பதாம். (நூ)

அண்ணைதாடொழுதுபின்னரலத்தகக்குழம்புதோய்ந்த... *
பொன்னிதழ்க்கமலஞ்சேப்பப்புணர்முலைதாங்கலாகா..... *
மின்னுறழ்மருங்குதிம்பமெல்லெனவாதுங்கிப்போந்து *
தன்னுடைத்தாதைபம்பொற்றளிணைவணங்கினாளே.... *

(இ-ள்) அன்னை-தாயினது—காடொழுது-பாதத்தைவணங்கி—பின்னர்-பிறபு—அலத்தகக்குழம்புதோய்ந்த-செம்பஞ்சுக்குழம்புபழிந்த—பொன்-பொன்னையொத்த—இதழ்-இதழ்களையுடைய—கமலம்-பாதசாமானகள்—சேப்ப-சிவக்க—புணர்-நெருங்கிய—முலை-ஸ்தனங்களை—தாங்கலாகா-தாங்கமாட்டாத—மின்னுறழ்-மின்னலைபொத்த—மருங்கு-இடையானது—தேம்ப-வருந்த—மெல்லென-மிருதுவாக—ஒதுங்கி நடந்து—போந்து-வந்து—தன்-தனது—தாதை-ஸ்வாமி ஜனுடைய—பம்-பசிய-பொன்-பொன்னையொத்த—தாளிணை உடையபாதங்களை—வணங்கினாள் இறைஞ்சினாள்—எ-று)(கருத்து) சமயத்திதன்பிதாவாகியஸ்மனை வணங்கினாள்,எ-ம். (சூக)

வணங்கிதுண்மருங்குதோவவல்லிபிறைஞ்சிநின்ற... .....*
சுணங்கிளமுலைபஞ்சாயற்சுடர்க்கொழுதினையும்வேந்தர் ... *
நிணங்கமழ்வாய்திறந்துவிலைனையுநோக்கிநேரா..... ... *
ருணங்கியமூன்றிலம்பினுலகையுங்கடலுளாழ்த்தான்... *

(இ-ள்) வணங்கி-தொழுது—துண்-துப்பமாகிய—மருங்கு-இடையானது—தோவ-வருந்த—வல்லிபின்-கொடிபோல—ஒல்கி-அசைந்து—நின்ற எதிர்நின்ற—சுணங்கு-தேமல்பூத்த—இள-இளமையாகிய—முலை-ஸ்தனத்தையும்—அம்-அழகிய—சாயல்-தோற்றத்தையுமுடைய—சுடர்க்கொடிதனையும்-பின்னற்கொடிபோன்றதமயந்தியையும்—வேந்தர்-சத்திரியர்களாகிய அரசர்களது—நிணம்-மாமிசம்—கமழ்-நாறுகின்ற—வாய்-முகத்தில்-உள்ள நாக்கை—வைவேல்-கூரியவேலையுடைய—நளனையும்-நளமகாராஜனையும்—நோக்கி-பார்த்து—நேரார்-பகைவர்—உணங்கிய-வாடியிருக்கின்ற—மூன்றில்-மூற்றத்தையுடைய—வேந்தன்-விமராஜன்—உலகையுங்கடலுள்-சந்திராஷ்டமாகிபகடலினிடத்தில்—ஆழ்த்தான்-முழுகினான்—(எ-று) (கருத்து) விமராஜன் மகளையுமருமகனையும் பார்த்து மகிழ்ந்தான் என்பதாம். (சூஉ)

பண்ணைமைகலிநமரன்றேராயிரமிரட்டிபாய்மா..... ... *
வண்ணலலீகலிநல்பானையாயிரத்துபத்தினன்பான்... ...*
கண்ணைகன்விசுமபுதீக்கற்பகதருவிருந்து..... ..... *
மண்ணிழிந்தனையபேரருளாம்பதுமவழங்கலானே... .....*

(இ-ள்) பண்ணைசெம்-சேணமமைந்த—கலினம்-கடிவாளத்தை யுடைய—மான்-குதிரைகட்டிய—தேராயிரம் - ஆயிரந்தேர்களும் —இரட்டிபாய்மா- இரண்டாயிரங்குதிரைகளும்—அண்ணல்-பெருமையினையும்—அம்-அழகினையும்—களி- செருக்கினையுமுடைய —நல்-நல்ல—யானையாயிரத்தறுபத்தெண்பான் - ஆயிரத்தறுபத் தொன்பதுயானைகளும்—கண்ணகன்- இடமகன்ற—விசும்பு-தெய்வலோகம்—பூத்த-மலர்ந்த—கற்பகதருவினுடைய-கற்பகவிருட்சங்களுடனே—மண்-பூமியினிடத்து--இழிந்தனைய-வந்தனையொத்த—பேரூரம்பதும்- ஐம்பதுபெரியகிராமங்களையும்—வழங்கினான்-கொடுத்தான்— எ-று எ-அசை- (கருத்து) வீமராஜன் மகளுக்குத் தேர்-தூ-குதிரை உத-யானை- தூசுயக- ஊர்-நிய- கொடுத்தான் என்பதாம். (சுரு)

பொருதிரைப்புணரியீன்றபொலன்கொடியனையசெவ்வி... *
யரிவையரிருபத்தையாயிரவர்நல்லரங்கிலாடிம்.....*
வரிமுலைப்பவளச்செவ்வாய்வனிதையமுழுநூற்றெண்மர்... *
நிருபதுகோடிசெம்பொனினிதினில்வழங்கினனே... ....*

(இ-ள்) பொரு-மோதுகின்ற—திரை- அலைகளையுடைய—புணரி-திருப்பாற்கடலானது—ஈன்ற-பெற்ற—பொலன்கொடி- இலக்குமியை—அனைய- ஒத்த—செவ்வி - அழகையுடைய—அரிவையரிருபத்தையாயிரவர்-இருபத்தையாயிரந்தேவிகளுட—நல் - நல்ல—அரங்கில்-சபையில்—ஆடிம்-ஆடாநின்ற—எருமை - வளர்த்துவருகின்ற—முலை-ஸ்தனங்களையும்—பவளம்- பவளத்தையொத்த—செவ்வாய்- சிவந்தவாயினையுமுடைய—வனிதையமுழுநூற்றெண்மர்-எழுநூற்றெட்டுநாட்டியப்பெண்களும்—இருபதுகோடிசெம்பொன்-இருபதுகோடிசெம்பொன்னையும்-- இனிதினில்-இன்பமாக—வழங்கினனே-கொடுத்தான்—(எ-று) (கருத்து) வீமராஜன்தேவிகள் உயருக-நாட்டியப்பெண்கள்-எனை-பொன் - உய - கோடி கொடுத்தான் என்பதாம். (சுச)

பொழிகதிர்மணிசெய்கட்டில்புனைமலர்ப்பாயல்பைம்பொ *
னிழைபயில்வண்ணப்பேழைபினியசாந்தாந்தியோடி.....*
நிழறவழ்மணிக்கண்ணுழிதித்திலமுகடுவேய்ந்த . . ..*
வொழுகொளிக்கவரி பின்னவுலப்பிலதல்கினனே... ... ...*

(இ-ள்) பொழிகதிர்-கிரணங்களைப்பொழிகின்ற—மணிசெய்-இரத்நங்களாற்செய்த—கட்டில்- கட்டிலும்—புனைமலர்ப்பாயல்-புட்பசயனமும்—பைம்பொன்- பசியபொன்னுற்செய்த—இழை பயில்-ஆபரணங்கள்வைக்கின்ற—வண்ணப்பேழை - அழகியபெட்

திகளும்—இனிய- இனிமையையுடைய—சாந்தாற்றியோடு - சால் செய்வட்டத்துடன்—நிழறவழ்-ஒளிதவழ்கின்ற—மணிக்கண்ணுடி-இரத்தத்தால்விளிம்புசெய்தகண்ணுடிகளும்—நித்திலம்-முத்துக்களால்—மூகம்செய்ந்த-முகமிசெய்யப்பட்ட—ஒழுகொளி-மிகுந்த வொளியையுடைய—கவரி-சாமரைகளும்—இன்ன - ஆகியவிவைகளோ—உலப்பில அளவற்றவைகள்—நலகினுன்-கொடுத்தான் (எ-று) எ-அசை-(கருத்து) வீமராஜன் கட்டில்கள், புட்பசயனம், பெட்டிகள், ஆலவட்டம், கண்ணுடி, சாமரை, இவைமுதலிய பலவும் கொடுத்தான் என்பதாம் (சுரு)

அல்லியங்கமலநீங்கியாசரிற்புகுந்துவாழும்... .....*
மெல்லியபரியலாற்றுவிழைவொடுபலகாற்புல்லி..... ...*
மல்லலந்தெரியலவீமன்மனைவியர்பலருமாழ்கி... .....*
யெல்லியிற்றுயரிழந்தனித்தனியிரங்கினரே.....*

(இ-ள்) அல்லி-அகவிதழையுடைய—அம்-அழகிய—கமலம்-தாமரைமலரை—நீங்கி-விட்டு—அரசரில்- இராஜமனையில்—புகுந்து-சேர்ந்து—வாழும்-வாழ்கின்ற—மெல்லியல்-இலக்குமியாகியதமயந்தியை—பிரியலாற்று-பிரியமாட்டாத—விழைவொடு - ஆசையுடனே—பலகால்-பலதரம்—புல்லி-அணைத்துக்கொண்டு—மல்லல்-வளம்பொருந்திய—அம்-அழகிய—தெரியல் - மாலையணிந்த—வீமன்-வீமராஜனுடைய—மனைவியர்பலரும்-தேவிமார்பலரும்—மாழ்கி-மயங்கி—எல்லியில்-அளவில்லாத—துயரினேடும்-துன்பத்தோடும்—தனித்தனி-தனித்தனிபாக—இரங்கினர்-அழுதார்கள்—(எ-று) எ-அசை (கருத்து) வீமன்மனைவிகள்பலரும்தமயந்திபிரிவைச்சகியாமலாசையோடி அழுதார்கள் என்பதாம். (சுசு)

பெருந்துயருழந்துவாடும்பிணையனீர்த்தம்மைநோக்கி... ..*
விரிந்தபூந்துளவிண்ணன்பின்விளாமலர்க்கோதையேகை... ...*
வருந்திமுன்னுயிர்த்தநெண்ணீர் மறிகடல்வருந்திற்றென்ன
வருந்தவர்க்கிறைவனுகோதமனுற்றனனே.....*

(இ-ள்) பெருந்துயருழந்து-மிகுந்ததுன்பத்திலிலந்து—வாடும்-வருந்துகின்ற—பிணையனீர்த்தம்மை- மானேபொற்றமங்கையனை—நோக்கி-பார்த்து—விரிந்த-மலர்ந்த—பூம்-புட்பத்தையுடைய—துளவிண்ணன்பின் - துளசமாலையையுடையமகாவிஷ்ணுவின்பின்னே-விளா-வாசனைபொருந்திய—மலர்-தாமனாமலரில்வாசமாயிருக்கின்ற-கோதை-இலக்குமியானவள்--ஏக-போக—வருந்தி-வருத்தப்பட்டு---முன்னுயிர்த்த-முன்னேபெற்ற—நெண்ணீர்-தெளிந்தநீரையுடைய—மறி-பூளாநின்ற—கடல்-சமுத்திரமான—அரு

நீத்திற்றெவென்று-வருத்தமுற்றதோவென்று--அருந்தவர்த்கு-அரியதவத்தையுடையவர்க்கு—இறைவனை-அரசனை—கோதமன்-கௌதமன்--ஆற்றினன்-தேற்றினன்—(எ-று)(கருத்து)கௌதமர் வீமன்மனைவிகளைத்தேற்றினர் என்பதாம். (சுஎ)

அன்னையரம்மலர்நித்*தோழியையுருவிற்றெக்கி.....*
யன்னினுமிவண்மேற்காதலுளமெனவுரைக்கிலேம.....*
லென்னினுமின்றுதொட்டுயின்னுயிர்த்தோழிபலலே .....*
மின்னனுட்கன்னைநீயேவெண்டிவபுரிதியென்றூர்.....*

(இ-ள்) அன்னையர்-தாய்மார்கள்—அம்-அழகிய—மெல்-மிருதுவாகிய—ஓதி-கூந்தலையுடைய—தோழியை-உயிர்ப்பாங்கியை—அருளின்-கருபையினால்—நோக்கி பார்த்து—உன்னினும்-உன்னைப்பார்க்கிலும்—இவண்மேல்-இந்தத்தமயந்தியின் மீது--காதல்-ஆசை-உளமென-உள்ளமென--உரைக்கிலேம்-சொல்லுகின்றிலேம்--என்னினும்-ஆயினும்--இன்றுதொட்டும்-இன்றுமுதலாகவும்--இன்-இனிதாகிய--உயிர்த்தோழியல்லை உயிர்ப்பாங்கியலை--மின்னனுட்கு-மின்னையொத்ததமயந்திக்கு—அன்னை நீ-நீயே தாய்—வேண்டிவ-வேண்டியவைகளை—புரிதியென்றூர்-செய்யென்றுசொன்னார்கள்—(எ-று) * அகத்தியம்-சொற்பொருட்படலம்-தோழமைகொள்ளலாற்றோழியனச்சொல்ல (கருத்து) தாய்மார்களனைவருந்தமயந்திதோழியைப்பார்த்து இன்றுதொடங்கித்தமயந்திக்குதோழிநீயல்ல-நீயேதாய்- இவளுக்குவேண்டியனவற்றைச்செய்யென்றார்கள் என்பதாம். (சுஅ)

மணம்புரிபடலம்-முற்றிற்று.

மீட்சிப்படலம்.

இப்படலத்தால் நளமஹாராஜன் தமயந்தியோடுந் தன்னகரத்திற் குப்போதுதல் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மற்றிவைதிகழும்வேலைமகிழ்வொடுமாமன்றன்பால்... ... *
வெற்றிகொள்குருதிவைவேல்வேந்தர்கோன்விடைகொண்டேகி
யற்றமில்கேள்விசான்றவமச்சனாயினிதினேக்கி..... .....*
யிற்றைநாளெழுச்சியென்னவிமிழ்முரசறைவென்றான்

(இ-ள்) மற்றிலை-பின்பிக்காரியங்கள்--நிகழும்வேலை நடக்கும்பொழுது—மகிழ்வொடு - சந்தோஷித்துடனே—மாமன்னன் பால்-வீமராஜனிடத்தில்—வெற்றிகொள்- சயத்தைக்கொண்ட—குருதி-இரத்தத்தோய்ந்த—வை-கூர்மைபொருந்திய—வேல்-வேலையுடைய—வேந்தர்கோன்-நளமஹாராஜன்--விடைகொண்டேகி உத்தரவுபெற்றுக்கொண்டுபோய்—அற்றமில்-சோர்வில்லாத—கேள்வி-கல்விகள்--சான்ற-பொருந்திய--அமச்சரா-மந்திரிகளை---இனிதிருந்துக்கி-இன்பமாகப்பார்த்து--இற்றைநாள்-இன்றையத்தினம்---எழுச்சியென்ன-புறப்படுதலென்று--இமிழ்-சத்தியா நின்ற--முரசு-பேரிகையை—அமைகவென்றான் - அடியுங்களென்றுசொன்னான் (எ-று) * தன்னூல் - ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே- (கருத்து) நளன்மீமனிடத்து விடைபெற்றுக்கொண்டு மந்திரிகளைப்பார்த்து இன்றுபுறப்படுதலென்று முரசறையச்சொன்னனென்பதாம். (க)

(கலிவிருத்தம்)

அண்ணலங்குருதிவேலரசனைவலித்..... .....*
கண்ணகன்முரசெழுகடலினார்த்தெழ... .. ...*
வெண்ணிடவிமிலையென்னைநேமிசூழ்... .....*
மண்ணகவளைப்பெலாமலித்ததாணையே.....*

(இ-ள்) அண்ணல்-பெருமைபொருந்திய—அம்-அழகிய—குருதி-இரத்தந்தோய்ந்த--வேல்-வேலாயுதமேந்திய--அரசன்-நளமஹாராஜனுடைய—ஏவலில்-உத்தரவிலுல்--கண்ணகன் - இடமகன்ற—முரசு-பேரிகையான-து--எழுகடலின்-எழ்கடலின் ஒலியைப்போல—ஆர்த்தெழ-மிகுந்தொலிக்க—எண்-எள்ளா—இட - இடித்துக்கு—இடமிலையென்ன- இடமில்லையென்றுசொல்ல—நேமிசூழ்-சமுத்திரஞ்சூழ்ந்த—மண்ணகம்-பூமியினுடைய---வளைப்பெலாம்-எல்லையெல்லாம்—மலித்த - நிறைந்தன—தாணையே - சேனைகள்—(எ-று)(கருத்து) நளனேவலால்முரசறையச்சேனைகள் நிறைந்தனவென்பதாம். (உ)

* நிலவுவெண்கவிகைமேனிழற்றத்தண்மதிக் .. *
கலைநிலாக்குவித்தனகவரிசாலசெய..... ...*
மலர்த்தலையுலகெலாம்புரக்குமன்னவன்... ..... *
சிலையுலாந்தமனியத்தேரிலேறினான்..... ...ஜ

(இ-ள்) நிலவு-பிரகாசியாநின்ற—வெண்கவிகை-வெண்கொற்றக்கொடையை—மேல்-மேலே—நிழற்ற-பிடிக்க—தண்-குளிர்ச்சிபொருந்திய—மதி-சந்திரனுடைய—கலை-சோடசகலைகளின்--

நிலா-பிரகாசம்--குவித்தனை-குவித்தகோற்றம்போல்---கவரி- சாமரைகள்—கால்செய-காற்றைச்செய்ய—மலர்தலையுலகெலாம்-பரந்தவிடத்தையுடையஉலக முழுதும்—புரக்கும்-இரட்சிக்காநின்ற—மன்னவன்-அரசன்—சில- பல ஆம்பால்--உலாம்-உலாவுகின்ற ---தமனியம்-பொன்னாலாகிய--தேரில்-இரதத்தின்மீதில்--ஏறினான்- ஏறிக்கொண்டான்—(எ-று) * அகத்தியம்-குறிற்சீராலேகுறையுகரம் பெறும். (கருத்து) நளன்தேரிலேறினான் என்பதாம். (கூ)

கலிகெழுமுரசுகன்கறங்குமோதையாற்.....*
பொலன்முகடுடைத்துமேற்போயிற்றில்லையே--*
லலர்தலைவிசும்பினிலடங்கலாவதே ... ...*
நிலமிசையெழுத்துமேனிமிர்த்தவாளியே... .. *

(இ-ள்) கலிகெழு-சத்தம்பொருந்திய—முரசுகண்-பேரிகையின்கண்ணுனது—கறங்கும்-ஒலிக்கும்--ஓசையால்-சத்தத்தினால்--பொலன்-அழகுபொருந்திய—முகடு-அண்டமுகடானது—உடைத்து-உடைவுபட்டு—மேற்போயிற்றில்லையே - மேலண்டங்களிற் போகாமற்போனால்—அலர்தலை-பரந்தவிடத்தையுடைய— விசும்பினில்-ஆகாயத்தில்—அடங்கலாவதே-அடங்குவதாவதா — நிலமிசை-பூமி பின்மீது—எழுத்து-எழும்பி--மேல்-மேலே— நிமிர்ந்த-உயர்ந்த--வாளி புழுதிகள்—(எ-று) (கருத்து) புழுதிகள் பேரிகைச்சத்தத்தினாலண்டமுடைத்து அப்பாற்போகாவிடித் பூமிகாளாழா என்பதாம். (ச)

இருங்கடற்றானையினெழுந்தவுண்டிகள்.....*
பொருங்களிறுயிழ்மதம்பொழிந்ததில்லையே...*
கருங்கடலளறெழப்பருகிக்கார்க்குல, மொருங்கு
வான்பொழியினுமொழிக்கவொண்ணுமே.....*

(இ-ள்) இரும்-பெருமைபொருந்திய—கடற்றானையின்- சேனாசமுத்திரத்தில்—எழுந்த-எழும்பிய--துண்டிகள்-துண்ணியபொடிகள்—பொருரும்-சண்டைசெய்யாநின்ற--களிறு-யானைகள்---உயிழ்-சுக்காநின்ற--மதம்-மும்மதத்தையும்— பொழிந்ததில்லையேல்-பொழியாமற்போனால்—கரும்- கறுத்த — கடல்-சமுத்திரசலத்தை--அளறெழ-சேறுபட—பருகி-குடித்து—கார்க்குலம் - மேகக்கூட்டங்கள்--ஒருங்கு-ஒருமுகமாய்--வான்-ஆகாயத்தினின்று-பொழியினும்-சொரிந்தாலும—ஒழிக்கவொண்ணுமோ - போகக்கூடுமோ--(எ-று) (கருத்து) யானைகள்மதம்பொழியவிடில் மேகங்கள் கடலேமுற்றுங்குடித்துப்பொழியினும் புழுதிகளை ஒழிக்கக்கூடுமோ என்பதாம். (டு)

சுடர்விடுபெருமணிச்சூட்டரா வின்மே... ...*
னெடுநிலந்தளக்குறநின்றவாற்றினுற்... ... ..*
படரிருவிசும்பினிற்பாய்த்தலைலது..... .....*
புடவிமேன்மிதித்திலபுரவிவெள்ளமே... .....*

(இ-ம்) சுடர்-பிரகாசத்தை — விடு- வீசாநின்ற — பருமணி-பருத்தஇரத்தங்களைபொருத்திய — சூட்டு-சுழியையுடைய — அரா வின்மேல்-ஆதிசேஷன்மீது — நெடுநிலம்-நெடியபூமி — தளக்குற-அசைவுற — நின்றவாற்றினால்-இருந்தபடியால் — படர் - விரிந்த — இரு-பெருமைபொருந்திய — விசும்பினால்-ஆகாயத்தில்--பாய்ந்தவல்லது-தாவிச்சென்றவனல்லாமல் — புடவிமேல்-பூமியின்மீது — மிதித்தல்-நடக்கவில்லை — புரவிவெள்ளம் -'குதிரைக்கூட்டங்கள்— (எ-று) எ-ஆசை. (கருத்து) குதிரைக்கூட்டங்கள் ஆகாயமார்க்கமாகப்போயின என்பதாம். (சு)

புதையிருள்சீத்தொளிபொழியுஞ்செங்கதி ... *
ருலையமால்வனாபெழவெளியிழத்தலான் ...*
மதிபலவாய்வெயின்மறத்தற்போலுமாற் ... *
கதிர்நிலாமுத்தவெண்கவிகையீட்டமே..... ...*

(இ-ள்) புதை நிறைந்த — இருள்-இருளை — சீத்து- கெடுத்து —ஒளி-பிரகாசத்தை--பொழியும்-சொரியாநின்ற — செங்கதிர்-சூரியன்--உதயமால்வனாபெழ-உயர்ந்தவுதயகிரியிலுதித்த--ஒளிபிழத்தலால்-பிரகாசத்தைநீங்குதலால் — மதி-சந்திரனானவன் — பலவாய்-அநேகரூபமாய்--வெயில்-சூரியனை--மறைத்தல்போலும்-மறைத்தலையொக்கும் — கதிர்நிலா-நிலவுபோற்கிரணத்தைவீசுகின்ற--முத்தம்-முத்தினாற்செய்த — வெண்-வெளுமைபொருந்திய — கவிகை யீட்டம்-குடையின்கூட்டங்கள் — (எ-று) ஆல்-ஏ-அசை. (கருத்து) குடைக்கூட்டங்கள் அநேகசந்திரனை யொத்திருந்தன என்பதாம்.

மழலையங்கிள்ளையும்வளர்த்தபூவையுங்..... ...*
குழைபொருதடங்கணார்கொண்டுசூழ்வர .. ...*
விழைவளர்முலைபினுளினிலாக்கதிர்..... .....*
பொழிமணிச்சிவிகையிற்போயினாளரோ... ...*

(இ-ள்) மழலை-மழலைச்சொல்லையுடைய — அம்-அழகிய — கிள்ளையும்-கிளிகளும் — வளர்த்த-தாம்வளர்த்த — பூவையும்- நாகணவாய்ப்புள்ளும் — குழை-குண்டலமணிந்தகாதுடன் — பொரு - போர்செய்யாநின்ற--தடம்-விசாலமாகிய--கண்ணர் - கண்களையுடையதாதியர்கள் — கொண்டு-கையிற்கொண்டு — சூழ்வர - சூழ்ந்துவர — இழை-ஆபரணங்களையணிந்த — வளர்-வளர்ந்துவராநின்ற — முலையி

ளுள்-ஸ்தனங்களையுடையதமயந்தி--இளநிலா-இளஞ்சந்திரன்போ
ல—கதிர்-கிரணங்களே—பொழி- சொரியாநின்ற—மணிச்சிவிகை
யில்- அரசன்பல்லக்கின்மீது—போயினுள் - போனுள்—(எ-று)
அரோ-அசை.(கருத்து)தமயந்திபெண்கள் சூழ்ந்துவர அரசன்சி
விகையின்மேற்போயினுள்,எ-ம். (அ)

கதிர்மணியடைப்பையுங்கால்செய்வட்டமுந்... *
தகைமயிர்க்கவரியுந்தாங்கிமெல்லென..... ...*
வதிர்குரற்கிண்கிணிசிலம்பொடார்ப்பெழ... ...*
மதரரிநெடுங்கணார்மருங்குபோயினர் .. ..*

(இ-ள்) கதிர்- கிரணங்களையுடைய—மணி-இரத்நத்தினுற்செ
ய்த—அடைப்பையும்-தாம்பூலப்பையையும்—கால்செய்வட்டமு
ம்-விசிறிகளையும்—தகை-நெருங்கிய—மயிர்- மயிரையுடைய—க
வரியும்-சாமரைகளையும்--தாங்கி-சுமந்து—மெல்லென- மெதுவா
க—அதிர்-அதிர்ந்த—குரல்-சத்தத்தையுடைய—கிண்கிணி-கிண்கி
ணிகள்--சிலம்பு-சிலம்புகளுடனே--ஆர்ப்பெழ-ஆரவாரிக்க-மதர்
-மதர்த்த—அரி-செவ்வரிபரந்த—நெடுங்கணார்- நீண்டகண்களையு
டையமாதர்கள்—மருங்கு-பக்கத்தில்—போயினார்-போனார்கள்—
(எ-று) (கருத்து) பெண்கள் அடைப்பை-ஆலவட்டம்-சாமரை-இ
வைகளேத்தாங்கிப்பின்சென்றார்கள்,எ-ம். (க)

சாந்தணிந்தோங்கியதடங்கொள்வெம்முலை ... *
யேந்திழைத்தோழிபொண்ணினம்மங்கையர்... *
பூந்கருநீழலிற்பொன்னனைனக்..... .....*
கூந்தலம்பிடியிசைக்குழாங்கொடேகினர்.....*

(இ-ள்)சாந்து-சந்தனத்தை—அணிந்து- தரிக்கப்பெற்று—
ஓங்கிய-உயர்ந்த—தடங்கொள்-விசாலத்தைக்கொண்ட—வெம்-வி
ருப்பத்தைத்தரும்—முலை-ஸ்தனத்தினிடத்தில்—ஏந்திழை- ஆப
ரணங்களேத்தாங்கிய—தோழியர்-பாங்கியர்களும்—எண்ணில- எண்
ணிக்கையில்லாத—மங்கையர்-பெண்களும்—பூ-பூவினையுடைய-
சரு-கற்பகவிருட்சத்தினை—நீழலில்- நிழலில்வாசம்பண்ணுகின்ற
—பொன்னனைன-இலக்குமியையொத்த,அரம்பைமாதர்கள்போ
ல—கூந்தல்-புறமயிரினையுடைய—அம்-அழகிய—பிடியிசை- பெ
ட்டையானைபின்மேல்—குழாங்கொடு-கூட்டங்கொண்டு—ஏகினர்
-போயினர்கள்—(எ-று)(கருத்து) தோழிமார்களும் பெண்களும்
யானைமேலேறிப்போனார்கள்,எ-ம். (ட)

கான்பயின்மைமலர்ச்செவ்விகாழுறு.....|...*
மான்பயிலேனுக்கியர்மகரயாழிடைத்..... .....*

தேன்பயிறெள்விளிபாடத்தேனாயிற்... ... ...*
கூன்களுஞ்சிந்தொடுகுறளுஞ்சென்றவே .. ...*

(இ-ள்) தான்-வாசனை—பயில்-பொருந்திய—மலாமலர்-தார் மலாமலரில்வாசம்பண்ணுகின்ற—செல்வி- இலக்குமியானவள்—காமுறும்-இச்சியாநின்ற—மான்-மான்கள்—பயில்-கற்காநின்ற—நோக்கியர்-பார்வையையுடையமாதர்கள்—மகரயாழ்பாட-மகரவீணை பிணிடத்தில்—தேன்பயில்-தேன்போல் மதுரம்பொருந்திய—தெள்விளிபாட-தெள்விளியென்னும் இராகத்தைப்பாட—தேனாயில்-தேனாபோல்—கூன்களும்-கூனரும்—சிந்தொடு - அவயவத்தவருடன்—குறளும்-குள்ளரும்—சென்ற- போயினர்—(எ-று) (கருத்து) பெண்கள் மகரயாழ்பாடக் கூனரும் அவயவ வீனரும் குள்ளரும்போனார்கள் என்பதாம். (உக)

கொடிகளுங்குடைகளுங்குழுமப்பல்வியங்.....*
கடலுடைந்தாரெனக்கறங்கியார்த்தெழ ... ...*
வடிகெழுகுருதிவேன்மன்னர்சூழ்வர ... ...*
நிடதநாடனைந்தனனேமிவேந்தனே... ... ...*

(இ-ள்) கொடிகளும்-துவசங்களும்—குடைகளும்-கவிகைகளும்—குழுமை-சுற்றிவர—பல்லியம்- நாலுவிதவாத்தியங்கள்—கடலுடைந்தாரெனை- சமுத்திரமுடைந்துவருதல்போல—கறங்கியார்த்தெழ-குமுறியாரவாரிக்க—வடிகெழு-வடித்தல்பொருந்திய—குருதி-இரத்தத்தோய்ந்த—வேல்-வேலாயுதத்தையுடைய—மன்னர்-அரசர்கள்—சூழ்வர-சூழ்ந்துவர—நிடதநாடனைந்தனன்-நிடததேசத்தைச்சேர்ந்தான்—நேமி உலகத்தையுடைய—வேந்தன்-நளமஹாராஜன்—(எ-று)(கருத்து) நளன் அரசர்கள் புடைசூழ்ந்துவர நிடதநாட்டைச்சேர்ந்தான் என்பதாம். (உட)

அருமறைமுனிவருமமைச்சர்வெள்ளமும் .. ...*
குரைகடற்றானையுங்குரவர்கூட்டமு..... *
மூரசொலியதிர்குரன்முகிலினுர்த்தெழ .. ..*
விருநிலக்கிழவனெதிர்கொண்டாரரோ... ...*

(இ-ள்) அரும்-அரிதாகிய—மறை - வேதத்தையுடைய—முனிவரும்-வேதியரும்—அமைச்சர்வெள்ளமும்- மந்திரிகளின்கூட்டமும்—ஞமா-சத்தியாநின்ற—கடற்றானையும்-சேனைசமுத்திரமும்—குரவர்கூட்டமும்-பெரியோர்களின்கூட்டமும்—மூரசொலி - பேரிலகுபின்சத்தமானது—அதிர்குரல்-அதிர்கின்றகுரலையுடைய—முகிலின்-மேகம்போல—ஆர்த்தெழ-ஆரவாரிக்க—இரு- பெரிய—நிலக்கிழவனை-பூமிக்குரியநளமஹாராஜனை—எதிர்கொண்டார்-எதிர்

கொண்டார்கள்—(எ-று) அரோ-அசை- (கருத்து) முனிவர்களும் மந்திரிகளும், சேனைகளும், பெரியோர்களும், நளனுக் கெதிர்வந் தார்கள் என்பதாம். (யசு)

அகழியங்கடல்புடையணிந்துநீணிற..... ...*
முகிறவழ்மூதெயின்முற்றியின்னகிற்... ... ...*
புகைகமழ்மணிப்பொன்செய்மாடத்தி ... *
னகைநிலாமதிதவழ்தகரமெய்திஞன்... ... ...*

(இ-ள்) அகழி-இடங்காகிய—அம்-அழகிய—கடல்-சமுத்திரத்தை—புடையணிந்து-பக்கத்தில்தரித்து—நீணிற- நீலநிறம்பொருந்திய—முகிறவழ்-மேகந்தவழாநின்ற—மூதெயில்-பழமையாகியமதில்—முற்றி-சூழ்ந்து—இன்னகில்-இனியஅகிலினது—புகை-புகையானது—கமழ்-பரிமளியாநின்ற—எரி-பிரகாசம்பொருந்திய—மணி-இரத்நத்தினுலும்—பொன்செய்-பொன்னுலுஞ்செய்த—மாடத்தின்-உப்பரிகையின்மீது—நகை- பிரகாசியாநின்ற—நிலா-சந்திரிகையையுடைய—மதிதவழ்-சந்திரன்தவழாநின்ற—நகரம்-மாவித்தநகரத்தை—எய்தினன்-சேர்ந்தான் (எ-று)--(கருத்து) நளன்மாவித்தநகரத்தைச்சேர்ந்தான் என்பதாம். (யச)

பொருவருங்கங்கைநீர்நிறைத்துப்பூசுர... ... *
பொரிமணிப்பொற்றசும்பேற்றிமுன்வர... .....*
விரைகமழ்செழுந்தொடைவீமன்மாதெயிற் ஜ
திருவளர்கோயிலிற்செல்வனெய்தினன்.....*

(இ-ள்)பொருவரும்-ஒப்பில்லாத--கங்கைநீர்- கங்காசலத்தை—நிறைத்து-பூரித்து—பூசுரர்-வேதியர்கள்—எரிமணி- பிரகாசம்பொருந்திய இரத்நமழுதிய—பொற்றசும்பு- பொன்னுற்செய்த பூரணகும்பத்தை—ஏந்தி-தாங்கி—முன்வர-எதிர்வர—விரை- வாசனை---கமழ்-பரிமளியாநின்ற—செழும்-செழுமையாகிய—தொடை-மாலையையணிந்த—வீமன்மாதெயிம்- தமயந்தியினுடனே—திருவளர்-இலக்குமிவாசம்பண்ணுநின்ற—கோயிலில்- அரண்மனையில்—செல்வன்-நளமஹாராஜன்—எய்தினன் - சேர்ந்தான்—(எ-று)(கருத்து)பிராமணர்கள்கங்கையைப் பொற்குடத்திறகொண்டெதிர்வர நளமஹாராஜன் தமயந்தியுடனே அரண்மனையிற் சேர்ந்தான் என்பதாம். (யஅ)

மீட்சிப்படலம் - முற்றுப்பெற்றது.

கலிதோன்றுபடலம்.

இப்படலத்தால் தமயந்தியின் விவாகத்தைக்கருதிவந்த கலி அவளை நளன் விவாகஞ்செய்தானென்னும் பொறாமையால் அவளை வருத்துகந்து அவள நாகரத்திற்றோன்றிக் காலம் பார்த்திருத்தல் சொல்லப்படுகின்றது.

(கலிவிருத்தம்.)

ஈங்கிவனின்னணமிருப்பவாலிடைப்.....*
பூங்கழல்விண்ணவர்போகுமேல்வையிற்..... ...*
நீங்குறுபபுநீ துரூழ்வர .... *
வாங்கவர்முன்கலியடைந்ததோ துவாம்.....*

(இ-ள்) ஈங்கு - மாவிந்தமாநகரத்தில்—இவன்-இந்தநளமஹாராஜன்—இன்னணம்-தமயந்தியோடுமகிழ்ந்து--இருப்ப-இருக்க—வானிடை-ஆகாயத்தினிடத்தில்—பூ-அழகிய—கழல்-வீரகண்டாமணியையணிந்த—விண்ணவர்-தேவர்கள்—போகுமேல்வையில்-போகுஞ்சமயத்தில்—நீங்குறு-குற்றம்பொருந்திய--பபபழி-பபபழியும்—நீ து-பொல்லாங்கும்—சூழ்வர-சுற்றிக்கொண்டுவர—அவர்முன்-அந்தத்தேவர்களுக்கெதிரில்—கலி-கலிபுருஷனைவன்—அடைந்தது-வந்ததை--ஓ துவாம்-சொல்லுகிறோம்—(எ-று) ஆங்கு-அசை-(கருத்தது) நளன்மாவிந்தமாநகரிலிருக்கத்தேவர்கள் போகும்போது அவர்கள்முன் சனிபகவான் வந்ததைச் சொல்லுவோம் என்பதாம். இஃதுபுராணிகர்கூற்று. (க)

வந்தவெம்கொடுங்கலிதன்னைவாவ்பட .. ..*
நிந்திரன்யாண்டுநீயகின்றுரையெனச்.....*
சந்தணிமுலைத்தமயந்திமன்றல்கேட்... ..... *
டந்தமிலைவேட்கையாலடைந்துளேனென்றான் *

(இ-ள்) வந்த-எதிரில்வந்த—வெம்-வெவ்விய—கொடும்-கொடுமையையுடைய—கலிதன்னை-கலிபுருஷனை—வான்-செய்வலோகத்தைதேராகிய—படர்-போகின்ற—இந்திரன்-தேவேந்திரன்—யாண்டு-எவ்விடத்துக்கு—நீ-நீ—எகின்றுரையென்-போகின்றுரையென்று கேட்க—சந்தணி-சந்தனத்தையணிந்த—முலை-ஸ்தனங்களையுடைய—தமயந்தி-தமயந்தியினது—மன்றல்-கலியாணத்தை—கேட்டு-கேள்விப்பட்டு—அந்தமில்-முடிவில்லாத—வேட்கையால்-ஆ

சையினும்—அடைந்துளனென்றான்-வந்தேனென்றான்—(எறி) (கருத்து) இந்திரன்சனிபகவானே எங்கேபோகின்றாயெனக்கேட்க-அச்சனிபகவான் தமயந்திவிவாகத்திற்குப்போகின்றேனென்றான்பதாம். (உ)

எம்றனுமமர்கோன்முறுவலெய்தியம்.....*
மூன்றனுக்கோதனிவந்தீங்கெனை..... .....*
வென்றிவேனிடர்கோன்றனக்குமென்றொடை*
துன்றிருங்கூந்தலாள்சூட்டினளென்றான்..... *

(இ-ள்) என்றனும்-இப்படியென்றுசொன்னவளவில்—அமரர்கோன்-தேவேந்திரன்—முறுவலெய்தி - சிரித்து—அம்மன்றனுக்கோ-அந்தக்கலியாணத்திற்கா—தனி- தனியாய்—வந்தீங்கெனை-இவ்விடத்தில்வந்ததென்று—வென்றி-வெற்றிபொருந்திய—வேல்-வேலையுடைய—நிடதர்கோன்றனக்கு-நளமஹாராஜனுக்கு—மென்றொடை-மிருதுவாகியமாலையை—துன்று-நெருங்கிய—இரும்-பெருமைபொருந்திய—கூந்தலாள்-கூந்தலையுடையதமயந்தி—சூட்டினளென்றான்-அனிந்தாளென்றுசொன்னான்(எ-று) (கருத்து) இந்திரன் தமயந்தி நளனுக்குமாலையிட்டாளென்றான் என்பதாம்.

விண்ணவரனைவரும்வெள்கப்பூந்தொடை... ...*
மண்ணகத்தரசனுக்கணியுமாணிழை ... ...*
யெண்ணமூங்கெழுத்தவட்பிரிப்பனீண்டெனைக்*
கண்ணழல்கதுவவெங்கலியுங்கூறினன்.....

(இ-ள்) விண்ணவரனைவரும் - தேவர்களியாவரும்—வெள்கவெட்கப்பட—பூந்தொடை-புட்பமாலையை--மண்ணகத்தரசனுக்கு-பூலோகத்தராஜனுக்கு--அணியும்-தரித்த—மாணிழை - மாட்சிமைபொருந்திய வாபரணங்களையுடையபெண்ணினாள்—எண்ணமூங்கெழுத்து-நினைப்பையுங்கெடச்செய்து—அவள்-அவளை--பிரிப்பன்-பிரிந்துவிடுவேன்—ஈண்டெனை-இவ்விடத்தென்னை--கண்ணழல்கதுவ-கண்ணில்நெருப்புப்பொறிபறக்க—வெங்கலியும்- வெவ்வியகலிபருகியும்—கூறினன்-சொன்னான்—(எ-று) (கருத்து) தேவர்கள்வெட்கநளனுக்குமாலைதரித்ததமயந்தியைபிரிப்பேனென்று சனிபகவான்சொன்னானென்பதாம். (ஊ)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

அருந்ததிகற்பினல்லாளரசிளங்குமரன்றன்னைப்.....
பிரிந்திடவியற்றிப்பின்னர்பெறுவதுதிமையன்றே... ... *
விரிந்தநூற்கேள்வியென்னும்பிரமனைவிழையவுள்ளம்...*
பொருந்தியதெவன்கொல்கல்லாப்புல்லரிற்புகழின்மிக்கோய்.

(இ-ள்) அருந்திறை-அருந்தகையையொத்தீ—கற்பின்-பதிவிர தீக்கையுடைய--நல்லாள்-சமயந்தி, அரசிளங்குமரன்றன்னை-இவ் வைமபொருந்திய காதற்குமாரனுள தளமஹாராஜனை--பிரிந்திரு யத்தி-நீங்கும்படிசெய்து---பின்னர் - பின்பு---பெறவது-அந்தமா தைப்பெற்றுக்கொள்வது--நீலமயன்றிரு-குற்றமல்லவோ--விரிந் த-பரந்த--நூற்கேள்வி-நூல்விசாரணை--எல்லும்-யாதுபயனுந்தி ரும்பிறர்மனைவிழைய-பிறர்மனைவிழைய விரும்ப-உள்ளம்பொருந்தி யதெவன்-மனஞ்சும்மதிதீது-என்னகாரணம்—கல்லாபடியாத-- புல்லறிவு-மூடவுரப்போல--புகழினமிக்கோய்- இரத்தியினமிக்கவ மை—(எ-று)கொல்-அசை-(கருத்து) இந்திரன்தளனைவிட்டுத் தம யற்றிலையப்பிரிந்தவளைப்பெறவதுகுற்றமல்லவா பிறன்மனைவிழை யிச்சிப்பதென்ன என்றான் என்பதாம். (சு)

இணையனவமரர்கூறவிருகையும்புடைத்தூநக்குப்..... ... *
பூணைமலர்க்கோதைநல்லார்புணர்முலைகுழையப்புல்லி---.. *
வேணுதுகினெஞ்சுமின்பவாழ்வினையன்றிமற்றோர்... ...*
நீணெவருமின்பமுண்டேலிகழ்தற்குரியதுண்டோ... ... *

(இ-ள்) இணையன-இப்படிப்பட்டவைகளை—அமரர்கூற- தே வர்கள்சொல்ல--இருகையும்-இரண்டுகையும்--புடைத்து-கொட்டி —நக்கு-சிரித்து--பூணைமலர்க்கோதைநல்லார்-மலராலலங்கரிக்க ப்பெற்றகூந்தலையுடையமாதர்—புணர்முலை-நெருங்கியமுலைக ளை--குழையப்புல்லி-குழையும்படிதழுவி--வேணுகட்டியிருக்கின்ற —நெஞ்சில்-ஆடையை--நெகிழ்க்கும்- அவிழ்க்கின்ற--இன்பவாழ்வி னையன்றி-காமவின்பவாழ்வினையல்லாது--மற்றோர்- வேறுமொரு —நீணெவருமின்பமுண்டேல்- நீணெடுந்தற்கரியவின்பமுண்டாகில்— நீகழ்த்துதிர்-சொல்லுங்கள்--நீவிரென்றான் - நீங்களென்றுசொன் னான்—(எ-று)(கருத்து) தேவர்களிவ்வாறுசொல்லச் சனிபகவான் பெண்களின்பத்தைப்பார்க்கிலும் வேறின்பமுண்டாகுந் சொல் லுங்களென்றான்,எ-ம். (சுஎ)

மறைநெறிபிறழக்கூறுமிவரெறிம்வாய்மைகூறி.....*
லறநெறிகிறப்புமென்னுவமரரும்விசும்பிற்போனார்...... *
தெறுதொழிற்கலியுங்காமஞ்சிதைத்துமீதூரவேக .....*
நெறிமுறைவழுவல்செல்வாநிடதநாடனினிற்சென்றான் .. *

(இ-ள்)மறைநெறி-வேதவழி--பிறழ-மாறுபட--கூறும்-சொ ல்லும்--இவரெறிம்-இக்கலியிற்றோன்றும்--வாய்மைகூறில் - உண்மை பேசில்--அறநெறி-தருமவழி-திறம்புமென்னு-கெடுமென்று,அம ரரும்-தேவர்களும்—விசும்பிற்போனார்-சொற்கதைச்சேர்ந்தார்க

ன்--தெறு-கொல்லாநின்ற--தொழில்-செய்கையையுடைய— கலியும்-கலிபுருஷனும்--காமம்-பிரகமான-து--சிதைத்-து-வரம்புகடந்-து —மீ-தூர-அதிகரிக்க--வேதநெறிமுறை-வேதவழியின்முறையான-து--வழுவலசெல்லா-மாறுபடாத--நிடதநாடதனில்- நிடததேயத்தில்--சென்றான்-போலான்—(எ-று) (கருத்து) தேவர்களிடனுடன் பேசிற்றருமங்கெடுமென்று சுவர்க்கத்திற்குப் போனார்கள் சனிபகவான் நிடதநாட்டிற்குப்போனான் என்பதாம். (எ)

மல்லலம்பழனவேலிவளங்கெழுநிடதநாட்டி..... ....*
னல்லலுற்றரிதிற்செல்லுங்கொடுங்கலியரசர்வேட்ப.....*
வெல்லுலப்பில்வேள்வியாற்றியருமறையிலவோரொங்குஞ் ...*
சொல்லியபதங்கள்கேட்டுத்துணைப்பதம்பெயர்த்திலானே. *

(இ-ள்) மல்லல்-வளம்பொருந்திய--அம்-அழகிய--பழனம்-கழனிகளே-வேலி வேலியாகவுடைய--வளங்கெழு-செல்வம்பொருந்திய--நிடதநாட்டின்-நிடததேயத்தில்---அல்லலுற்று-துன்பமுற்று--அரிதிற்செலலும்-அருமையாகப்போகாநின்ற--கொடுங்கலி-கொடியகலியானவன்--அமரர்வேட்ப-தேவர்கள்விரும்ப--எல்லையில்-அளவில்லாத--வேள்வியாற்றி-யாகத்தைச்செய்து---அரும்-அரிதாகிய--மறைபயில்வோர் வேதப்பிரமாணர்கள்--எங்கும் - எவ்விடத்திலும்--சொல்லிய-சொன்ன--பதங்கள்கேட்டு- வேதப்பதங்களைக் காதற்கேட்டு—துணைப்பதம்-தன்னுடையவுபயபதங்களை--பொருத்திலான்-எய்தாதவைகளில்லை—(எ-று) (கருத்து) சனிபகவான் நிடதநாட்டில் வேதப்பிராமணர்கள்சொல்லும்வேதப்பதங்களைக்கேட்டுத்தன்னிருபதங்களையெய்தாதிருந்தான் என்பதாம்.(அ

செம்மையிற்றிறம்பல்செல்லாமறையில்சிறுவனுங்கோர்..*
கைம்மையைக்கலத்தலைக்கிக்களிமகிழ்சிறந்துசெல்வான்**
வம்மினென்றமரர்தம்மைமறையினுற்றுக்கேளா.....*
வம்மவோமகமென்றஞ்சியலக்கணுற்றகன்றுபோனான்.....*

(இ-ள்)செம்மையில்-நன்னெறியில்--திறம்பல்செல்லா-மாறுபடாத--மறைபயில்-வேதம்படிக்கின்ற--சிறுவன்-ஒருபிரமசாரி—ஆங்கோர்-அங்கொரு--கைம்மையை-கைம்பெண்ணை---கலத்தலைக்கி-புணர்தலைப்பார்த்து--களி-செருக்கையுடைய---மகிழ்-சந்தோஷம்--சிறந்து-அதிகரித்து--செல்வான்-போகின்றவன்--வம்மினென்று-வாருங்களென்று--அமரர்தம்மை-தேவர்களை -- மறைபயிலும்-வேதத்தினுலே--கூற-அழைக்க--கேளா-கேட்டு -அம்மவோ- ஓ அம்ம--மகமென்று-யாகமென்று--அஞ்சி பயத்து-- அலக்கணுற்று-துன்பமுற்று--அகன்றுபோனான் - அப்புறம்போயினான்—(எ-று)

(கருத்து) பிரமசாரிகளைம்பெண்ணாக்கலத்தைக்கண்டு செல்வஞ் சனிபகவான்வேதத்தினுல் தேவர்களாவாருங்களென் றழைக்கக்கே ட்டு ஓர்யாகமெண்ணஞ்சிப்போனன் என்பதாம். (கூ)

அருமறைமுனிவர்யாருமோர்கலத்தார்வமோடும்.....
பறுகிய வாறுதோக்கித்திவினைபயற்றெனன்ன.....
விரைவிலிற்சேறலோமமறைமொழிகூறும்வேள்விக்... ..
குரிய ஆசாமபானமெனவுளமுடைந்துபோனன்.... .....

(இ-ள்) அரும்-அரிதாகிய—மறைமுனிவர்யாவரும்- வேதியர் களெல்லாரும்— ஓர்கலத்து-ஒருபாத்திரத்தில்— ஆர்வமோடும் - ஆ சையுடன்—பறுகியவாறுதோக்கி-பாவமபண்ணுகின்றதெதியைப் பார்த்து—நீ பிணைபபந்தமென்ன - நீமையுண்டாயிற்றென்று--வி ரைவிலில-சீகரத்தில்--சேறலோடும்-போனமாத்திரத்தில்---மறை மொழி-வேதவசனத்தை—கூறும்-சொல்லும்— வேள்விக்கு-யாகத் துக்கு—உரியது உரித்தானது--சோமபானமென-சோமபானமா கமென்று--உளமுடைந்து-மனங்கலங்கி--போனன்-போயினன்- —(எ-று) (கருத்து) சனிவேதியர் யாவருமோர்கலத்திற் பானம்ப ண்ணுவதைக்கண்டு செல்பவன்யாகத்திற்குரிய சோமபானமென் றஞ்சிப்போனன் ,எ-ம். [சோமபானம்-மதுபானம்.] (ஙு)

நிழல்சுளிகளிதலியாணைநிடதர்கோன்மகிழ்ச்சிகூர்ந்து . . . .
பழமறைக்கிழவர்யாரும்பரிவொடுகவர்ந்துகொள்ள... ...
விழுநிதிபழனநாடுவேண்டுபடிவெறுப்பநாடும்... ... ...
பொழிதருபுனலைநீந்திபோக்கரிதென்னநின்றன்.....

(இ-ள்) நிழல்-தன்னிழலை—சுளி-கோபிக்கிற — களி - செருக் கைப்பொருந்திய—தலியானை-தலையானையையுடைய--நிடதர்கோ ன்-நளமகாராஜன்—மகிழ்ச்சிகூர்ந்து-சந்தோஷமிகுந்து — பழ மறைக்கிழவர்யாரும்-பழமையாகிய வேதப்பிராமணர்களெல்லா ரும்—பரிவொடு-ஆசையுடன்—கவர்ந்துகொள்ள-பெற்றுக்கொள் ள—விழுநிதி-மேன்மையாகிய நிரவியமும்--பழனம்-கழனிகளும், நாடு-ஊர்களும்--வேண்டுபடி-வேண்டியவைகளை—வெறுப்ப-வெறு க்கும்படியாக—நாடும்-நாவ்தோறும்—பொழிதரு - தித்தம்பண் ணுகிற—புனலை-சலத்தை—நீந்தி - கடந்து— போக்கரிதென்ன- போகக்கூடாதென்று—நின்றன்-இருந்தான்—(எ-று) (கருத்து) சனிபகவான் நளன் பிராமணர்களுக்குத் தித்தம்பண்ணுநீரை நீந்தி ப்போகக்கூடாமனின்றன் என்பதாம். (ஙூ)

கலிவலானெருவன்பொய்மைகட்டினையாடலேக்கிக், கொலை பழுத்தொழுதுநெஞ்சங்குழைந்தனன்மகிழ்ந்துசெல்வா...

னலர்முலைசுமக்கலாற்றுவையறுண்மருங்குற்பேதை... ... *
புலவிதீர்ப்பதற்குக்கூறும் பொய்யெனப்புலர்ந்துபோனான்.

(இ-ள்) கலிவலானெருவன்- விதிதையில்வல்லவனெருவன்—பொய்மை-பொய்ச்சொல்லை—கட்டுரையாடல்- உறுதிமொழியாகச்சொல்லுதலை—நோக்கி-அறிந்து—கொலை-கொல்லுதல்—பழுத்தொழுகுநெஞ்சம் - முதிர்ந்துபெருகுதின்மனம்—குலைந்தனன்-குலைந்தனனாய்—மகிழ்ந்து-சந்தோஷித்து—செல்வான்-போகின்றகலியானவன்--அலர்-பரந்த—முலை-ஸ்தனங்களை—சுமக்கலாற்று-சுமக்கமாட்டாத—ஐயம்-சந்தேகத்தைத்தரும்—துண்- துட்பம்பொருந்திய—மருங்குல் - இடையையுடைய—பேதை- மடந்தையது—புலவி-பிணக்கை—தீர்ப்பதற்கு- போக்குதற்கு—கூறும்-சொல்லும்—பொய்யென-பொய்யென்று--புலர்ந்து-மனம்வாடி—போனான்-போயினான்—(எ-று) (கருத்து) கல்வியில்வல்லோன்பொய்சொல்லுதலைகண்டுசெல்லுஞ்சனியபகவான் மாதர்பிணக்கைத்தீர்க்கும்பொய்யென்றுவாடிப்போனான்எனபதாம். (உ)

கடிமனையிடங்கடோறுங்கற்புடைமகளிரீட்டங்..... .....*
கொடிநெடுவீதியெல்லாங்கடவுளர்விழவுதுன்று .. .. *
நெடியபிகானமுற்றுந்துறந்துளோர்தெருக்கம்யாண்டும் ...*
மடியிடலறிதென்றெண்ணியல்லுற்றகன்றுபோனான் ... *

(இ-ள்) கடி-காவலையுடைய—மனையிடங்கடோறும்-வீட்டினிடங்களெல்லாம்—கற்புடை- பதிவிரதத்தில்லமபொருந்திய—மகளிரீட்டம்-மாதர்கூட்டங்கள்—கொடி-கொடிகளையுடைய—நெடும்-நீண்ட-வீதியெல்லாம் - தெருக்களனைத்திலும்—கடவுளர்விழவு தேவர்திருவிழா—துன்றும்-நெருங்கியிருக்கும்—நெடி - சிள்வண்டுகள்—படி-உண்டாகிய—கானமுற்றும்- காடுமுழுவதும்—துறந்துளோர்-முனிவர்களுடைய—நெருக்கம்-கூட்டங்களுள்ளன (ஆதலால்)யாண்டும்-எவ்விடத்தும்—மடியிடல் - அடியெடுத்துவைத்தல்—அரிதென்று-அருமையென்று—எண்ணி-நினைத்து—அல்லலுற்று-துன்பமுற்று—அகன்றுபோனான்-நீங்கிப்போயினான் (எ-று) (கருத்து) மனைகளெங்குங்கற்புள்ளமாதர்கூட்டத்தாலும், வீதியெங்குந்தேவர்திருவிழாவாலும், காடெங்குமுனிவர்கூட்டத்தாலும், அடிவைக்கவிடமில்லையென்று சனியன்போனான், எ-ம். (ஊ)

இந்தகர்வமாப்பில்யாண்டுமெய்துதற்கரிதெல்லென்ணிச் *
சென்னிவான்றடவுதெப்வச்செழுமலர்ச்சோலைபுக்கு.....*
மன்னவனிழைக்குந்தீமையாதெனமனத்திலுய்த்து .... *
துன்னருந்தான்றிமீதிற்சூழ்ச்சியேழருக்குநாவில .. ... *

(இ-ள்) இந்தகர்-இந்தநகரினுடைய—வரைப்பில்-இடத்தில் —யாண்டும்-எவ்விடத்தும் —எப்துறற்கரிதென்றெணணி-போகு தற்குக்கூடாதென்று நிலைத்து —செல்லி-சூலியான து —வாள்நட வும் - ஆகாயத்தைவளாவுகிற —தெய்வ - தெய்வீகமாகிய—செழு ம்-செழித்த —மலர் புனிதத்தையுடைய—சோலைபுக்கு-சோலையை யடைந்து —மல்லல்வல்-நளமஹாராஜன் —இழைக்குநீண்டை-செ ய்யுங்குற்றம் —யாதெனஎதுவென்று —மனதிற்றோன்ற - மனதி லாராய்ந்து —துல்லாநரும்-சேரப்படாது—தான்றிபீதில்-தான்றியி ருக்குந்தின்பீது —சூழ்கிலையோ-ஆலோசியாமலே—இருக்குமா ரில் இருக்கின்றகாலத்தில்—(எ-று) தான்றி- நிஷிதிக்கும்-(கருதுது) சலிபகவான் சோலையிற்புகுந்து நளன்செய்யுந்தீமையெல்லாவென் றுநினைத்துத்தான்றிமரத்தில்மேலிருக்கின்றகாலத்தில் என்பதாம்.

கலித்தொன்றுபடலம்-முற்றிற்று.

இளவேனிற்படலம்.

இப்படலத்தால் பற்பலலீலைக்குரிய இளவேனிற்காலத்தினது பிறப் புச்சொலலப்படுகின்றது.

(கலிநிலைத்துறை.)

நமதுசெங்கரங்களேயினைகமுகவிருந்துசெய்யங்.....
கமலநாண்மலராவரட்டும்பனியினைமுழுதுங்காய்வா .....
னிமயமால்வரையின்வெம்பேர்க்கெழுந்தனலுலகப்போர்த்த
நிமிரமேற்றுலவுமெய்யோன்செல்றனலியவடபால்மீளும்.

(இ-ள்) நமது-நம்முடைய—செங்கரங்கள்-கிரணங்க ள்—தோயில்-விபாருந்தினால்—நகை-பிரகாசியாநின்ற—முகம் -முகத்துடனே—விருந்துசெய்யும்-விருந்துசெய்யாநின்ற—காமன் ம்-தாமரையினது—நாள்-புதிய—மலர்-புஷ்பத்தை--வாட்டம் வாடப்பண்ணும்—பனியினை-பனியை—முழுதும்-முழுமையும்-- காய்வான்-அழிக்கும்பொருட்டு—இமயமால்வரையின் - இமய பர் வதத்தில்—வெம்பேர்க்கெழுந்தன-வெவ்வியதாகியபுதுத்தழற்செ

தீதவன்போல—உலகம்போர்த்த - உலகத்தைமூடிய—திமிரமேய்த்து-இருளையுண்டு— உலவும்வெய்யோன்- உலவுகின்றசூரியன்—வடபால்-வடதுபக்கத்தில்—சென்றனன்-போயினன்--(எ-று)மன்-ஓ-அசைகள்-உத்தராயநம்-பிறந்ததென்பதாம்- காய்வான்- எழுந்தென-என்றல் தற்குறிப்பணி- (கருத்து) சூரியன்உத்தராயநமாயினன் என்பதாம். (க)

இன்றுணைக்கணவர்நீங்கியிடருறுமடவார்சோர.....*
மன்றலிற்*கொழுநர்ப்பல்லுமடந்தையர்மகிழ்ச்சிகூர .....*
குன்றிடைப்பிறந்ததென்றற்கொழுந்துமுன்போர்த்தசேமா ... *
மென்றளிர்ப்பேர்வையேர்த்துவேனில்வந்திறுத்ததன்றே..... ‡

(இ-ள்) இன்றுணை- இனியதுணையாகிய—கணவர்- கொழுநரை—நீங்கி-பிரிந்து—இடருறும் - துன்பத்தையடைகின்ற—மடவார்-மாதர்கள்—சோர-சோர்வையடையவும்—மன்றலில்-விவாகத்தின்கண்—கொழுநர்ப்புல்லும்-கணவனைத்தழுவும்—மடந்தையர்-மாதர்கள்—மகிழ்ச்சிகூர-மகிழ்ச்சியையுடையவும்—குன்றிடைப்பிறந்த-பொதியமலையிலுற்பவித்த--தென்றற்கொழுந்து-இளந்தென்றற்காற்றை—முன்-முன்னே—போர்த்த-போர்த்துக்கொண்ட—சேமா-நித்திப்புப்பொருந்திய மாமரத்தினது--மென்றளிர்-மெல்லியதளிரானது— பேர்வைபோர்த்து-வஸ்திரத்தைப்போர்த்து—வேனில-வேனிற்காலமானது—வந்திறுத்தது-வந்துதங்கியது—(எ-று)அன்று-ஏ-அசைகள். * அகத்தியம் ஞாயிடைக்கிளவி நண்ணுமுளவே-(கருத்து) நணந்தவர்துன்புற மணந்தவரின்புற வேனிற்காலம்வந்ததுஎ-ம். (உ)

களிறுபிரித்தலருமுல்லைக்கழுமுகைமுறுவலேர்ன்ற... ... ...*
வள்ளிதழ்க்குவளையுண்கண்மலர்ந்தமாந்தளிர்மெல்லைகையாக்
கிள்ளைமெல்குதலைசாற்றிக்கினைகொளிவண்டுபாணித்... ... *
தெள்ளிளிபாடவேனிற்பெருமகள்சிறந்தாளன்றே.. ... ...*

